
கல்கி



KALKI

7-10-1962

30

நம் தேவிகாவிடமிருந்து மலரும் இரகசியம்:

'எந்நாளும் எனதழகைக் காப்பது

லக்ஸ்!'



தேவிகாவின் இரகசியத்தை
நீங்களும் பகிர்ந்துகொள்ளலாம்...
தேர்ந்தெடுங்கள் லக்ஸ்...
பூப்போன்ற நுரையினால்
புதுமெருகிடும் லக்ஸ்...
இணங்கி மணமோங்கும் லக்ஸ்...
தேர்ந்தெடுங்கள் லக்ஸ்... வான
வில்லின் வண்ணவகைகளிலும்
நேயமிகு வெண்ணிறத்திலும்
தேர்ந்தெடுக்க வாகான லக்ஸ்...
உமதெழிலுக்கு உற்றதுணை
லக்ஸ் டாய்லெட் சோப்...

சினிமா நட்சத்திரங்களின் தூய,
மெல்லிளம் அழகுசாதன சோப்



'உள்ளங் கவரும் சோப்புக்கே கொள்ளைகொள்ளும் வண்ணங்களாம்!'
என்கிறார் எழிலரசி தேவிகா

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 124-X52 TM



அழகு மலர்க்கு மணம் வீச
வரம்
பவுடர்
Aykan

AIYARS KPD

கபகிருது புரட்டாசி 21உ

கல்கி

அக்டோபர் 7, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர்நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் சுணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.



பனாமா

ஒரு நல்ல சிகரெட்— இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் ஒ மிகப் பெரியது.

GT. 709-A.TM

Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 10

ஆயுத பூஜை

தொழிலாளிகளும், கலைஞர்களும் தாங்கள் உபயோகிக்கும் கருவிகளையும், வாத்தியங்களையும், நூல்களையும் வழிபடும் சரஸ்வதி பூஜைக்கு ஆயுத பூஜை என்று பெயரிட்டிருக்கிறோம்.

ஆயுதம் என்பது பொதுவாகப் படைக்கலத்தைத்தான் குறிக்கும். உலக சமாதானம் சிதைபுண்டுள்ள இன்று, போர்க்கருவிகளை எதற்காகப் போற்றி வழிபட வேண்டும் என்ற சிந்தனை எழுவது இயற்கையே. ஆனால் ஆயுத பூஜை தோன்றிய பண்டைக்காலத்துக்கும் இன்றைக்கும் இடையே பெருத்த பல மாறுபாடுகள் உள்ளன. அன்று யுத்தங்களில் இருபுறத்து வீரர்கள் மட்டுமே மாண்டது போலன்றி, இப்போது நிராதரவான மக்களும் யுத்த அரக்கனுக்குப் பலியாகும் கொடூரம் ஏற்பட்டுள்ளது. முற்காலங்களில் உபயோகித்த படைக்கலங்களைப் போல் பல்பல மடங்கு கொடியதான அசுர ஆயுதங்கள் இன்று உருவாகியுள்ளன. முன்பெல்லாம் போர்க்களத்தில் எதிர்ப் படை வீரர்களை மட்டும் தாக்கும்படி அம்பு எய்ததற்குப் பதிலாக இப்போது எந்தத் தேசத்துக்கும் பாயக்கூடிய ஏவுகணைகளைத் தயாரித்திருக்கின்றன வல்லரசுகள். இவை தமது இலக்கை அடையாமல் நடுவேயுள்ள நடுநிலைமை நாடுகளில் வெடித்துப் பெருத்த உயிர்ச்சேதங்களை விளைவித்தாலும் கேட்பாரில்லை. இந்த ஆயுதங்களை விண் வெளியிலே பரீட்சித்துப் பார்ப்பதனாலேயே போர் மூளாத நிலையிலும் மக்கட் குலத்துக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணுகுண்டு சோதனை நடைபெறும்போதும் நாம் சுவாசிக்கும் காற்றும், வாழும் மண்ணும், உண்ணும் உணவும், பருகும் நீரும் நச்சு மயமாகி வருகின்றன. நமது உடல் அணுக்களே விஷமாகி வருகின்றன. நமக்குப் பின் தோன்றப் போகும் தலைமுறைகள் எல்லாம் இந்த விஷத்துடனேயே பிறந்து கொடூரமான நோய் நொடிகளுக்கு ஆளாவர் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இந்த நிலையை எண்ணிப் பார்க்கும்போது, அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும் அச்சமில்லாதபடி வாழப் பராசக்தியைப் பிரார்த்திக்கும் கவி வாக்குதான் நினைவு வருகிறது. பராசக்தி என்ற அந்த அன்புத் தத்துவமே அனுப்பி வைத்தது போல நவராத்திரித் திருநாட் காலத்தில் ராஜாஜி அவர்கள் வல்லரசுகளைச் சந்திக்கச் சென்றிருப்பது ஆறுதல் அளித்து நம்பிக்கை ஊட்டுகிறது.

நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் என்று முதலில் தர்மசிந்தனையைச் சொல்லி, பிறகு வீரத்தைப் பாராட்டிப் பாடினார் கவி. இன்று வல்லரசுகள் புரிந்துவரும் அணு ஆயுத சோதனைகள் வீரத்தில் பிறந்தவையல்ல. தன்னைவிட எதிராளி பலவானோ என்ற பயத்தில் பிறந்ததே இந்த அணுகுண்டு சோதனை. இச்சோதனைகளால், குளிர்ப் போரில் சம்பந்தப்படாத மக்களையெல்லாம் வாட்டி வதைக்க வல்லரசுகளுக்கு யார் அதிகாரம் அளித்தார்கள் என்பதுதான் புரியவில்லை.


இந்த உண்மையை எடுத்துச் சொல்லி, தீமை செய்வோர் நெஞ்சில் நீதி என்ற தீபத்தை தூண்டி விடவே ராஜாஜி அயல்நாடு சென்றிருக்கிறார். தாம் எடுத்துக் கொண்டுள்ள பணியைப் புறப்படுவதற்கு முன்பு ரத்தினச் சுருக்கமாகக் கூறினார் ராஜாஜி.

'அமெரிக்காவிடமிருந்து ஏதோ தயவுகளைக் கோரிப் பெறுவதற்காக நான் செல்லவில்லை. மனித குலத்தின் உரிமையை எடுத்துரைக்கவே நான் செல்கிறேன். நம் மக்கள் யாவரும் - நமது பெண்டிர், பாலர் அனைவரும் இறைவன் அளித்துள்ள தூய சூழலில் வாழ உரிமை பெற்றவர்கள். அணு ஆயுத விஷக் கதிரியக்கத்தால் அந்தச் சூழலை மாசுபடுத்தக் கூடாது என்று கூற நமக்கு உரிமையுண்டு. மனக் கொதிப்பு அடைந்துள்ள இரு நாடுகளி டையே நட்பையும், நன்னம்பிக்கையை யும் ஏற்படுத்தத் தனியொரு மனிதனுன எனக்குச் சக்தி கிடையாது. எனினும் நாமும், நம் பெண் — பிள்ளைகளும், பேரன் — பேத்திமாரும் விஷ மய மாகாத சூழலில் வசிக்க உரிமை பெற்ற வர்கள் என்று நான் எடுத்துக் காட்ட முடியும்' என்பதே அவர் கூறியுள்ளதன் சாராம்சமாகும்.

இன்றைய வல்லரசுகளின் பிடிவாத மனப்போக்கு உலகம் அறிந்ததுதான். இதனுல்தான் 'ஐ. நா. சபை சாதிக் காததை நான் செய்ய முடியுமா?' என்று கேட்கிறுர் ராஜாஜி. 'என்னு டைய நோக்கத்திலுள்ள நீதியை எண்ணும்போது எனக்குத் தெம்பு ஏற் படுகிறது. எனினும் நான் எவ்வளவு சிறியவன் என்பதை நினைக்கும்போது தளர்ச்சி காண்கிறேன்' என்றும் கூறு கிறுர் அடக்கத்தை அணிகலனுகப் பூண்ட நம் அன்புத் தலைவர்.

மகாமேரு பர்வதத்துக்கு ஒப்பான அறிவுத் திறன் பெற்றவர் ராஜாஜி. மண்ணில் நடமாடும் அறத்தின் உருவே ராஜாஜி. என்ருலும் அறிவின் குரலுக்கு, அறத்தின் குரலுக்கு வல்லரசுகள் எவ் வளவு தூரம் செவி சாய்க்கும் என்று நாம் நிச்சயமாகக் கூற இயலாது.

'இது ஆண்டவன் கையிலுள்ள விஷய மாகும்' என்று ராஜாஜி கூறியுள்ளதற் கேற்ப ஆண்டவன் அருளைத் தான் இன்று நாம் நாடி நிற்கிறேம். தெய்வம் மானுட உருவில் தான் நன்மை புரியும் என்ற ஆன்ருேர் வாக்குக் கிணங்க, ஆண்டவனின் ஆயுதமாகவே ராஜாஜி மேநாடு சென்றுள்ளார் என்று நாம் எண்ணுகிறேம். இவ் வருட ஆயுத பூஜை அணு ஆயுதங்களைப் பயனற்றுப் போகச் செய்யும் நன்னுளாக அமைய வேணுமென அன்னைத் தெய்வத்தை வேண்டுகிறேம். நூலைப் பயன்படுத் தாத போது 'புத்தகத்துக்கு என்ன சரஸ்வதி பூஜையா?' என்று நாம் கேட் பது போலவே வல்லரசுகளிடமும் 'என்ன ஆயுத பூஜையா?' என்று வேடிக் கையாகக் கேட்கும் பொன்னுள் உதய மாக வேணுமெனப் பிரார்த்திக்கிறேம்.



ஊர் வம்பு



PK
"எங்கே நம்ம வட கிழக்கு எல்லை?"
கிட்ட இருந்தால் தொல்லை எட்ட இருந்தால் இல்லை
ஐ.நா
மின்னுவதெல்லாம் பொன் தானே?
லால்பகதூர் சாஸ்திரிக்கு ஆபத்து
ஹிந்தி
வெறியர்கள்
மூன்றாம் திட்டத்தில் டைப்ரைட்டர்கள் உற்பத்தி அதிகரிக்கப்படும்
முதலாளிகளை மடக்கப் பெர்மிட்–லைசென்ஸ்: எதிர்க் கட்சித் தலைவரை மயக்க கவர்னர் பதவி!
பஞ்சாப் கவர்னர்
PK

என்ன சேதி?

வோட்டர்களுக்கு எச்சரிக்கை

பஞ்சாப் ராஜ்யத்துக்கு கவர்னராகச் செல்ல முதலில் ஒப்புக் கொண்ட சிக்கபளாப்பூர் தொகுதி லோகசபை அங்கத்தினரும் மத்திய அமைச்சருமான ஸ்ரீ கே. வி. ரெட்டியை மந்திரியாகவே தொடர்ந்து இருக்கச் செய்து விட்டது காங்கிரஸ் கட்சி. காங்கிரஸின் தந்திரம் அதோடு நின்றுவிட்டிருந்தால் பரவாயில்லை. புறமுதுகு காட்டி ஓடும் ஒரு கட்சி தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஏதோ யுக்தி செய்தது என்று நினைத்து விடலாம். காங்கிரஸோ அதோடு நில்லாமல் பஞ்சாப் கவர்னர் பதவியை ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளையை ஏற்றுக் கொள்ளும்படி செய்தது அரசியல் துறையில் மிகவும் கண்ணியமற்ற செயலாகும். ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை கேரள பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் தலைவராவார். காங்கிரஸுடன் கூட்டு மந்திரி சபை அமைத்தபின்னும் தமது கட்சியின் பலத்தைப் பரீட்சை செய்து பார்ப்பவர் அவர். எதிர்க் கட்சித் தலைவரைப் பதவி ஆசை காட்டிக் கட்சியை விட்டு விலகச் செய்து அக் கட்சியின் பலத்தைக் குலைப்பது இழிவான செயலாகும். பழுத்த அரசியலாளர் ஒருவர் இம் மாதிரி காங்கிரஸின் சூழ்ச்சிக்கு இலக்காகிக் கட்சிக்குப் பலவீனத்தை உண்டாக்கியது, அதனினும் இழிவு.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி காங்கிரஸுக்கு ஓர் எதிர்க்கட்சி என்று எண்ணி வோட்டு அளித்த வாக்காளர்களுக்கு இது ஓர் எச்சரிக்கை.



ருமேனியாவின் அனுபவம்

சோவியத் ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்ட கம்யூனிஸ்டு நாடுகளில் ருமேனியாவும் ஒன்று. கம்யூனிஸ்டுக் கொள்கையில் மிகவும் முக்கியமானது என்று கருதப்படும் கூட்டுப்பண்ணை விவசாயம் இங்கேயும் புகுத்தப்பட்டது. இது எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளது - அதாவது தோல்வி கண்டுள்ளது - என்பதை "யார்க்ஷயர் போஸ்டு" என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரை விளக்கி வைக்கிறது.

விவசாயி மக்களின் எதிர்ப்புத் தீவிரமாக இருந்ததால் கூட்டுப் பண்ணை இயக்கம் வேகமாக நடைபெறவில்லை. எதிர்ப்பை முறியடிப்பதற்காக, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் விவசாயம் வெற்றிகரமாக நடைபெறவில்லை. 300 லட்சம் ஏக்கர் நிலங்களை இரண்டாவது தடவை உழுது பண்படுத்த வேண்டியிருந்தது. இதர இலாக்காக்களில் நிர்வாக வேலை செய்து வந்தவர்கள் தாற்காலிக ஏற்பாடாக விவசாய வேலைக்கும் மாற்றப் பட்டனர்; இதனால் பண்ணையாட்களிடையே கலகங்களும் குழப்பங்களும் மலிந்து விட்டன. கிராமங்களிலிருந்து நகர்ப் புறங்களை நோக்கி மக்கள் விரைவது கட்டுக்கடங்காமல் போய் விடவே, பிரத்தியேக 'பெர்மிட்'டில்லாமல் கிராமங்களை விட்டு மக்கள் போகக் கூடாது என்று அரசாங்க உத்தரவுகள் கூடப் பிறப்பிக்கப்பட்டுள்ளனவாம்.

தில்லியில் வேத சம்மேளனம்


வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபையின் ஆதரவில் இம்மாதம் 13-ந் தேதியிலிருந்து 14-ந் தேதி வரை புது தில்லியில் அகில இந்திய வேத வித்யார்த்திகள் சம்மேளனம் ஒன்று நிகழ விருக்கிறது. இந்தியா முழுவதிலுமுள்ள வேதம் போதிக்கும் ஆசிரியர்களும், பயிலும் மாணவர்களும் இதில் பங்கு கொள்வார்கள். சம்மேளனத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்களும், வித்யார்த்திகளும் விவரங்கள் பெறக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதலாம் :

ஸ்ரீ எஸ். அண்ணாதுரை அய்யங்கார், நிர்வாகக் காரியதரிசி, 12/3, மேற்கு எக்ஸ்டென்ஷன் ஏரியா, கரோல் பாக், புதுதில்லி — 5.











ராஜாஜி அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றபோது சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மக்கள் பெரும் திரளாகக் குழுமி விருந்து, அவருக்கு இதய பூர்வமாக வாழ்த்தளித்துக் கோலாகலமாக வழியனுப்பினர்; ஆசாரிய ரங்கா, சா. கணேசன், ரத்தினசுவாமி, க. சந்தானம், ம. பொ. சி., பி. டி. ராஜன், எம். ஜி. ஆர். முதலிய பல கட்சிப் பிரமுகர்களும், சகோதரி சுப்புலக்ஷ்மி உள்ளிட்ட சமூக சேவகர்களும், பல துறைப் பெரியோர்களும் இதில் கலந்து கொண்டனர். இவற்றில் சில காட்சிகளையும், அமெரிக்கா செல்ல பம்பாயில் விமானம் ஏறும் ராஜாஜியையும் இங்கு காண்கிறீர்கள்.



அறம் வளர்த்திடுக!

[இனையாற்றங்குடியில் நடைபெற்ற ஆகம, சில்ப, பாரத, வியாஸ வித்வத் சதஸின் தொடக்கத்தில் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளிய உரை]

தர்மமும் சத்தியமும் வாழ்க்கையின் குறிக்கோள்களாக இருக்கும் நிலையை ஸ்தாபிக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதன் மூலமும், பாரதம் போன்ற இதிஹாஸங்களைப் படிப்பதன் மூலமும், உள்ளும் புறமும் உள்ள குறைபாடுகளை நீக்கித் தூய்மை பெற வேண்டும். பாமர மக்களைப் பரவசப்படுத்தும் நாட்டுக் கலைகளையும், வழிவழியாக வந்துள்ள கதைகளையும் பிரபலப்படுத்தி, அவற்றின் மூலம் அறத்தின் வழி நின்று, உண்மையில் வேரூன்றியவர்களாக, நற்பண்பினராக மக்கள் வாழ்வதற்குத் துணை புரிய வேண்டிய பொறுப்பு, எல்லாப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் உண்டு.

பல்லவர்கள், சோழர்கள் முதலிய அரசர்களின் காலத்துச் செப்பேடுகளில் காணப்படும் தமிழ், சம்ஸ்கிருத எழுத்துக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. அக்காலத்திய வெண்கல விக்கிரகங்களும் முறைப்படி வார்க்கப்பட்டுச் சுத்தமாக இருக்கின்றன. தற்காலத்துடன் ஒப்பிட்டால், அக்காலத்திய மக்கள் கலைகளில் மேம்பட்டிருந்தது போலவே நம்மைவிட அவர்களின் ஒழுக்கம், சீலம் இவையும் உயர்வாக இருந்திருக்குமெனத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் நமது ஆலயங்களையும், இதிஹாஸங்களையும் நன்கு பயன்படுத்திக் கொண்டதுதான்.

கோயில்களில் பாரதம் படிக்க வேண்டும் என்று கோயில்கள் பற்றிய செப்பேடு ஒன்று கூறுகிறது.

இந்தோனீஷியாவிலுள்ள பாலித்தீவிலும் மற்ற நாடுகளிலும் பாரதம் படிக்கும் வழக்கம் இருந்தது. இந்தோனீஷியாவில் பாரதத்தைப் படிப்பதற்கும் பூஜை செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று பரோடா நூல் நிலையத்திலுள்ள ஒரு சம்ஸ்கிருதப் புத்தகம் குறிப்பிடுகிறது.

இதிஹாஸ, புராணக் கதைகள்தாம், முக்கியமாக மகாபாரதம்தான், இத்தனை நூற்றாண்டுகளாக நம்மைக் காப்பாற்றி வந்திருக்கின்றன. சத்தியம், நீதி, தர்மம் இவற்றைப் பாதுகாத்து வந்திருக்கின்றன. உன்னதமான மனிதர்களைப்பற்றிய கதை பாரதம். அதைப் படிப்பது தற்கால மனிதனுக்கும் நன்மை அளிக்கும்.

நல்லிணக்கம், நல்லெண்ணம், நல்லொழுக்கம் ஆகியன வளருவதற்குப் பாரதம் முதலிய இதிஹாஸங்களே துணை புரியும். வரவர இவற்றைப் படிப்பது குறைந்து விட்டது. மிச்சம் மீதியுள்ளதைக் காப்பாற்ற நாம் இப்போதேனும் அதிக முயற்சி எடுக்க வேண்டும். தொன்று தொட்டுச் சில விஷயங்களில் நாம் வைத்திருக்கும் மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்ற வேண்டும். சத்தியம் நிலை நாட்டப்பட வேண்டும். ஒழுங்கீனங்களை அகற்ற வேண்டும். நல்லவர்களுடன் சேர வேண்டும். இதிஹாஸ, புராணங்களைப் படிப்பதன் மூலமும் கேட்பதன் மூலமும் நல்ல சிந்தனையில் ஈடுபட வேண்டும்.

காதால் பாரதம் முதலிய நன்னூல்களை சிரவணம் செய்வதுபோலவே கண்களாலும் தெய்வ மூர்த்தங்களைத் தரிசனம் செய்ய வேண்டும். மூர்த்தி தரிசனமானது நாம் நல்ல சிந்தனைகளில் ஈடுபடுமாறு செய்கிறது. உன்னதமான கோபுரங்களையும் விஸ்தாரமான பிராகாரங்களையும் காணும்போதே பரந்து விரிந்த இந்த உலகையெல்லாம் படைத்த பரம்பொருளின் நினைவு உள்ளத்தில் நிறைகிறது. ஆத்மானுபூதியாகிய மோட்சம் என்ற பெரிய இலட்சியத்துக்கு இல்லாவிடினும், நன்னெறிகளைக் கடைப்பிடித்தொழுகவும் இத்தகைய பரம்பொருள் நினைவு அவசியமாகும். எனவே, ஆலயங்களுக்குத் திருப்பணி செய்து, அவற்றில் தெய்வ சாந்நித்யம் கமழுமாறு செய்ய வேண்டும்.

முன் காலத்தில் சொத்துரிமைகளுக்காகவோ, சொந்த உரிமைகளுக்காகவோ சண்டை நடைபெற்றதில்லை. இப்போது புறத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், உள்ளத் தூய்மையைச் சீரழித்து விட்டது. எனவே, ஆலயத்திலுள்ள கலைச் செல்வங்களையும், பூஜைகளையும், அதனுடன் சம்பந்தப்பட்டவர்களையும் பாதுகாப்பதும், பேணி வளர்ப்பதும் அவசியமாகும்.

தர்மம் நிலைக்க வேண்டும். சத்தியம் ஜயிக்க வேண்டும். தேர்தல்களில் வஞ்சனைழல்கள் இல்லாமலும், வியாபாரத்தில் சூது இல்லாமலும் நேர்மையாக நடக்கும்படி ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு ஸ்வாமி தரிசனமும், தர்ம நூல்களைப் படிப்பதும் கேட்பதும் மிகவும் அவசியமாகும். இவற்றால் ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள அழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டும். அதே போல் மற்றவர்களிடமுள்ள குறைபாடுகள் நீங்கவும் பாடுபட வேண்டும்.

கலை வழியே கடவுள் காட்சி



> **சோதகன்ற தொழிலுடைத்தாகிக்**
> **குலவு சித்திரம் கோபுரம் கோயில்**
> **சதனத்தின் எழிலிடை உற்றாள்**

என்று பராசக்தியாகிய பாரதியைப் பாடிப் பரவுகிறார் மகாகவி பாரதியார். நம்முடைய கலைகளுக்கு நிலைக்களனாகவும், கலைவாணிக்கு உறைவிடமாகவும் திகழ்பவை நமது ஆலயங்கள். இந்தக் கலைகளின் உட்பொருளும், இலட்சியமும் கடவுளே என்பதை அறிவுறுத்துபவை தாம் இவ்வாலயங்களில் நாம் வழிபடும் தெய்வ வடிவங்கள். கல்லைக் கனிவித்துக் கலைப் பொருளாக்கிக் கோயில் நிர்மாணம் செய்யும் திருப்பணியைச் சிற்ப சாஸ்திரத்தின் விதிமுறைகளுக்கிணங்க ஆற்றி, கலையால் காலம் கடந்தவர்களின் வழி வந்தவர்கள் நாம். அங்கு பிரதிஷ்டை செய்யும் தெய்வத் திருமூர்த்தங்களைச் செதுக்கவும், வார்ப்பு செய்யவும், பிரதிஷ்டை ஆனபின் அவற்றை ஆராதிக்கவும் உரிய முறைகளைப் பல ஆகமங்களாக வகுத்துத் தந்திருக்கிறார்கள் மகான்கள் பலர். ஆகமங்களின் வழி ஒழுகி சாஸ்திரீயமான முறையில் கோயில் நிர்மாணமும், இறை வழிபாடும் நடைபெற்று வந்தபடியால்தான் இன்னமும் நம் ஆலயங்களின் புகழும் பயனும் அடியோடு மங்காமல் இருந்து வருகின்றன.

எனினும் இந்தப் புராதனமான ஆலயங்களுக்கு ஏதேனும் பழுது நேரிட்டால் அவற்றை முறைப்படி புதுப்பிக்கக் கூடிய சிற்ப சாஸ்திர அறிஞர்கள் நம்மிடையே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? ஆகமங்களில் விதித்த ஆராதனை முறைகளை நன்கறிந்து பூஜை செய்யும் அர்ச்சகர்கள் அடுத்த தலைமுறைகளில் கிடைப்பார்களா? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நமது கலைகளை மலர்வித்த சிற்ப சாஸ்திரமும், அந்தக் கலை வழியே பெரும் பக்தியை வரையறை செய்து ஒழுங்காக வளர்க்கும் ஆகமங்களும் எதிர்காலத்தில் என்ன கதி ஆகும்? கலைத் தெய்வமாகிய சரஸ்வதியின் ஆராதனை இனி என்ன ஆகும்?

இந்த வினாக்களெல்லாம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய சந்திரசேகரேந்திர சரஸ்வதியின் உள்ளத்தில் எழுந்தன. இந்த வினாக்களுக்கு விடையாக எழுந்தது ஒரு பெரு விழா. அதற்குக் 'கல்வி' நேயர்களை இந்த சரஸ்வதி பூஜை இதழிலும், அடுத்த இதழிலும் அழைத்துச் செல்கிறோம்.

ஆண்டுதோறும் ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் சாதுர்மாஸ்ய விரதத்தின்போது வித்வத் சதஸ் நடைபெறுவது வழக்கமாகும். வேதாந்த சித்தாந்த விற்பன்னர்கள் யாவரும் அப்போது அறிவு வழியே ஆத்மாவை அடைவது பற்றி விவாதங்கள் நடத்துவர். இந்த ஆண்டு அந்த வித்வத் சதஸுக்குப் புதியதொரு வண்ணம் ஊட்டி விட்டார் ஸ்ரீ பெரியவர்கள்.

அறிவு என்பது மனிதனின் ஒரு பகுதி தான். உணர்வுக் கோவையாகிய இதயமும் படைத்தவன் மனிதன். அறிவை அடிப்படையாக வைத்து எழும் வாதப் பிரதிவாதங்களைவிட, இதயத்தில் எழும் உணர்ச்சிகளை மையமாகக் கொண்ட கலைகள்தாம் மானுட வர்க்கத்தில் பெரும்பான்மையினரை ஈர்ப்பதாகும். அறிவால் கிரகிக்கும் பரம் பொருள் தத்துவத்தைப் பெரும்பாலான மக்கள் தம் இதயம் பொழியும் அன்புக்கு இலக்காகும் மோகன மூர்த்திகளாகத்தான் புரிந்து கொள்கிறார்கள். இதற்கு நமது ஆலயங்கள் உறுதுணை புரிகின்றன. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று பழமொழியே உள்ளதே! அதோடு ஆண்டவனைக் கதைகளாலும், கானத்தாலும், கூத்தாட்டத்தாலும் நினைவுபடுத்திக் கொண்டு பக்தி புரிந்து வந்திருக்கிறார்கள், மக்கள். கிராமவாசிகளும்கூடத் தங்கள் கலையுணர்ச்சிக்கும், இறையுணர்ச்சிக்கும் ஏற்பப் பலவிதமான சடங்குகளாலும், ஆட்ட பாட்டத்தாலும் ஆண்டவனை வழிபடுகிறார்கள். நீண்ட நெடுங்காலமாக நமது நாட்டின் நாலு பகுதிகளிலும் இவ்வாறு பல மரபுகள் உருவாகியுள்ளன.

நமது நாட்டில் உருவானதோடு இந்த மரபுகள் நின்றுவிடவில்லை. நம் நாட்டைக் கடந்து இந்தோ சைனா, இந்தோனீஷியா, கம்போடியா, தாய்லந்து, பாலி போன்ற தூரக்கிழக்கு நாடுகளிலெல்லாம் அவை பரவியுள்ளன. இந்திய மன்னர்களின்—குறிப்பாகத் தமிழக மன்னர்களின் – ஆட்சி கடல் கடந்த



இரு பெரியவர்களும் எழுந்தருளிய காட்சி.

போது நமது மரபுகளும் கடலைத் தாண்டிச் சென்று அந்நிய நாடுகளில் பரவின. பின்னர் அந்நாட்டு ஆதிபத்தியமும், நாட்டு மக்களின் மதமும் மாறிய போதிலும் பண்டைய பாரத நாகரிகத்தின் மணம் மட்டும் முற்றும் மறைந்து விடாமல் இன்றும் அங்கெல்லாம் கமழ்ந்து கொண்டே யிருக்கிறது.

ராஜரீகமான முறையில் நமது நாட்டு ஆஸ்திக சம்பிரதாயங்கள் வெளிநாடுகளில் பரவிய காலம் முடிந்து விட்டது. ஆனால் ஆத்மீகமான முறையில் அவை இன்றும் பல வெளிதேச மக்களைக் கவர்ந்திருக்கின்றன.

இவ்வாறு உணர்ச்சிகளின் மூலம் உலகை ஒன்றாக்கி இறைவனிடம் செலுத்தும் நமது ஆகமங்களுக்கும், மந்திர தந்திர சாஸ்திரங்களுக்கும், பாரதம் முதலிய இதிகாச, புராணக் கதைகளுக்கும், பொது மக்களின் களியாட்டங்களுக்கும், சிற்பக் கலைக்கும் இந்த ஆண்டு சதஸில் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென எண்ணினார்கள் ஸ்ரீ ஜகத்குரு. முன்பு பாரத சம்பிரதாயம் பரவிய இதர நாட்டின் பிரதிநிதிகளும், அம்மரபால் இன்றும் ஆகர்ஷிக்கப்பட்டுள்ள அந்நிய தேச அறிஞர்களும் நம் நாட்டு மக்களோடு சேர்ந்து நின்று நமது புராதனச் செல்வங்களின் பெருமையை எடுத்துரைக்க வேணுமென ஸ்ரீ பெரியவர்கள் விரும்பினார்கள். அதன் பயனாகவே சென்ற செப்டம்பர் மாதம் பதின்மூன்றும் தேதியிலிருந்து இருபத்துநாலாம் தேதி வரையில் இளையாற்றங்குடியில் ஆகம, சிற்ப, பாரத, வியாஸ, வித்வத் சதஸ் நடைபெற்றது.

பரம்பொருளைப் பல கோணங்களில், பல மூர்த்திகளாகக் கண்டு அநுபவித்த நம் முன்னோர் பல வழிபாட்டு முறைகளை நமக்கு அளித்துச் சென்றிருக்கிறார்கள். இவை யாவற்றையும் ஒரு மேடையில் கூட்டி சமய சமரஸத்தை வளர்க்கவும் இந்த சதஸைப் பயனுள்ளதாக்க கொள்ள ஸ்ரீ பெரியவர்கள் திருவுளம் கொண்டார்கள்.

கலையின் மூலம் கடவுளை நாடச் செய்தல், இன்று நாம் வாழும் அறமற்ற குறைவாழ்விலிருந்து அமரத்துவ நிறை வாழ்வுக்கு அடிகோலுதல் ஆகியனவே இந்த சதஸின் நோக்கம் என அவர்கள் கூறியுள்ளார்கள். பெரியவர்களின் சங்கல்ப விசேஷத்துடன் இவ்வளவு பெரு நோக்கினையும் கொண்ட சதஸ் திருவிழாவாக நடந்தேறியதில் வியப்பென்ன?

ஒன்பதே நாட்களில் ஆயத்தம் செய்து பன்னிரண்டு நாட்களுக்கு ஜாம் ஜாம் என்று ஓர் உற்சவம் நடத்துவதெனில் அதனை ஓர் அற்புதம் என்றுதானே கூறவேண்டும்? அத்தகைய அற்புத விழா இளையாற்றங்குடியில் செப்டம்பர் 13-ந் தேதியிலிருந்து பன்னிரு நாட்கள் நடந்தேறிய சதஸ்.

ரமணீயமான இளையாற்றங்குடி கிராமம் விழாக் கோலம் பூண்டு விட்டது. இயற்கை அன்னையும் அன்பு நிறைந்த மனத்தோடு அங்குள்ள நீர் நிலைகளை யெல்லாம் நிரப்பி எழில் கூட்டியிருந்தாள்.

பிரதிநிதிகள் தங்க முகாம்கள் ஏற்பாடு செய்து, சதஸ் நடைபெற வசதியான பந்தலும் போட்டாயிற்று. இந்தியாவின் எந்தெந்தப் பகுதியிலிருந்தெல்லாமோ, வெளிநாடுகளிலும் எங்கெங்கிருந்தெல்லாமோ, சதஸில் பங்குபெறுவதற்காகப் பிரதிநிதிகள் வந்து கூடினர். இளையாற்றங்குடி கலையாற்றங்குடியாயிற்று. காலையில் ஆராய்ச்சி விவாதங்கள், பகலில் உரைகள், இரவு கலை

சதஸ் கூடியிருக்கிறது. பெரியவர்கள் நடவடிக்கைகளை ஆர்வத்துடன் கவனிக்கிறார்.



நிகழ்ச்சிகள் என்று திட்டமிட்டுப் பிரதிதினமும் இவ்வாறே நடந்தேறியது.

ஆலவட்டம், கருட்டி முதலிய அலங்காரப் பொருட்களால் அணி செய்யப் பெற்றிருந்த அழகிய கொட்டகையில் செப்டம்பர் 13-ந் தேதி பிற்பகல் கலைஞர்கள் குழுமிவிட்டனர்.

ஆய கலைகள் அறுபத்து நான்கும் சென்று முடியும் ஞானமலையாக ஸ்ரீ பெரியவர்கள் புலித்தோலாசனத்தில் வீற்றிருக்க, இளவேந்தர் போல் ஸ்ரீ புதுப் பெரியவர்களும் அவர்கள் அருகே இனிது அமர்ந்திருக்க மூன்றரை மணிக்கு விழா தொடங்கியது.

மறைந்து போன கலைகளுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்பதை முழக்குவது போல் தூய சங்கத்தின் கம்பீரமான நாதத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. திருவாரூர் மகாலிங்கக் குருக்கள் சங்கவாத்தியத்தில் கணபதி கீர்த்தனம் இசைத்தார். சங்குடன் பொருத்திய குழலில் ஸ்வர பேதங்களை இசைக்கத் துவாரங்களில்லாததால், வாசிப்பவர் தமது சுவாசகோசத்தை இயக்கும் விதத்திலேயே இசை எழுப்ப வேண்டிய கடினமான கருவி இது. பின்னர் வேத மந்திரங்கள் கூறப்பட்டன. ஓதுவாமூர்த்திகள் பஞ்சாக்ஷர, அஷ்டாக்ஷரப் பாசுரங்களை ஓதினர். அதன் பிறகு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் மகாநாட்டுக்கு ஆசி கூறினார்கள். இதனையே இவ்விதழில் தனிக் கட்டுரையாகக் காண்கிறீர்கள்.

அதனை அடுத்து வரவேற்புக் குழுத் தலைவர் ஸ்ரீ சா. கணேசன் அவர்கள் இப்பயன் மிக்க மாநாட்டை நடத்தத் திருவுளம்மலர்ந்த ஸ்வாமிகளுக்கு வணக்கம் தெரிவித்தும், பிரதிநிதிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் நல்வரவு கூறியும் வரவேற்புரையாற்றினார். டாக்டர் வே. ராகவன் அவர்கள் இம்மகாநாட்டின் நோக்கம் ஆகம, சிற்பத் துறைகளிலும், நாட்டு முறைப்படி உத்ஸவங்களில் புராணப் பிரசங்கம் செய்வதிலும் ஏற்பட்டிருக்கிற தளர்வை நீக்கி ஊக்க மூட்டி ஆக்கம் அளிக்க வழி வகை காண்



முத்திரையால் வேதத்தை விளக்கும் நம்பூதிரிகள்

பதே என்று எடுத்துரைத்தார். கீழ்த் திசை எங்கணும் ராமாயண சிற்பங்களும், நாடகமும் பரவியிருந்ததை அவர் விளக்கினார். கம்போடியாவில் சோமசர்மன் என்ற மன்னன் பாரத பிரவசனத்துக்காகக் கட்டளையே ஏற்படுத்தியிருந்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பாண்டிச்சேரி இந்தியத் தத்துவ ஆராய்ச்சிக் கழகத் தலைவரும் பிரெஞ்சுக்காரருமான டாக்டர் ஜா பில்லியோஸா ''தாய்லாந்து ஜாவா முதலிய நாடுகளில் இந்திய ஆகம சிற்பங்களின் வளர்ச்சி'' என்ற பொருள் பற்றி விளக்கப் படங்கள் வரைந்து காட்டி அரியதோர் உரையாற்றினார். நமது நாட்டுச் சிற்பங்கள், அதிலும் ராமாயணக் கதை, முழுவதுமே அந் நாடுகளில் சிற்பமாக இலங்குவதை அவர் எடுத்துக் காட்டினார்.

சாக சகாப்தத்திலிருந்தே இந்தோசீனாவிலும் இந்தோனேஷியாவிலும் இந்திய நாகரிகம் பரவியுள்ளது; அதிலும் முக்கியமாகத் தென்னக நாகரிகம் பரவியுள்ளது என அவர் குறிப்பிட்டது பூரிப்பு உண்டாக்கியது. தென்னாடு, வட நாடு என்ற பேத உணர்ச்சியில்லா

திருவாரூர் மகாலிங்கக் குருக்கள் சங்கவாத்தியம் இசைக்கிறார்

அக்னிஹோத்திரம் தாதாச்சாரியார்

பிரஞ்சு அறிஞர் பில்லியோஸா

அமெரிக்கர் ஸ்மித் பேசுவதை டாக்டர் ராகவன் தமிழாக்குகிறார்







பரிவாரங்கள் புடைசூழப் பெரியவர்கள் வருகிறார்கள்.

மல் அந்நாட்களில் அந்த அந்நிய நாடுகளில் உள்ள கல்வெட்டுக்களில் தமிழ்ப் பதங்களையும்கூட சம்ஸ்கிருதத்தில் பொறித்திருப்பதாகவும் அவர் கூறினார். இந்தோ சைனா முதலிய இடங்களில் பௌத்த சமயம் பரவிய பின்னரும் பௌத்தர்கள் அங்குள்ள இந்து ஆலயத்துக்கு இந்தியாவிலிருந்து அர்ச்சகர்களைத் தருவித்துக் கொண்டதாக அவர் கூறினார்.

அரையில் வேஷ்டியும், திறந்த உடம்புமாகப் பேச வந்த அமெரிக்கப் பேராசிரியர் டாக்டர் டேனியல் ஸ்மித்தின் இந்துமத ஈடுபாட்டை என்னென்பது? சைரக்யூஸ் சர்வகலாசாலையின் இந்திய சமயப் பேராசிரியராகிய இவர் பாண்டிச்சேரியில் பாஞ்சராத்திர ஆராய்ச்சி புரியும் விந்தையை என்னவென்று சொல்ல? வைஷ்ணவ ஆகமங்களில் ஒன்று பாஞ்சராத்திரம். பகவானே ஐந்து இரவுகளில் ஐவருக்கு அருளிய வழிபாட்டு உபதேசம் பாஞ்சராத்திரம். இதில் ஸ்மித்துக்கு அபாரமான பற்றுதல். இது எப்படி ஏற்பட்டது என்பதை அவர் விளக்கினார். ஆண்டவனின் அவதாரம், திரிமூர்த்திக் கொள்கை இவை இந்து மதத்தையும், கிறிஸ்துவ மதத்தையும் இணைப்பதாகவும் இவை போன்ற ஒற்றுமைக் கருத்துக்களே விசிஷ்டாத்வைதத்திலும் பாஞ்சராத்திர ஆகமத்திலும் தம்மை விசேஷமாக ஈடுபடுத்தியதாகவும் அவர் கூறினார். பின்னர் ஸ்ரீ பெரியவர்களைத் தனியே கண்டு வந்தனம் செய்த ஸ்மித் ஆசாரியரது தேஜோ பிம்பத்திலும், காந்த சக்தி வாய்ந்த நோக்கிலும் தாம் மெய்ம் மறந்ததாகக் கூறினார்.

அன்று இரவு பட்டீச்சரம் ஸ்ரீ வயிரக் கண்ணு பாரதி பண்டைய முறைப்படி பம்பை வாத்தியத்துடன் பாரதப் பிரசங்கம் செய்தார். இன்றும் தமிழ் நாட்டில் பாரதப் பிரசங்கம் செய்யும் இருநூறு பூசாரிகள் இருப்பதாகத் தெரிய வந்தது. பிறகு இரணியூர் கரகம், காவடி ஆட்டங்கள் நடைபெற்றன. தொன்றுதொட்டு வந்துள்ள எந்தக் கலையும் இளையாற்றங்குடி சதஸில் இடம்பெறாதிருந்து விட வில்லை.

மறுநாள் காலை கேரளத்திலிருந்து வந்திருந்த சங்கரன் நம்பூதிரிபாட் முத்திரைகளாலேயே ரிக் வேதத்தை 'மொழிந்து' காட்டினார். கொச்சி மகாராஜா அனுப்பி வைத்த திவாகர நம்பூதிரியும் வேதத்தை விரலாலேயே அபிநயித்துக் காட்டினார். எட்டரை மணிக்கு பாஞ்சராத்திர ஆகம ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. பாஞ்சராத்திர பூஷணம் ஸ்ரீ ஸ்ரீரங்கம் ராகவபட்டர் இதனைத் தொடங்கி வைத்தார். பட்டாச்சாரியர் பலர் கலந்து கொண்டனர். மைசூர் அரண்மனையைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணசுவாமி பட்டாச்சாரியரையும் காஞ்சி ஸ்ரீ வரதராஜ பட்டாச்சாரியரையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கராஜ பட்டரையும் குறிப்பிட வேண்டும். சிவாச்சாரியார்கள், சிற்பாசாரியார்கள், மற்றும் பல அறிஞர்களும் விவாதங்களில் பங்கு கொண்டு வினவியும், விளக்கம் தந்தும் ஆகம சர்ச்சையைப் பயன் மிக்கதாக ஆக்கினர். பற்பல இனங்களில் ஆகமங்களிடையே ஒற்றுமை நிலவுவது தெள்ளத் தெளியத் தெரியலாயிற்று.

பிற்பகல் பேரவையில் டாக்டர் வே. ராகவன் ''பல்வேறு மொழிகளில் பாரதம்' என்னும் தலைப்பில் அரியதொரு விமரிச உரையாற்றினார். பாண்டிச்சேரி இந்திய தத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ என். ஆர். பட் தந்திர சாஸ்திரமே ஆகம சாஸ்திரமாக விளங்குகிறது எனக் கூறினார். புலமை வாய்ந்த பட்டாச்சாரியர்கள் பாஞ்சராத்திரம் குறித்து உரைகள் ஆற்றினர்.



சதஸில் கலந்துகொண்ட ஸ்ரீ வைஷ்ணவ பட்டாச்சாரியர்கள்

இப் பிரதிநிதிகளுக்கு ஆசி கூறிப் பேசிய பெரியவர்கள் செப்புத் தகடுகளில் சாஸனம் செய்யும் முறையைத் தமக்கே உரிய எளிய, இனிய முறையில் எடுத்துக் கூறினார்கள்.

அன்று இரவு முருகேச முதலியார் அவர்கள் தமது சகோதரியுடன் பாரதத்தில் பீஷ்ம பிரதிக்ஞையை இசையுரையாக நிகழ்த்தினார். பின்னர் சாத்தூர் டாக்டர் சா. பிச்சைக்குட்டி "பாஞ்சாலி சபதத்தை" வில்லிசையாக நடத்தினார்.

மூன்றும் நாள் வைகானஸ ஆகம ஆராய்ச்சி நடைபெற்றது. பாஞ்சராத்திரம் போல வைகானஸமும் விஷ்ணு ஆராதனை மார்க்கமேயாகும். பரப்பிரம்மம் பிரம்ம னுக்குப் போதித்து, அதனை பிரம்மன் வைகா னஸருக்கு உபதேசிக்க, அவர் வழியே பிருகு, மரீசி, அத்ரி, காசியபர் ஆகியோர் மூலம் பரவிய ஆகமமே வைகானஸம். பட்டாச்சாரி யர் பலரும் பிறதுறையினர் பலரும் வைகானஸ ஆராய்ச்சியில் பங்கு கொண்டனர்.

அன்று பகல் பேரவையில் திருப்பதியைச் சேர்ந்த மகா வித்துவானாகிய ஸ்ரீ பார்த்த சாரதி அய்யங்கார், நாச்சியார் கோவில் ஸ்ரீ ஸ்ரீநிவாச பட்டர் உட்படப் பலர் வைகா னஸம் குறித்துப் பேசினர்.

எல்லா ஆகம தந்திரங்களும் கூறும் மான ஸீக பூஜா முறைகளைத் தொகுத்து மொழி பெயர்ப்புடன் வெளியிட வேண்டுமென்றும், இவற்றை அர்ச்சகர்கள் படிக்க வகை செய்ய வேண்டுமென்றும் அருமையான யோசனை கூறினார் ஸ்ரீ பெரியவர்கள். பூஜா திரவியகத்தி புறப்பொருட்களைப் பொறுத்தது. மனத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதோ நம்மிடமே உள்ள விஷயம். பெரியவர்களின் உபதே சங்களுடைய உட்பொருள்தான் எவ்வளவு பெரியது!

இரவு நாகபுரி பிந்துமாதவபுராணிக் விநா யக ராவ் கோஷ்டியினர் மகாராஷ்டிர பவாடா முறையில் துளசி ராமாயணத்தைப் பற்றிய இசை உரை ஆற்றினர்.

மறுநாள் தேதி—அதாவது சதஸின் நான் காம் நாள்—காலை வைகானஸ ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. பிறபல ஆகமங்க ளோடு வைகானஸ ஆகமம் எப்படிப் பொருத்தமுடையதாக இருக்கிறது என்ப தைப் பற்றிச் சர்ச்சை நடந்தது.

பேரவை பிற்பகல் மூன்றரை மணிக்குத் தொடங்கிற்று. மரீசி, பிருகு, அத்ரி, காசியப ஸம்ஹிதைகளின் சாரத்தைப் பற்றிப் பட்டாச் சாரியர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். ஸ்ரீ வில்லிப்புத்தூர் அலங்கார பட்டர் மூல பிம்பம் பற்றி நிகழ்த்திய உரை குறிப்பிட வேண்டியதாகும். இவர்களின் நல்லுரைகள் மீது பெரியவர்கள் விளக்கவுரை கூறி வைஷ் ணவ ஆகமங்களுக்குள்ளே காணப்பெறும் ஒற் றுமையை எல்லாருக்கும் உணர்த்தினார்கள்.

பிறகு திருவாரூரிலிருந்து வந்துள்ள பஞ்ச முக வாத்யம், பாரி நாதஸ்வரம், கல்நாதஸ்வரம், தந்த நாதஸ்வரம் ஆகியவை வாசித்துக் காட்டப் பெற்றன. அடேயப்பா, இந்தத் தமிழர்கள் தொட்டதை யெல்லாம் அல்லவா கலைக் கருவியாக்கி யிருக்கிறார்கள்!

இவை குறித்தும் சகல கலா வல்லபம் பொருந்திய ஆசாரிய சுவாமிகள் பேசி, ஆசி வழங்கினார்கள். பஞ்சமுக வாத்தியத் தைப் பஞ்சமுகனான பரமேசனுடனும், பஞ்ச இந்திரியங்களுடனும், பஞ்ச உபசாரங்க ளுடன் இணைத்து அவர் பேசியது பேரானந்த மாக விருந்தது.

இரவு கேரள நாட்டிய கேந்திரத்தினர் ருக்மாங்கத சரிதத்தைக் கதகளியாக நடித் துக் காட்டினர்.



புதுப் பெரியவர்களுக்குப் பூரணகும்ப வரவேற்பு

ஐந்தாம் நாள் காலை மணக்கால் திரு அன்பு அறிவழகன் குறள் அவதானம் நடத்திய பின் பாரதச் சொற்பொழிவு நடந்தது. பின்னர் சிவாகமத்தைப் பற்றிய பொது நிலை ஆராயப் பெற்றது. தர்மபுரம் ஸ்ரீ சுவாமிநாத குருக்கள், சுப்பிரமணிய சூரியா சாரியார், திருச்சி தண்டபாணிக் குருக்கள் ஆகியோர் உட்பட சிவாசாரியர்கள் ஐம்பதின்மர் கலந்து கொண்டனர். பட்டாச்சாரியர்கள் பலரும் பிற ஆகமத்துறை அறிஞர்களும் பங்குகொண்டது குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

அன்று பிற்பகல் கூட்டத்தில், விநாயகர், சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, பைரவர் பிரம்மா முதலிய மூர்த்திகளின் தியானம் குறித்தும் லிங்க தத்துவம், ஆலய தத்துவம் இவை குறித்தும் உரைகள் ஆற்றப்பட்டன. குருக்கள்மார் பலர் மிகவும் புலமையுடன் பேசியது மகிழ்ச்சியூட்டியது. அல்லூர் விசுவநாத குருக்கள் லிங்க பேதங்கள் பற்றி நிகழ்த்திய உரை இவற்றில் குறிப்பிட வேண்டியதாகும்.

அன்றிரவு ஆந்திர நாட்டு புர்ர கதா காலட்சேபமும், கேரள நாட்டுத் தாயம்புகா தாள வாத்தியக் கச்சேரியும், சாக்கியர் கூத்தும் நிகழ்ந்தன. புர்ர கதா என்பது நமது நாட்டுப் பொது மக்களின் பாரதக் கதைக்கு ஒப்பானதே. இந்தக் கிராமியக் கலைகளின் பெருமையையும், பொதுமக்களிடையே இவை எப்படி அறத்தையும் நெறிகளையும் பரப்புகின்றன என்பது பற்றியும் வேதாந்த வித்தகரான ஸ்ரீபெரியவர்கள் மிகவும் பாராட்டிப் பேசினார்கள். நிகழ்ச்சிகள் முடியும் போது நடுநிசி மணி ஒன்றாகும்!

ஆறும் நாள் காலை கேரள பண்டிதர்கள் குழுவிலிருந்து அக்ஷர சுலோகம் என்னும் முறையில் ஒருவர் விட்ட இடத்தில் மற்றவர் தொடங்கி மாற்றுப் பாட்டுப் பாடினார்கள். புதுப் பெரியவர்கள் அக்ஷர சுலோகத்தில் மூன்றாவது அடியின்முதல் எழுத்தை முதலாகக் கொண்டு மாற்றுப் பாட்டு பாடுகிற முறையை அழகொழுக விளக்கினார்கள். தமிழ் நாட்டு முறையில் நாலாவது அடியின் இறுதிச் சொல்லின் கடைசியெழுத்தை அடுத்த பாட்டின் முதல் எழுத்தாகக் கொண்டு சம்ஸ்கிருதத்தில் சுலோகம் பாடும் முறையையும் புதுப் பெரியவர்கள் விளக்கினார்கள். அதன்பின் சிவாசாரியர்கள் ஆராய்ச்சி நடத்தினார்கள்.

மதுரை ஆதீன கர்த்தர்களான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த சுவாமிகள் வெகு அழகானதோர் உரை நிகழ்த்தினார்கள். சைவர்களும் வைஷ்ணவர்களும் தங்களது ஆகமங்களிலுள்ள வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைகளை மனத்தில் கொண்டு இணக்கம் பெற்றால்தான் இந்து மதம் அழியாதிருக்குமென அவர் எடுத்துச் சொன்னார். விக்கிரக ஆராதனையின் தத்துவத்தை நாம் சரிவர எடுத்துரைக்காததால்தான் பிற நாட்டினரும், நம்மவருமே மனம் போனபடி இவற்றுக்குப் பொருள் கொள்கிறார்கள் என்றும் கூறினார்.

"சிவலிங்க அமைப்பு, அதன் தத்துவம், லக்ஷணம்" முதலியவற்றையும் விளக்கினார்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்.


அன்றைய பேரவையில் 'சிவபூஜா கிரமம்' 'சிவாலய தரிசன முறை' 'முத்திரைகளின் லக்ஷணம்' 'யோகம்' 'ஞான பாதம்' 'ஆகமங்களின் நிலை' இவை பற்றி சிவாசாரியர்களும் குருக்கள்மாரும் உரை நிகழ்த்தினர். 'காஷ்மீர் ஆலயங்கள்' பற்றி அமரேசுவரானந்த சரஸ்வதி சொற்பொழிவாற்றினார். ஸ்ரீநகரத்திலிருந்து பதினைந்து மைல்களில் க்ஷீர பவானி ஆலயம் என ஒன்று இருக்கிறதாம். ராஜ்யத்தின் அரசியலில் நிகழும் மாறுபாடுகளுக்கு ஏற்ப இந்தக் கோயிலைச் சுற்றியுள்ள நீரின் நிறமும் மாறி வருகிறதாம். நாம் மதச்சார்பற்ற அரசியலைப் பற்றிப் பேசினாலும் ஆண்டவன் அரசியல் சார்புள்ளவனாகத் தானிருப்பான் போலும். 'மதமில்லாத அரசியலை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை' என்ற மகாத்மாவின் மணிமொழி தானே நினைவுக்கு வருகிறது?

அன்றைய விவாதங்களை இணைத்துப் பேசிய அக்னி ஹோத்திரம் ஸ்ரீ தாதாச்சாரியார் அவர்கள் வட இந்தியாவிலும் ஆகம வழிபாடு முறை பிறழாமலே நீண்டகாலம் நடந்து வந்ததென்றும் முஸ்லிம் படையெடுப்புக்கும் பின்பே அது மாறியது என்றும் கூறினார்.

இரவு திருச்சூர் நடன நிகேதனத்தார் சண்டமேளம் நிகழ்த்தினர். பேராசிரியர் சாம்ப மூர்த்தி அவர்கள் பழந் தமிழ் நாட்டு இசைக் கருவிகளையும், பிற நாட்டு இசைக் கருவிகளையும் சபையோருக்கு அறிமுகப் படுத்தி விளக்கவுரை ஆற்றினார். கேரள கலைஞர்களின் தாயம்புகா, பாடகம், ஓட்டந் துள்ளல் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதோடு பன்னிரு நாள் கலை உற்சவத்தில் ஒரு பாதி முடிந்தது. நம் கட்டுரையிலும் ஒரு பாதி முடிகிறது.

(அடுத்த இதழில் முடியும்)



எப்படி? நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கின் மூலம் ரஹா ரூ. 5 - மாத்திரம் வைத்துக் கணக்கைத் துவங்கினார். அவருடைய பணம் பத்திரமாக இருந்தது மட்டுமின்றி வருஷத்திற்கு 3 சதவீதம் வட்டியும் கொடுத்தது. ரஹா ஒழுங்காக ஒவ்வொரு மாதமும் சேமித்து வந்தார் குறுகிய காலத்திலேயே அவர் கணிசமான தொகையைச்சேர்த்து விட்டார் அவர் புத்திசாலி. வருங்காலத்திற்காக, தன் குடும்பத்திற்காக, சந்தோஷமான, மேலும் சிறந்த நாளைக்காக அவர் சேமித்து வைத்தார்

உங்களுடைய குடும்பத்திற்காக சேமிபபது பற்றி நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா?

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிட்.,

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள் சென்னை: 3, நார்த் பீச் ரோடு; 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, (லாயிட்ஸ் கிளை): 6, அரமனைக்காரத் தெரு; 158, மவுண்ட் ரோடு.
தூத்துக்குடி: 44, பீச் ரோடு

NGB/ND-TAM

நந்தவனம்





40. வைத்தியர் பிடிபட்டார்

செண்பகசுந்தரி அன்று முழுதும் கடலையாண்டியின் சாமர்த்தியத்தையும் வேணுலிங்கத்தின் அன்பையும் பற்றி வில்வநாதனிடம் வியந்து பேசியவண்ணமாக இருந்தாள்.

நடுராத்திரியில் ஓட்டைப் பிரித்துக்கொண்டு கடிதத்தை மிகுந்த முன்ஜாக்கிரதையோடு கல்லிலே கட்டிச் சுருட்டிக் கீழே போட்ட விதத்தை வியந்தாள்! குப்பம்மை என்ற வேலைக்காரியை எப்படியோ சரிக்கட்டித் தனக்குப் பக்கபலமாக உதவும்படி செய்த அந்த நேர்த்தியைக் குறித்து எல்லையற்ற வியப்போடு பேசினான். அதுமட்டுமில்லை. வல்லான வேலருடைய சூழ்ச்சிக்கு எதிர்ச் சூழ்ச்சியாக ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு விதமாக வேலை செய்து, இத்தனை ஆற்றலோடு காரியத்தை நிறைவேற்றிய வேணுலிங்கத்தைக் குறித்துப் பேசும்போது, சுந்தரியின் இதயத்தில் வியப்போடு ஒருவித பக்தியுமே பொங்கிப் பெருகி அலை வீசின!

வில்வநாதன் சொன்னான்: ''சுந்தரி! இத்தனை அன்போடு நம் இருவருடைய வாழ்க்கையிலும் தெய்வத்தைப் போல் அதிசயமான முறையிலே உதவி செய்து நம்மை ஈடேற்றிய இந்தப் புண்ணிய புருஷரை, உலகம் என்ன நினைக்கிறது? ஒரு கொள்ளைக்காரன் என்று! நமக்குமே வேணுலிங்கத்தைப் பற்றி என்ன தெரியும்? ஒரு தகப்பனைப் போல் நம் இருவருக்கும் அருள் செய்வதற்கு என்றே தோன்றிய ஒரு நல்ல ஆத்மா என்பதைத் தவிர, வேறு என்ன செய்தியை நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம்? அவரைப் பற்றிய எந்தத் தகவலையும் அவர் நம்மிடம் கூறவில்லை. என்னுடைய பிறப்பைப் பற்றியும், என் தந்தையைப் பற்றியும், ஏதேதோ இரகசியங்களையெல்லாம் என்னிடம் வெளியிட்டுக் கூறிய வேணுலிங்கம், தம்மைப் பற்றி மட்டும் ஏனோ ஒன்றுமே சொல்லாமல் மழுப்பிவருகிறார். இதை எண்ண எண்ண என் மனதில் அவரைப் பற்றிய அன்பு அதிகரிக்கிறதே தவிரக் குறையக் காணோம்.




தற்புகழ்ச்சி என்பதேயில்லாத இப்படிப்பட்ட ஒரு மனிதர், எவ்விதமான பயனையும் கருதாமல், இந்த அனாதைகளுக்கு உதவ முன் வந்தாரே, இதுதான் பெரிய புதிராக இருக்கிறது!''

இவ்வாறு சொன்னான் வில்வநாதன். அப்போது சுந்தரி கூறுவாள்:

''உண்மைதான். அதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது,

சோமு



வேணுலிங்கத்தை ஒரு அதிசய மனிதர், அபூர்வமான உத்தமர் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இத்தனை வியப்புக்கும் மத்தியில் இன்னொரு விசித்திரமான எண்ணமும் என் மனத்தில் அவரைப் பற்றி மீண்டும் மீண்டும் எழுந்து புரண்டு கொண்டேயிருக்கிறது!''

சுந்தரி இப்படிச் சொன்னதும் வில்வநாதன் வியப்போடு,

''அப்படியா! வேணுலிங்கத்தைப் பற்றி நான் சில ஊகங்கள் செய்து வைத்திருக்கிறேன். உனக்கும் ஏதாவது அப்படிப்பட்ட ஊகங்கள் தோன்றுகின்றனவா சுந்தரி?'' என்று கேட்டான்.

''ஊகங்கள் என்று அவற்றை அழைக்கலாமோ கூடாதோ, தெரியாது. ஒன்று எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது: வேணுலிங்கம் அவர்களின் வாழ்க்கையிலே ஏதோ ஒரு பெரிய இரகசியம் இருக்கிறது. அந்த இரகசியம் அவரைப் பற்றியது மட்டுமில்லை. நம் இருவருக்கும் கூட அதில் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கிறது!'' என்றாள் சுந்தரி.

''எதைக் கொண்டு அப்படிச் சொல்லுகிறாய் சுந்தரி?'' என்றான் வில்வநாதன்.

''காரணம் எதுவும் எனக்குச் சொல்லத் தெரியாது. அவரைப் பார்த்ததிலிருந்து ஏதோ ஒரு மரியாதை, ஏதோ ஒருவிதமான மதிப்பு, ஒரு பக்தி, ஒரு விசுவாசம், அதை என்னவென்று சொல்லத் தெரியவில்லை. ஒரு மகளுக்குத் தந்தையிடம் தோன்றுகிற பாசம் என்று அழைக்கலாமா? அப்படிச் சொல்லவும் எனக்குத் தெரியாது. ஏனென்றால் அறிவு தெரிந்த நாளிலிருந்து தந்தையின் பாசம் என்பதே தெரியாமல் வளர்ந்தவள் நான்! பின் எப்படி அதை வர்ணிப்பது?''

இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது ''தம்பி, தம்பி!'' என்று அழைத்துக்கொண்டே உள்ளே வந்தான் வேணுலிங்கம்.

''தம்பி! இந்தப் புகைப்படங்களைக் கொஞ்சம் பார்க்கிறீர்களா? சிங்கம் புத்தூரிலே நடந்த திருமண வைபவத்துக்கு நீங்களும் நானும் சென்று பார்க்காத குறையை நிறைவு செய்கிற படங்கள் இவை! உங்களுடைய சீடப் பெண்ணின் திருமணக் கோலத்தை நீங்கள் பார்க்க விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், நம்முடைய முக்கிய பிரமுகராகிய இருவாளர் வல்லான வேலர் அவர்களையும் அவருடைய முகத்தின் பல கோணங்களையும் நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டும்! இந்தாருங்கள், இந்தப் படங்களை யெல்லாம் நீங்கள் இருவரும் சாவகாசமாக ஒவ்வொன்றாகப் பாருங்கள்!''

இவ்வாறு சொல்லி ஒரு பெரிய புகைப்படக் கொத்தை வில்வநாதனிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றான் வேணுலிங்கம்!

புகைப்படங்களை ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்தார்கள் சுந்தரியும் வில்வநாதனும்.

தாமரைச் செல்வியின் ஓவியப் பயிற்சியும் அந்தப் பயிற்சியிலே பின்னிய சீஷியசிருங்கர் வரலாறும், சென்பக சுந்தரிக்கு எப்படித் தெரியும்? அவள் அந்தப் புகைப்படங்களிலே இருந்த மணமக்களின் படத்தை எடுத்து வில்வநாதனிடம் காண்பித்துக் கொண்டே கூறினாள்:



''இந்த மாப்பிள்ளையும் பெண்ணும் பொருத்தமாகத்தான் இருக்கிறார்கள்! இதில் என்ன பொருத்தக் குறைவு? நீங்கள் ஏன் இப்படி முகத்தைச் சுளிக்கிறீர்கள்?''

''சுந்தரி! தாமரைச் செல்வியின் இதயம் உண்மையி

லேயே ஒரு தாமரை மலர்! ஓவியமும் காவியமும் தவழ்கிற அந்த இதய அரங்கிலே இப்படிப்பட்ட....''

''என்ன என்ன? ஏன் உங்களுடைய குரல் கம்முகிறது?'' என்று பதற்றத்தோடு கேட்டாள் சுந்தரி.

''சுந்தரி! இந்த நூறு புகைப்படங்களில் உன்னைக் கவர்கிற படம் இது ஒன்றுதானா? மேலே புரட்டு. இன்னும் ரசமான படங்கள் எத்தனையோ இந்தத் தொகுப்பிலே இருக்கின்றனவே!'' என்று பேச்சை மாற்றினான் வில்வநாதன்.

செண்பக சுந்தரிக்குத் திகைப்பு ஏற்பட்டது. ஆனாலும் அவன் பிடிவாதம் செய்ய விரும்பாமல் படங்களை மேலே புரட்டினாள்!

வல்லாள வேலருடைய முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த கலவரங்களைக் கண்டதும் சுந்தரிக்குச் சிரிப்பு வந்தது. இதைக் கவனித்த வில்வநாதன் வல்லாளவேலரின் படங்களை ஒவ்வொன்றாக எடுத்து விவரிக்க ஆரம்பித்தான். சுந்தரியின் குழந்தை உள்ளத்திலே வல்லாளரின் முகத் தோற்றங்கள் அளவிலாத களிப்பை உண்டாக்கின. வில்வநாதன் இதைப் புரிந்து கொண்டு மேலும் மேலும் சுந்தரியின் உல்லாசக் களிப்புக்குக் காரணமாக அமைந்த மற்றப் படங்களையே விதம் விதமாக விமரிசனம் செய்தான். என்றாலும் உள்ளத்தின் ஆழத்தில், தாமரைச் செல்வியும் பொன்னுத்துரையும் திருமணக் கோலத்திலே நின்ற அந்த ஒரு புகைப்படம் மட்டும், மீண்டும், மீண்டும் வேதனை செய்து கொண்டேயிருந்தது! அந்த வேதனையை மறப்பதற்காக அன்று மாலையில் வட்டப் பாறையை யடுத்த தென்னஞ் சோலையிலே சுந்தரியும் தானுமாக நடந்து சென்று, நிலவு பொழிகிற அந்த இரவிலே, அவளுடைய அன்பின் நிலவிலே தனது இதய வேதனைகளை யெல்லாம் மறந்துவிட்டு உல்லாசம் காண முயன்றான் வில்வநாதன்!

மறுநாட் காலை எங்கோ வெளியே சென்றிருந்த சுடலையாண்டி அவசரம் அவசரமாக வில்வநாதனிடம் வந்தான். உடனே நந்தவனத்துக்குப் புறப்பட வேண்டும் என்றான்.

''நந்தவனத்துக்கா? இப்பொழுதா?'' என்று வில்வநாதன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே வேணுலிங்கமும் அங்கே வந்தான்!

''தம்பி, இப்பொழுதே நாம் இருவரும் சுடலையாண்டியோடு புறப்பட்டு நந்தவனத்துக்குச் செல்ல வேண்டும். சிங்கம்புத்தூர் ஆட்கள் யாரும் செண்பகவனத்துக்கு வருவதற்கு முன்னால் உங்களுடைய சித்திரப் பணி பூர்த்தியாகிவிட வேண்டும்!'' என்றான் வேணு.

''இத்தனை அவசரத்திலா?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம். இனிமேலும் கற்பனைகளை யோசிப்பதற்கு நேரம் இல்லை. இறகும் கையுமாக உட்கார்ந்து அந்தக் கடைசிச் சித்திரத்தை முடித்து விட வேண்டியதுதான். புறப்படுங்கள்!''

சுந்தரி அப்படியே அதிர்ச்சி அடைந்தவளாகத் திகைத்துப் போய் நின்றாள். அவளைப் பார்த்து வேணுலிங்கம் சொல்லுவான்:

''அம்மா! கவலைப்படாதே. பத்திரமாக அழைத்துப் போய், உன்னுடைய எஜமானரை, மிகவும் பத்திரமாகவே இங்கே கொண்டு வந்து சேர்ப்பது என்னுடைய பொறுப்பு! அதுவரை எவ்விதமான கலக்கமும் இல்லாமல் நீ நிம்மதியாக இருக்க வேண்டும். வில்வநாதனுக்கு நீ விடை கொடுத்து அனுப்பினால் தான் இங்கேயிருந்து தம்பி புறப்படும்! இல்லையென்றால் நாங்கள் எவ்வளவு வற்புறுத்திக் கூப்பிட்டாலும் அவர் வரமாட்டார்!''

புன்சிரிப்போடு இவ்வாறு சொன்னான் வேணுலிங்கம்!

''சரி; புறப்படுவோம்!'' என்று சொல்லும்போதே வில்வநாதனுடைய உள் மனத்திலே சுவர் ஓவியங்களிலே எஞ்சி நின்ற அந்தக் கடைசிச் சித்திரம் உருவாகத் தொடங்கியது!

இந்நிலையில் மலையடிவாரத்தில் குமுதவல்லியின் வீட்டிலே ஒரே அமளிதுமளியாக இருந்தது. தான் எவ்வளவோ விழிப்பாக இருந்து எத்தனையோ கவனமாகக் கண்காணித்து வந்தபோதிலும், சுந்தரி எப்படியோ மாயமாய் மறைந்து போய் விட்டாள் என்று குப்பம்மை குமுதவல்லியிடம் சொல்லிச் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்!

குமுதவல்லிக்கு ஏற்பட்ட குழப்பமும் வேதனையும் திருடனுக்குத் தேள்கொட்டியது போல் இருந்தது! மகளைக் காணோம் என்றால், முன்பு காணமற் போனது மாதிரியா இப்பொழுது? இல்லை. இந்தத் தடவை அவள் உண்மையிலேயே இங்கிருந்து காணமற் போய் விட்டாள்!

குமுதவல்லிக்கு யாரிடம் சந்தேகம் கொள்வது என்றே புரியவில்லை! தனக்கு எத்தனையோ விதத்தில் பக்கபலமாக இருந்து வந்துள்ள வல்லாள வேலரே

லிஸ்டரின் ஆன்ட்டிஸெப்டிக் அனுதினம் உங்களைக் காக்கும்


நம் வாயிலுள்ள கதகதப்பான சூழ்நிலை, கிருமிகள் தோன்றிப் பெருகுவதற்கு வெகு வாய்ப்பானது. பல்லிடுக்குகளில் தங்கிவிடும் உணவுத் துணுக்குகளோ கிருமிகளை எதிர்கொண்டழைக்கும் படை. கிருமிகள் பெருகுவதைத் தடுத்து நிறுத்துவது ஆன்ட்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து). வாய்கொப்பளிப்பதற்கான ஆன்டிஸெப்டிக்காகிய லிஸ்டரின் உடனடியாக செயல்படுகிறது; பட்ட மாத்திரத்தில் கிருமிகளைக் கொல்வதிலோ குறிதவறாதது. இதுவரையுள்ள பாதுகாப்பு மருந்து. இன்றும் என்றும் உபயோகியுங்கள் லிஸ்டரின்.



உணவருந்திமுடிந்த ஒவ்வொரு முறையும் லிஸ்டரின் கொண்டு வாய்கொப்பளித்தீர்களானால் உங்கள் மூச்சில் இனிமையும் புதுமையும் நிலவும். வெற்றிலை புகையிலை தரித்தபோது லிஸ்டரின் கொண்டு பலமாக ஒருமுறை வாய்கொப்பளித்தால் அறவே சுத்தமடையும். இன்றும் என்றும் உபயோகியுங்கள் லிஸ்டரின்.



லிஸ்டரின் உபயோகிப்போருக்கு சளி, இருமல், தொண்டைப் புண் ஆகியவற்றினின்று அதிக பாதுகாப்புண்டு எனப் பரிசோதனைகள் நிரூபித்துள்ளன. ஏதும் கலவாமல் லிஸ்டரினை அப்படியே உபயோகித்து தினம் இரு முறையாவது வாய்கொப்பளித்தீர்களானால், கூடுதலான பாதுகாப்பும் பெறுவீர்கள். இன்றும் என்றும் உபயோகியுங்கள் லிஸ்டரின்.



அனுதினம் லிஸ்டரின் பழக்கம்; கிருமிகளிடமிருந்து வலிய முறையில் பாதுகாப்புக்கு வழி. பலதிறப்பட்ட பயனுள்ள, பத்திரமான நச்சுமுறி மருந்தாகிய லிஸ்டரின் இருக்கையிலே, பிணிவராமல் காப்பதே சிகிச்சையினும் பன்மடங்கு மேல்.

உங்கள் குடும்பத்திற்கு லிஸ்டரின் பாதுகாப்பை அளியுங்கள்.

லிஸ்டரின் ஆன்ட்டிஸெப்டிக்; 3, 7 மற்றும் 14 அவுன்ஸ் சீசாக்களிலே.

லிஸ்டரின் உமது அன்றாடப் பழக்கமாகட்டும்...

வார்னர் லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

கடைசியில் இப்படி ஒரு காரியத்தைச் செய்திருப்பாரோ என்றுகூட ஒரு நினைப்பு வந்ததும், குமுதவல்லிக்குத் தன்னிடமே ஓர் ஆத்திரம் ஏற்பட்டது.

போலீசுக்குச் சொல்லியனுப்பினால் என்ன? ஆனால் எப்படிச் சொல்லி யனுப்புவது? ஏற்கனவே மகனைக் காணோம் என்று போலீஸிலே வழக்குப் பதிவு செய்தாகி விட்டது! இப்போது மீண்டும் இன்னொரு முறை எப்படிப் பதிவு செய்வது?

குப்பம்மை ஒரு வேளை இதற்கு உடந் தையாக இருந்திருப்பாளோ என்று ஒரு சந்தேகம். அப்படியானால் அவளை அதட்டிக் கேட்க வேண்டும். அவளை அதட்டிக் கேட்பதற்குரிய மனிதர் யார்? வல்லாள வேலர் ஒருவருக்குத்தான் இந்த மாதிரியான துஷ்டர்கள் மசிவார்கள். ஆனால் அவரோ? அவரே இந்தச் சூழ்ச்சி யைச் செய்திருந்தால்? சிங்கம்புத்தூ ரில் கலியாணம் முடிகிறவரை வேறு எங்கும் அசைய முடியாது என்றல்லவா சொல்லிப் போனார் அவர்! அப்படிச் சொல்லிவிட்டு இம்மாதிரியான ஒரு சதிகாரச் செயலையும் அவரே செய்து முடித்து விட்டாரோ?

குமுதவல்லிக்குக் குப்பம்மையிடம் மறுபடியும் சந்தேகம் எழுந்தது. தன்னுடைய வீட்டு வளைவுக்குள்ளே எத்தனை ஒதுக்குப்புறமான தனி அறை வீடாக இருந்த போதிலும், அதிலிருந்து இமைரென்று எப்படித் தனது மகன் மறைந்திருக்க முடியும்? கதவைத் திறந்து அவனை வெளியே கொண்டு போய் எங்கோ கடத்தி விட்டு விட்டுப் பூனை போல மறுபடியும் வந்து கதவு களைத் தாழிட்டுக் கொண்டு விட் டாளோ குப்பம்மை! கதவைத் திறந்து கொண்டு சுந்தரியே வெளியே போயிருந் தால், அதுவரை குப்பம்மை எப்படி அதைக் கவனியாமல் இருந்திருக்க முடி யும்? அவ்வளவு எளிதில் ஒரு பெண் இந்த வீட்டிலிருந்து வெளியேறிப் போய்விட முடியுமா?

குமுதவல்லிக்குக் குப்பம்மையைப் பிடித்து வைத்துக் குறுக்கு விசாரணை செய்வதற்கு வேண்டிய மனத் தெம்பு இல்லை. ஏனென்றால் இப்பொழுதுள்ள நிலையில் அந்தத் தன்னந்தனியான வீட்டில் குப்பம்மையைத் தவிர வேறு ஒரு துணையும் அவளுக்கு இல்லை! வல் லாளவேலர் திரும்பி வருகிற வரையில் பேச்சு மூச்சு இல்லாமல் இருப்பதுதான் சரி என்று பட்டது குமுதவல்லிக்கு!

அக்கம்பக்கத்தில் உள்ள இரண் டொரு வீட்டார்களுக்குக் குமுதவல்லி

யின் வீட்டு நடப்புகள் தெரியும். மகள் காணமற் போய் விட்டாள் என்று வெளியே சொன்னால் அதுவும் குமுத வல்லியின் சூழ்ச்சி என்று நினைப்பார் களே தவிர, யாரும் அவளை நம்பப் போவதில்லை!

யோசித்து யோசித்துப் பார்த்தாள் குமுதவல்லி. இப்போது குப்பம்மை யையும் பகைத்துக் கொள்வது முட்டாள் தனம். இரண்டொரு நாள் பொறுத் திருந்து வல்லாளவேலர் வருகிறவரை விட்டுச் சத்தம் வெளியே கேட்காமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்தாள் குமுதவல்லி!

இந்நிலையில், கல்லு வீட்டுக்குள்ளே போலீஸ்காரர்கள் நுழைந்து வைத்தி ரய்யாவைக் கைது செய்து கொண்டு போய் விட்டார்கள்! போலீஸ் ஸ்டே ஷனுக்குக் கொண்டு போய் விசாரணை செய்ய ஆரம்பிக்கும்போது, நிலைமை இன்னும் சிக்கல் அடைந்துவிட்டது! போலீஸ்காரர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்ல முனைந்த வைத்தியரய்யா, வழக்கை மிகவும் இக் கட்டான நிலையிலே கொண்டு போய் விட்டு விட்டார்!

''குமுதவல்லியின் மகளான செண் பக சுந்தரி இந்த வீட்டிலே சிறை வைக் கப்பட்டது உண்மையா?''

''சிறையில்லே. வைத்தியத்துக்காக இங்கே வந்தாள் அந்தப் பெண்!''

''வைத்தியத்துக்கா? அவளுக்கு வைத்தியம் செய்ய நேரும்படி அப்படி என்ன வியாதி ஏற்பட்டது அவளுக்கு?''

''மூளைக் கோளாறு!''

''மூளைக்கோளாறு? மூளைக்கோளாறு என்றால் அதற்கு வைத்தியம் செய்வ தற்கு இங்கே இந்தக் கல் வீட்டுக்கு ஏன் வர வேண்டும்?''

''அடியேன் ஒரு நாட்டு வைத்தியன்! மூளைக் கோளாறுக்கு மருந்து கொடுக் கும்படி குமுதவல்லி அம்மாள் தான் இங்கே அனுப்பினாள்!''

''குமுதவல்லியா? அப்படியானால் மகளை இங்கே அனுப்பி விட்டு அவள் காணமற் போய்விட்டாள் என்று ஏன் கம்ப்ளெய்ண்ட் கொடுத்தாள் அவள்?''

''அது எனக்குத் தெரியாது!'' என் றார் வைத்தியரய்யா.

''எது தெரியாது?''

''இங்கே கம்ப்ளெயின்ட் கொடுத் தது......!''

''அப்படியானால் கல் வீட்டுக்குச் சுந்தரி எப்படி வந்தாள்?''

''வண்டியில் வந்தாள்!''

''வண்டியிலா? யாருடைய வண்டி யில்?.....''

''வல்லாளவேலர் எசமானுடைய..'' என்று வார்த்தைகளை மெதுவாக இழுத் தார் வைத்தியர்.

''வல்லாள வேலரா? செண்பகசுந்தரி காணமற் போனதற்கே அவர்தானே சாட்சியம். அப்படியிருக்க அவர் எப்படி இங்கே வந்து சுந்தரியை உம்மிடம் வைத் தியத்துக்கு ஒப்படைத்தார்?''

''சாமிகளே! அடியேன் வைத்தியத் தொழிலைத் தவிர வேறு ஒன்றும் அறி யாதவன்! இந்த விவரங்கள் எல்லாம் அடியேனுக்குத் தெரியாது சாமி!''

''வைத்தியமாவது தெரியுமா உமக்கு?''

''கொஞ்சம் தெரியும்!''

''வைத்தியத் தொழில் நடத்து வதற்கு லைசென்ஸ் வைத்திருக்கிறீரா?''

''தெரியாது!''

''என்ன தெரியாது?''

''லைசென்ஸ் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரியாது!''

''லைசென்ஸ் இல்லாமல் வைத்தியத் தொழில் நடத்துவது முதலாவது குற் றம். இரண்டாவது, நிரபராதியான ஒரு பெண்ணை இவ்வாறு — ''

''சாமி! நான் ஒரு பாவமும் அறியா தவன். வேணுமானால் வக்கீலய்யாவைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் வந்து தான் அந்தப் பெண்ணை மறுபடியும் வீட்டுக்குக் கூட்டிப் போனார்கள்!''

''என்ன சொல்லுகிறீர்? சுந்தரி இப்பொழுது குமுதவல்லியின் வீட் டிலேதானா இருக்கிறாள்?''

''ஆமா சாமி! அங்கேதான் வக்கீலய் யாவும் வல்லாள வேலர் எசமானும் கூட்டிக் கொண்டு போனார்கள்!''

''சரி. புறப்படும் எங்களோடு. அங்கே அந்தப் பெண்ணைக் காணவில்லையென் றால் நீர்தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பு. சரிதானா?''

''நீங்கள் என்ன சொன்னாலும் அடி யேன் கேட்கிறேன். ஆனால் வல்லாள வேலர் எசமானையும் ஒரு வார்த்தை கேட்டு விட்டு அதுக்குப் பிறகு என்னைக் கேட்க வேணும் சாமிகளே!'' என்று கெஞ்சிக் கேட்டார் வைத்தியரய்யா.

''சரி. புறப்படும்!'' என்று உத்த ரவு பிறந்தது.

போலீஸ்காரர்களின் காவலிலே வைத் தியரய்யா குமுதவல்லியின் வீட்டுக்குப் புறப்பட்டார். (தொடரும்)

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் பதினொன்று

இது என்ன வாழ்த்தொலி?

மண்டகப்பட்டு என்னும் சிற்றூருக்கு மேற்கே — சுமார் ஏழு நிவர்த்தன தொலைவுக்கப்பால் — ஜனசஞ்சாரமற்ற ஓரிடத்தில், கன்னங்கரிய களிறு போல் தன்னந்தனியே நின்றிருந்தது ஒரு கற்பாறைக் குன்றம்.

அது வெறும் பாறைக் குன்றமல்ல; அயன், சிவன், மாலவன் ஆகிய மும்மூர்த்திகளுக்காக எடுப்பிக்கப் பெற்ற அற்புதத் திருக்கோயில்! கல்லிலே காவியம் கண்ட விசித்திர சித்தனான மகேந்திரவர்மன் எடுப்பித்த குடைவரைக் கோயில் அது.

குன்றின் வடக்குப் பகுதியிலே அமைந்த அந்தக் குகைக் கோயிலின் மண்டபத்தில், சுமார் ஐம்பது வயது மதிக்கத் தக்க ஓர் அதிகாயபாருவான மனிதர் ஆழ்ந்த கவலையுடன் கைகளைப் பின்னால் கோத்தவாறு மெல்ல உலாவிக் கொண்டிருந்தார். நேற்றிரவு உறையூர்ச் சாலைக்கு மேற்கேயுள்ள சிறிய சாலையொன்றின் சுமைதாங்கிக் கல் அருகில் யாரையோ தேடிப் பார்த்து விட்டுப் போனார்களே, அந்த நான்கு பேரில் ஒருவர்தான் அவர்:

தஞ்சை வடமேற்கே, அறுபது குடும்பங்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்த அழகிய ஊரான சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்தைப் பல்லவப் பேரரசின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டுச் சிற்றரசராயிருந்து ஆண்டு வரும் பெரும்பிடுகு முத்தரையர் என்பவரே அவர். களப்பாளராயர் என்னும் வம்சத்தினரான அவருடைய இயற்பெயர் முதலாம் குவாவன்மாறன் என்பதாகும். இவரது பரம்பரையிலிருந்து பிரிந்துபோன வேறொரு கிளையினர், வேளிர் என்னும் குடிப் பெயருடன் தஞ்சையையும் கொடும்பாளூரையும் குறுநில மன்னர் அந்தஸ்து பெற்று ஆண்டு வந்தனர். ஆனால் அவர்களை விட இந்தச் சந்திரலேகை முத்தரையரே பல்லவர்க்கு மிகவும் வேண்டியவராயிருந்தார். இதனால்தான், 'பகாப்பிடுகு' என்னும் பட்டப் பெயரை மகேந்திரவர்மன் சூட்டிக் கொண்டது போல் 'பெரும்பிடுகு' என்னும் பெயரைப் பரமேசுவர வர்மன் சூட்டிக் கொண்ட போது, அதை முத்தரையரும் தம் சிறப்புப் பட்டமாக ஏற்றுப் 'பெரும்பிடுகு முத்தரையர்' ஆனார்!.....

மண்டபத்தின் முகப்பில் வரிசையாக நான்கு தூண்கள் அமைக்கப் பெற்றிருந்தன. அவற்றில் கடைசி இரு பக்கத் தூண்களையும் ஒட்டினாற்போல் அமைந்த வெளிப் பாறைச் சுவர்களில், துவாரபாலகர்களின் வடிவங்கள் அழகிய புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டிருந்தன. இடக் கோடியிலிருந்த துவார பாலர் ஒரு காலை மடித்து ஒயிலாக நிற்கும் கோலத்திலும், வலக் கோடியிலிருந்த துவாரபாலர் இரு கைகளையும் இடுப்பின்மேல் ஊன்றி ஒருக்களித்து நிற்கும் நிலையிலுமாக விளங்க, அவ்விருவர் கழுத்திலும் பாம்பு அணிந்திருப்பது போல் காட்டியிருப்பதிலிருந்து அந்தக் கோயிலில் குடிகொண்ட மும்மூர்த்திகளில் சிவபிரானே முதலிடம் பெற்றிருக்கிறார் என்பது தெற்றெனத் தெளிவாயிற்று. இந்தக் காவல் தெய்வங்களான துவாரபாலர் சிற்பங்களின் கீழே — படிக்கட்டின் இரு பக்கமும் — வாட்டசாட்டமான தோற்றத்துடன் காவல் வீரர்கள்போல் விளங்கிய இரண்டு வாலிபர்கள் குத்துக்காலிட்டு உட்கார்ந்து சுற்றுமுற்றும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்களும் நேற்றிரவு பார்த்த அந் நால்வரில் இருவர்தாம்!

அப்படியானால், நான்காமவர் எங்கே? கோயிலின் கருவறைக்குள்ளிருந்து யாரோ இருமும் சத்தம் கேட்டது.

மண்டபத்தில் உலாவிக் கொண்டிருந்த முத்தரையர், மேலும் உலாவப் பொறுமையிழந்தவராய்த் தளர்ந்து நின்று, தொலை தூரத்துக்கப்பால் தம் பார்வையைச் செலுத்திக் கூர்ந்து நோக்கினார். பிறகு சலிப்புடன் முகத்தைச் சுளித்தவாறு வந்து ஒரு தூணில் சாய்ந்து நின்றார். எதிரேயிருந்த மற்றொரு தூண் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது.

சதுர வடிவில் அமைந்த அந்தத் தூணின் நடுப்பகுதியில் மட்டும் எட்டுப் பட்டைகள் தீர்க்கப் பெற்று, அதற்குக் கீழே ஒரு தாமரைப் பூ சிற்பம்

செதுக்கப் பெற்றிருக்க, அதன் அடியில் வட மொழிச் சாசனம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது.

'செங்கல்லோ, மரமோ, உலோகமோ, சுண்ணும்போ இல்லாமல், பிரம ஈசுவர விஷ்ணுக் களுக்கு, விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது' என்ற பொருளில் அமைந்த அந்தச் சாசனத்தைத் தம் வாய்க்குள் ளாகவே படித்துப் பார்த்த அவர், வேதனைக் கமறலுடன் நீண்ட பெருமூச்சு விட்டார்.

மாலைப் போதின் மஞ்சள் ஒளியில் இருட் புகை கலவையிடத் தொடங்கியதால் சுற்று வெளிக் காட்சிகளெல்லாம் மெல்ல மெல்ல மங்கி மறைந்து கொண்டிருந்தன.

மூன்று குழிகள் பறித்திருப்பது மட்டும் தென்பட்டது. சளுக் கியப் படையெடுப்பின்போது சிதைக்கப் பெற்றும் சீரழிந்தும் போன பல திருக்கோயில்களில் இதுவும் ஒன்று போலும்!

"பழையாறைச் சோழருக் குப் பொறுமை பறி போய் விட்டதென்று நினைக்கிறேன்; புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டே, அகல் விளக்கின் மங்கலான ஒளியில் தம் பார்வையை நனைத்து அங்குமிங்கும் பார்த்தார் பெரும்பிடுகு முத்தரையர்.



ஒரு சிற்பியன்

தூணோடு தூணாகச் சாய்ந்து நின்றிருந்தவர் சட்டென்று நிமிர்ந்து ஏதோ முடிவுக்கு வந்தவர் போல்கோயிலின் உள்ளறையை நோக்கி நடந்தார்.

இலேசான இருள் படர்ந்திருந்த அந்த நீண்ட அறையின் தென்புறம், ஒன்றை யடுத்து ஒன்றென மூன்று திருநிலை யறைகள் அமைந்திருந்தன. அவற் றுக்கு நேரெதிர்ச் சுவரில் வெட்டப்பட்டிருந்த ஒரு முக்கோணப் புரையிலே அகல் விளக்கொன்று புகையைத் திரிய விட்டு எரிந்து கொண்டிருந்தது. அங்கு தெய்வத் திருமேனிகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அவை இருந்தன என்பதற் கறிகுறியாக மூன்று கருவறைகளின் தரையிலும்

''சந்திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரின் நிலையும் நினைப்பும்கூட அதுதானே?'' என்று அடித்தொண்டையில் வினவியவாறு இருள் மூட்டத்திலிருந்து வெளிச்சத்தை நோக்கி வந்தார் ஓர் ஆஜானுபாகுவான மனிதர்.

''ஆமாம், நண்பரே! எவ்வளவு நேரம் இங்கே காத்திருப்பது? ஒரு நாள் பொழுது வீணே ஓடி விட்டதே!'' என்று அலுப்புடன் சொல்லிக் கொண்டே பழையாறைச் சோழரின் எதிரில் போய் அமர்ந்தார் பெரும்பிடுகு முத்தரையர்.

''அப்படியானால், உறையூர்ச் சாலைப் பக்கம் போய் மீண்டும் அவரைத் தேடிப் பார்க்கலாம் என்கிறீர்களா?''

''அது இனி பயனற்ற காரியமாகும்...!''

''வேறு என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?''

''பழையாறைக்கு நீங்கள் செல்ல வேண்டியது; நான் சந்திரலேகைக்குப் போகிறேன். ஒருகால் அவர் நம்மை அங்கே தேடி வந்தாலும் வரலாம்.''

''எனக்கென்னவோ ஒரு சந்தேகம் தட்டுகிறது......''

முத்தரையர் அவரை அவசரமாக நிமிர்ந்து நோக்கினார்.

''உறையூர்ப் பெருவழியின் மேற்குச் சாலையில் நம்மைச் சந்திப்பதாக அவர் எழுதியனுப்பிய ஓலை உண்மையானதாயிருக்குமா? அல்லது......''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவர் எதிரிகளிடமிருந்து தப்பி வந்த விஷயமே மெய்யல்ல என்றாகிறதே?''

''ஆம், நண்பரே! அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.''

''அம்மாதிரி சந்தேகப்படக் காரணமே இல்லை. ஏனென்றால், அவரிடமிருந்து ஓலை பெற்று வந்து நம்மிடம் கொடுத்தவர்கள் நமது நம்பிக்கைக்குரிய ஆபத்துதவிப் படைவீரர்கள். மேலும், அவர்கள் அந்த ஓலையைக் கொடுத்து விட்டு எங்கும் போய் விடவில்லை; கடந்த மூன்று நாட்களாய் நம்முடனேதான் நமக்குத் துணையாக இருந்து வருகிறார்கள். இப்போதும் இந்தக் குகைக் கோயில் வாயிலில் அவ்விரு ஆபத்துதவிகளும் நமக்குப் பாதுகாவலாக உட்கார்ந்திருக்கிறார்கள்.''

முத்தரையரின் பேச்சைச் சரியென்று ஏற்பவர்போல் தலையை மேலுங்கீழுமாக ஆட்டிக்கொண்ட பழையாறைச் சோழர், ''அப்படியானால் அவர் பெருவளநல்லூருக்குப் போயிருப்பாரோ?'' என்று இழுத்தார்.

''சேதியக் கலைஞர் பரவாதிமல்லரின் இல்லத்துக்கா? அங்கு ஏன் அவர் போகப் போகிறார்? அந்த விஷயம் நம் இருவரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாதே!''

சற்று நேரம் மௌனமாயிருந்த பழையாறைச் சோழர், ''சரி; புறப்படுவோம். நாம் போன பின் அவர் இங்கு வந்தால், அவரை அழைத்து வந்து நம்மிடம் சேர்க்கும்படி அவ்விரு ஆபத்துதவிகளுக்குக் கட்டளையிட்டு அவர்களை இங்கேயே தங்கியிருக்கச் சொல்லிவிட்டுப் போவோம்'' என்று சோர்ந்த குரலில் கூறிக்கொண்டே எழுந்தார். பெரும்பிடுகு முத்தரையரும் எழுந்து நின்றார்.

அதே சமயம், குகைக்கோயிலுக்கு வெளியேயிருந்து ஒரு விசித்திர ஒலி எழுந்தது. ஆபத்துதவிகளின் எச்சரிக்கைக் குரல் அது என்பதைப் புரிந்து கொண்ட அவ்விருவரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். உடைவாளை இறுகப் பற்றிய வண்ணம் சுவரோடு சுவராக ஒடுங்கிப் பதுங்கினர்.

''வாழ்க, விக்கிரமாதித்தர்! ஓங்குக, சளுக்கிய சாம்ராஜ்யம்!'' என்று உரத்த குரலில் கூவிக் கொண்டே, கிழிந்து கந்தலான வராகக்கொடி கட்டிய நூட்டுக் கம்பு ஒன்றைத் தலைகீழாகத் திருப்பிப் பற்றித் தரையில் ஊன்றியவாறு, அந்தக் குகைக் கோயிலின் திருநிலையறை வாயிற்படி மேல் வந்து ஏறி நின்றான் ஓர் இளம் வாலிபன்.

அவன் வேறு யாருமல்ல; நேற்றிரவு சளுக்கியத் தளபதி வில்வேலியை வழி மாற்றி விட்டு, ஆந்திர இளவரசி உத்தமசீலியின் சிவிகையிலிருந்த ஓலைச் சுருளைக் கவர்ந்து சென்ற அந்த வாலிபனேதான்!

அத்தியாயம் பன்னிரண்டு

இளவல் கோவிந்தவர்மன்

பாய்ந்து தாக்குவதற்குத் தயாரான நிலையிலே கால்களை உறுதியாக ஊன்றிக்கொண்டு மெள்ளத் தலையை நீட்டி எட்டிப் பார்த்தார் பழையாறைச் சோழர். சந்திரலேகைச் சிற்றரசரும் அவ்வாறே கூர்ந்து நோக்கினார்.

கருவறை வாசலில் நின்ற வாலிபன் மெல்லச் சிரித்தவாறு சுற்றுமுற்றும்

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் க்ரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.



வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

GC-9-52-TAM.

பார்த்துக்கொண்டே உள்ளே சென்று, விளக்கொளி தன்மீது நன்கு படும்படியான ஓரிடத்தில் நின்றான்.

''வாருங்கள், கோவிந்தவர்மரே!'' என்று வாஞ்சையும் வியப்பும் செறிந்த ஒரே குரலில் கூறிக் கொண்டே இருளை விட்டு வெளிச்சத்துக்குத் தாவி வந்தனர் பழையாறைச் சோழரும், பெரும்பிடுகு முத்தரையரும்.

யார் இந்தக் கோவிந்தவர்மன்? பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனின் சிறிய தந்தையான காலஞ் சென்ற ஆதித்த வர்மனின் மைந்தனா இவன்? சளுக்கியரால் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டு, அங்கிருந்து தப்பியோடி விட்ட இளவரசன் கோவிந்தவர்மனா இவன்? ஆம்; அவனே தான்!

இரு கரங்களையும் குவித்து அவ்விருவருக்கும் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்தினான் கோவிந்த வர்மன். பிறகு வாயைத் திறக்காமலே புன்னகை பூத்தவாறு ஊமைச் சாடையில் 'குடிக்கத் தண்ணீர் இருக்கிறதா?' என்று கேட்டான்.

பழையாறைச் சோழரும், சந்திரலேகைச் சிற்றரசரும் அவனைத் திருதிருவெனப் பார்த்து விழித்தனர். 'இவன் ஏன் இப்படி ஊமைச் சாடை காட்டுகிறான்? சளுக்கிய நாட்டையும் விக்கிரமாதித்தனையும் வாழ்த்தியது ஏன்? அத்துடன், அவன் வராகக் கொடி கட்டிய கம்பையல்லவா வைத்துக் கொண்டிருக்கிறான்? எதிரிகளின் ஆசை வார்த்தையில் மயங்கி, அவர்களுடைய கையாளாக மாறி, நம்மை யெல்லாம் காட்டிக் கொடுக்க வந்திருக்கிறானா? அதனால்தான் இவனைக் கோட்டைச் சிறையிலிருந்து விடுதலையாக்கி வெளியே அனுப்பியிருக்கிறார்களோ?' — குழப்பமும் திகிலும் மீதூர வெறித்து நோக்கினர்.

கோவிந்த வர்மன் மீண்டும் அதே ஊமைச் சாடையில் தண்ணீர் கேட்டான்.

பெரும்பிடுகு முத்தரையர் அவனைக் குறி வைத்துப் பார்த்துக் கொண்டே மெள்ளப் பின்னால் நகர்ந்து, கருவறையின் ஒரு மூலையிலிருந்த சுரைக் குடுக்கை யொன்றை எடுத்து வந்து அவனிடம் நீட்டினார். நீர் நிறைந்த அந்தச் சுரைக்குடுக்கையை வாங்கிக் கொண்டு அமைதியாக வெளியே சென்றான் கோவிந்த வர்மன். குறுநில மன்னர்கள் இருவரும் அவனையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கோயில் மண்டபத்தின் படியோரம் போய் நின்ற கோவிந்தவர்மன், வாய் நிறைய நீரை ஊற்றிக் கொப்பளித்து வெளியே உமிழ்ந்தான். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டே ஆறு முறை வாய்க் கொப்பளித்து உமிழ்ந்த அவன், திருநிலையறையை நோக்கிக் கம்பீரமாக நடந்து வந்து, தன் கையிலிருந்த வராகக் கொடிக் கம்பை நீட்டி, அகல் விளக்கின் தீக் கொழுந்தில் செருகிப் பிடித்தான். புழுதியேறிக் கிழிந்து கந்தலான அந்தச் சளுக்கியக் கொடி திகு திகு வெனப் பற்றி எரிந்தது. ''வாழ்க, பரமேசுவர வர்மர்! எழுக, பல்லவ சாம்ராஜ்யம்!'' என்று வெறி பிடித்தவன் போல் உரத்த குரலில் கூவிக்கொண்டே, ஜ்வாலை விட்டு எரியும் கொடிக் கம்பைச் சிலம்பவட்டமாகச் சுழற்றித் தரையில் படீரென்று அடித்தான்.





பிறகு சோர்வுடன் போய், வெறுமையாய் இருந்த ஒரு கற்பீடத்தின் மேல் துவண்டு உட்கார்ந்தான்.

இக்பிரமை யுற்றவர்களாய் நின்று கொண்டிருந்த பழையாறைச் சோழரும், சந்திரலேகைச் சிற்றரசரும் அவன் முகத்தைக் குனிந்து நோக்கினர். கோவிந்த வர்மன் அவர்களைப் பார்த்துக் குறுநகை புரிந்தான்.

''இளவரசே! என்ன இதெல்லாம்? எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே?'' என்று வறண்ட சிரிப்புடன் உள்ளிழுத்த குரலில் வினவினார் பெரும்பிடுகு முத்தரையர்.

''நாடகமாடுகிறேன் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் நினைப்பதுபோல் ஒரு நல்ல நாடகமே நடத்திக்கொண்டு தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன்!'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான் கோவிந்தவர்மன். ''ஆம், ஐயா! நான் ஆடிய அந்த நாடகத்தை நினைத்தால் எனக்கே வெட்கமாயிருக்கிறது. ஆனால் அதைத் தவிர அப்போது வேறு வழி தோன்றவில்லை.''

சிற்றரசர்கள் இருவரும் அவனை வியப்புடன் ஏறிட்டு நோக்கினர்.

''பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த நான் அங்கிருந்து தப்பி வந்தது ஒரு தனிக் கதை. அந்தக் கதையைப் பிறகு சொல்கிறேன். இப்போது உங்களிடம் வந்து சேர்வதற்காக நடத்த வேண்டியிருந்த

நாடகத்தை மட்டும் கேளுங்கள்: சிறையிலிருந்து நான் தப்பியதைக் கேள்விப்பட்ட அன்றே, சளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் பல்லவபுரம் அரண்மனையிலிருந்து உறையூருக்குப் புறப்பட்டுப் போய் விட்டான். அவன் அப்படி இடம் மாறிப் போன காரணத்தை என்னால் ஊகிக்க முடியவில்லை. ஒருகால், தப்பியோடிய நான் பல்லவ நாட்டின் தெற்கு எல்லைக்குப் போய் அவனை எதிர்க்க முயற்சி செய்வேனோ என்று அஞ்சியே முன்னெச்சரிக்கையாக அவன் அங்கு சென்றிருக்கலாம். நான் எதிர்பார்த்தபடியே, என்னைப் பிடிப்பதற்காக, நாடெங்கிலுமுள்ள சளுக்கியப் படைவீரர்கள் தீவிரமாயினர். இதனால் வெளியே தலை காட்டாமல் இரண்டு நாட்கள்வரை ஓரிடத்தில் பதுங்கிக் கிடந்தேன். பிறகு உங்கள் இருவருக்கும் நமது ஆபத்துதவிப் படைவீரர்கள் மூலம் சேதி அனுப்பி விட்டுத் துணிந்து கிளம்பினேன். இரண்டொரு ஊர்களைக் கடந்த பின் தான் என்னைச் சூழ்ந்து வரும் ஆபத்தான நிலைமையை நன்கு உணர முடிந்தது. அந்த நிலைமையைச் சமாளிக்க ஒரு குயுக்தி செய்தேன். ஆட்டிடையன் போல் வேடமிட்டுக்கொண்டு, நானே சித்திரித்துத் தயாரித்த வராகக்கொடியைக் கையில் ஏந்திக்கொண்டு வழி நடக்க ஆரம்பித்தேன். இதனால் இன்னொரு சங்கடம் நேர்ந்து விட்டது. வராகக் கொடியேந்திய என்னைக் கண்டு நம் பல்லவக் குடி மக்கள், நான் ஒரு தேசத் துரோகி என்பதாக நினைத்து விட்டனர். உண்ண உணவோ, குடிக்கத் தண்ணீரோ, தங்க இடமோ தராமல் என்னை விரட்டியடித்தனர். கோபாவேசம் கொண்ட சிலர் கொல்லவும் முயன்றனர். இதிலிருந்து ஒரு விஷயத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. நமது குடிமக்கள் அந்நிய ஆதிக்கத்தை அறவே வெறுக்கின்றனர் என்பதையும், சளுக்கிய அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறத் துடியாய்த் துடிக்கின்றனர் என்பதையும், தமது நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் சுதந்திரத் தீயைப் பயன்படுத்திக் கொள்ளத் தலைமறைவாயிருக்கும் பல்லவ மன்னர் முன்வர மாட்டாரா என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையும் நான் நன்கு தெரிந்து கொண்டேன். எப்படியோ அவர்களிடமிருந்து தப்பி, உறையூர்ப் பெருவழியின் மேற்குச் சாலையிலுள்ள சுமைதாங்கிக் கல்லை வந்து அடைந்தேன். உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த நான் களைப்பு மிகுதியால் என்னையறியாமலே அந்தச் சுமைதாங்கிக் கல்லின்மேல் படுத்துத் தூங்கி விட்டேன். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த என்னை யாரோ தட்டி எழுப்பவே, நீங்கள்தாம் வந்து விட்டீர்களோ என்ற உற்சாகத்துடன் கண் விழித்தேன். ஆனால், என் எதிரே சளுக்கியத் தளபதி வில்வேலி வந்து நின்று கொண்டிருந்தான்....''

''என்ன! வில்வேலியிடமே அகப்பட்டுக் கொண்டீர்களா?'' என்று திடுக்குற்ற குரலில் கேட்டார் பழையாறைச் சோழர். ''அவனும் உங்கள் கையிலிருந்த வராகக் கொடியைப் பார்த்து ஏமாந்து விட்டானா?'' என்று துடிப்புடன் வினவினார் முத்தரையர்.

கோவிந்த வர்மன் மெல்லச் சிரித்து விட்டுக் கூறினான்: ''ஒரு மாபெரும் நாட்டின் பிரதம தளபதி அத்தனை எளிதில் ஏமாந்து விடுவானா? என்னுடைய கொடி நாடகமெல்லாம் அவனிடம் பலிக்கவில்லை. மேலும், நான் படுத்திருந்தபோது என்னுள் எரிந்துகொண்டிருக்கும் குடிமையுரிமை வெறியுணர்ச்சியால், என் வசமிருந்த வராகக் கொடியைக் காலடியில் போட்டு மிதித்துக் கொண்டிருந்ததை அவன் குறிப்பாகக் கவனித்து விட்டான். இதனால் என்மீது அவனுக்குச் சந்தேகம் தட்டி விட்டது. இதையறிந்த நான் உள்ளூறக் குலைநடுங்கி விட்டேன். ஆயினும் தைரியத்தை இழக்காமல் என்னுடைய நாடகத்தின் உச்ச கட்டத்துக்குத் தாவினேன். ஆமாம்; கடும் விஷம் கொண்ட சர்ப்பகந்தி வேரை, கடுமையான பல நோய்களைக் குணமாக்க உபயோகப்படுத்துவதில்லையா? அதுபோல் அந்த உயிராபத்தான நிலைமையிலிருந்து தப்பும் பொருட்டு என் ஜன்மப் பகைவனை விக்கிரமாதித்தனையும் அவனுடைய சளுக்கிய நாட்டையும் விண்ணதிர வாழ்த்திக் கோஷமிட்டேன். அப்படிக் கோஷமிட்ட எனது வாய் அக்கணமே காஞ்சிரங்காயை மென்றது போல் ஒரேயடியாகக் கசந்து விட்டது. அந்தக் கசப்புக் கறையைக் கழுவிக்கொள்ளத்தான், இங்கு வந்ததும் உங்களிடம் தண்ணீர் வாங்கிக் கொண்டு போய், வாய் கொப்பளித்து விட்டு வந்தேன்.''

அந்த இளைஞனின் குரோதமும் குறும்புமான இந்தப் பேச்சைக் கேட்டுக் குபீரெனச் சிரித்த பழையாறைச் சோழர், ''வில்வேலியிடமிருந்து தப்புவதற்காக விக்கிரமாதித்த வல்லபனை வாழ்த்திக் கோஷமிட்டீர்கள்; அது நியாயம்! ஆனால், இங்கு வந்தபின்னும் அதே கோஷத்தைச் சற்று முன்னால்

எழுப்பினீர்களே, அது ஏன்?'' என்று கேட்டார்.

''அதுவும் ஒரு நாடகம்தான் ஐயா!'' என்று கூறிக் கடகடவெனச் சிரித்தான் கோவிந்த வர்மன். ''உறையூர் மேற்குச் சாலையில் என்னை நீங்கள் சந்திக்க இயலாமற் போனால் இந்த மண்டகப்பட்டுக் குகைக் கோயிலில் வந்து காத்திருங்கள் என்று நான் அனுப்பிய ஓலையில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அதன்படி நீங்களும் இங்கு இருப்பீர்கள் என்று நம்பியே வந்தேன். ஆயினும் எனக்கொரு சந்தேகம் எழுந்தது. என்னைப் பிடிப்பதற்காக நாடெங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் சளுக்கிய வீரர்கள், நான் இங்கு வரப்போகும் விவரத்தை எப்படியேனும் அறிந்து, உங்களுக்கு முன் இக்குகைக் கோயிலில் வந்து மறைந்திருந்தால் என்னசெய்வது? நம்முடைய ஆபத்துதவி வீரர்கள் வெளியே இருந்தாலும், அவர்களையும் அறியாமல் இங்கு ஒளிந்திருக்கக் கூடுமே! எனவேதான் என்னுடைய வேஷத்தையும் கோஷத்தையும் உடனடியாக மாற்றிக் கொள்ளாமல், வெள்ளோட்டம் பார்ப்பதற்காக, முதலில் சளுக்கிய வாழ்த்தொலி எழுப்பினேன்! நல்லவேளையாக, நான் சந்தேகப்பட்டது போல் இங்கு எதுவும் நடக்கவில்லை!''

''மெய்யாகவே இது ஒரு சுவையான நாடகம்தான்'' என்று கூறிக் குறும்பாகச் சிரித்த பழையாறைச் சோழர், ''ஓ..... பல்லவ இளவரசர் இதுவரை சளுக்கிய விக்கிரமாதித்தனை ஆறுமுறை வாழ்த்திக் கோஷமிட்டிருப்பார் என்று நினைக்கிறேன்; அதனால்தான் தம் வாயை ஆறு தடவை கொப்பளித்துக் கழுவிக் கொண்டு வந்தார் போலும்!'' என்றார்.

ஆனால் முத்தரையரோ இந்த விவரங்களைக் கேட்டுத் தாள முடியாத அவமானமுற்றவர்போல் முகத்தை அஷ்டகோணலாகச் சுளித்துக்கொண்டு ''அது சரி, இளவரசே! வில்வேலியின் முன்னே அப்படிக் கோஷமிட்டதன் பலன் என்ன?'' என்று அடித் தொண்டையில் வினவினார்.

''இதோ, உங்கள் எதிரே உயிருடன் வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறேனே, இதுதான் பலன்!'' என்று வெட்கமும் வேதனையும் முட்டிய குரலில் கூறித் தலை குனிந்தான் கோவிந்த வர்மன்.

''பல்லவ இளவரசர் இப்போது இராஜதந்திரக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கிறார்!'' என்று உற்சாகத்துடன் கூறினார் பழையாறைச் சோழர்.

''ஆமாம்; உயிர்ப் பயம் ஏற்பட்டு, வீர உணர்ச்சியும் மான உணர்ச்சியும் மழுங்கும்போது செய்யப்படும் காரியத்துக்குப் பெயர்தான் இராஜதந்திரம்!'' என்று முணுமுணுத்தார் பெரும்பிடுகு முத்தரையர்.


இந்தக் குத்தல்மொழியைச் செவிமடுத்த கோவிந்தவர்மன் சாட்டையடி பட்டவன்போல் உடம்பை நெளித்துக் கொண்டு அவரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

(தொடரும்)

இரு நடன மணிகள்

சென்ற 16-ம் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற குமாரிகள் சித்ரகலா, ஸ்வதந்திரா ஆகிய இருவரின் நடன நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. பெரியவர்களின் நடனங்களில் கண்டுகளிக்கக்கூடிய பல அம்சங்களை இச் சிறுமிகளின் நாட்டியத்திலும் காண முடிந்தன. லய சுத்தமான அடவுகள், விறுவிறுப்பு குன்றாத ஆட்டம், லலிதமான அபிநய பாவங்கள், சோர்வு தட்டாமல் நீண்ட நேர நிகழ்ச்சியையும் நிர்வகித்து முடிக்கக் கூடிய ஆற்றல் இவையனைத்தும் இவர்களிடம் காணப்பட்டன. ஊத்துக்காடு வேங்கடசுப்பய்யரின் ''பால்வடியும் முகம்'' என்ற நாட்டகுறிஞ்சி கீர்த்தனைக்கு அவர்கள் மாறி மாறி ஆடிய நடன வின்யாசங்களும், அருணாசலக் கவியின் 'சரணம், சரணம்' என்ற அசாவேரி கீர்த்தனத்துக்குப் பிடித்த அபிநயங்களும் மனோகரமாக இருந்தன. நடனங்களுக்குப் பின்னணி இசை வழங்கி நட்டுவாங்கத்தையும் மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்த இம் மாணவிகளின் ஆசிரியை ஸ்ரீமதி சரஸாவின் இனிய கானத்தைப் பிரத்தியேகமாகச் சொல்ல வேண்டும். தலைமை தாங்கிய கலாரசிகர் ஸ்ரீ எஸ். வெங்கடேசுவரனும் சொற்பொழிவாற்றிய பேராசிரியர் பி. சாம்பமூர்த்தியும் நடனத்தின் சிறப்பைப் பாராட்டினர்.





"என்ன சார்! உங்க மனைவிக்குக் காகிதப்பூ வாங்கிண்டு போகிறீர்?"
"அவள் டிரஸ் பண்ணிண்டு வெளியில் கிளம்புவதற்குள் நிஜப்பூ வாடிப் போயிடறது!"
"பண்டங்கள் வீணாகிறது! நான் ஒன்று சொல்லுவேன், கேட்பாயா?"
"என்ன?"
"விலைவாசிகள் குறைந்த பிறகு நீ சமையல் செய்யக் கற்றுக் கொள்ள ஆரம்பியேன்!"
"அந்த மந்திரவாதி என்னிடம் பத்து ரூபாய் நோட்டு கேட்டு அதை மறையச் செய்கிறேன் என்றான்!"
"கொடுத்தீரா?"
"கொடுத்தேன்!"
"மறைந்ததா?"
"அவனே மறைந்துவிட்டான்!"
"நம் சிப்பந்திகளில் ஒருவர் ரிடையர் ஆகிறார். அவர் எப்பொழுதும் இந்தக் கடிகாரத்தையே பார்த்து வேலை செய்பவர். அதனால் இக்கடிகாரத்தையே அவருக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்!"
ஆப்பரேஷன் தியேட்டர்
"அட அம்மா இரு! அலறாதே! அவை ஆப்பரேஷன் பண்ணுற ஆயுதங்கள் இல்லை. அவர் தச்சனார்; ரிப்பேருக்குப் போகிறார்."

டிக்–20க்குப் புதிய அடக்க உறை



உள்ளூர் வரிகள் தனி

மட்டமான போலிகளை வாங்கி நீங்கள் ஏமாறக்கூடாதல்லவா ? அசல் சரக்கு என்னும் உறுதியை அளிக்கும் புதிய, எடுப்பான வெள்ளை உறையினுள் அடக்கமிடப்பட்டு வருகிறது டிக்-20. கவனித்து வாங்கத் தவறாதீர்கள்!



மூட்டைப் பூச்சிகளின் எமன் டிக்-20: மூட்டைப் பூச்சிகளை உடனடியாகக் கொல்லும் டயஸினான் என்ற சக்தி மிக்க, சடுதியில் வேலை செய்யும் பூச்சி மருந்து அதில் கலந்துள்ளது. மற்ற தயாரிப்புகள் செய்ய முயன்றிருக்கும் சாதனைகளைச் செய்து முடிக்கிறது டிக்-20. பின் கேட்கவேண்டுமா புகழுக்கு? போலிகள் தோன்றுவதும் இயற்கைதானே!

உபயோகிக்க எளிதானது டிக்-20: பூச்சி மருந்துப் பம்பில் இரு குவ்லாட்டுயளவு டிக்-20ஐ விட்டு, பின் மண்ணெண்ணெய் அல்லது நீரை நிரப்பவும். நன்றாகக் கலக்கி, உபயோகிக்கவும்.

சிக்கனம் மிக்கது டிக்-20
சிறிதளவு டிக்-20-ஐ ஒரேயொரு முறை, செம்மையாகத் தெளித்தால் போதும். மூட்டைப் பூச்சிகளை அது விரைவில் கொல்வதுடன், நெடு நேரம் பயன்தரக்கூடிய 'விஷமூட்ட'த்தையும் ஏற்படுத்துகிறது. ஒரு சீசா டிக்-20 குறைந்தது 6 மாத காலத்துக்கு மூட்டைப் பூச்சிகளிடமிருந்து உங்கள் வீட்டைப் பாதுகாக்கிறது. தவிர, கரப்பான் பூச்சிகளையும் எறும்புகளையும் கட்டுப்படுத்தவும் உதவுகிறது டிக்-20.

ஒரு டாடா-பைஸன் தயாரிப்பு

சிரவண பெலகோலா கோமதேசுவரர்


தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

எகிப்து நாட்டுச் சிற்ப வடிவங்கள் தொன்மையானவை, சிறப்புடையவை, மேன்மை மிக்கவை என்பர். ஏன், நமக்குத் தெரியுமே அங்குள்ள பிரமிட்கள் உலகப் பிரசித்தி பெற்றவை என்று. அங்குள்ள சிலைகளில், தனிப்பட்ட உருவச் சிலைகளில் பெரியது சிறந்தது ரமேசஸ் என்ற அரசனின் சிலைதான். கி. மு. பதின்மூன்றும் ஆண்டில் ஆண்ட அரசன் அவன். ஆம், மூவாயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்திருக்கிறான். அவன் வடிவில் சமைத்த சிலையே உருவத்தால் பெரியது, வனப்பில் சிறந்தது என்பது மேலை நாட்டுக் கலை விமர்சகர்களது அபிப்பிராயம். ஆனால் பெர்கூஸன் என்ற விமர்சகர் சொல்கிறார்: இந்த ரமேசஸ் சிலையைவிட உயரமானதும், கம்பீரமானதும் மிக்க அழகு வாய்ந்ததுமான சிலை ஒன்று இந்தியாவில் இருக்கிறது. அந்தச் சிலைதான் சிரவண பெலகோலாவில் இருக்கும் கோமதேசுவரர் சிலை. இச் சிலை இருப்பது ஒரு மலையின் உச்சியில்; சிலையின் உயரம் ஐம்பத்தெட்டு அடி. இவ்வளவு பிரம்மாண்டமான கம்பீரமான சிலை உலகத்தில் வேறு எந்தப் பாகத்திலுமே இல்லையாம். இந்தச் சிலை வடிவை நாம் காண வேண்டாமா? அந்த வடிவினைக் காணவே நாம் சிரவண பெலகோலா என்ற தலத்துக்குச் செல்கிறோம் இன்று.

சிரவண பெலகோலா மைசூர் ராஜ்யத்தில் சென்னராய பட்டணத்துக்குத் தெற்கே எட்டு மைல் தொலைவில் இருக்கிறது. ரயிலில் போவதானால் மைசூரிலிருந்து ஹாஸனுக்குப் போய் அங்கிருந்து முப்பத்தொரு மைல் கிழக்கு நோக்கி வர வேணும். இல்லை, காரிலேயே போவதானால் மைசூரிலிருந்து வடக்கு நோக்கி அறுபத்திரண்டு மைல் போக வேணும். பங்களூரிலிருந்து தொண்ணூற்று ஒன்பது மைல் மேற்கே போனாலும் போய்ச் சேரலாம். சென்னராய பட்டணம் வரை நல்ல பஸ் வசதிகள் உண்டு. அதன்பின் வண்டி வைத்துத்தான் செல்ல வேணும். இதென்ன சிரவண பெலகோலா கோமதேசுவரர் என்றெல்லாம் சொல்கிறீர்கள். வாய்க்குள் நுழைய மாட்டேனென்கிறதே என்றுதானே நினைக்கிறீர்கள். ஆம், அவையெல்லாம் சமண மதத்தைச் சேர்ந்தவை. நமக்கு முன்பின் பழக்கமானவை அல்லதான். ஆனால் சிரவணபெலகோலா என்றால் சிரவணன் என்ற ஜைன முனிவரால் அமைக்கப்பட்ட வெள்ளைக் குளம். பெல என்றால் கன்னடத்தில் வெள்ளை நிறம்; கோலா என்றால் குளமாம். இதனையே சமஸ்கிருதத்தில் சொன்னால் ஸ்வேதசரோவரம் என்றும் சொல்லலாம். இல்லை, தமிழிலேயே சொல்ல விரும்பினால் பால்குளம் என்று கூறிவிடலாம். ஒரு பழம் குடுக்கையில் கொண்டு வந்த பாலால் கோமதேசுவரரை ஒரு பெண்மணி அபிஷேகம் செய்ய அந்தப் பால் பெருகிக் குளமாய் நின்ற காரணத்தால், இதனைப் பால் குளம், ஸ்வேத சரோவரம், பெலகோலா என்றெல்லாம் அழைத்திருக்கிறார்கள்.

சரிதான் — பெலகோலாவுக்கு விளக்கம் சொல்லி விட்டீர். இந்தக் கோமதேசுவரர் யார் என்று அறிமுகப்படுத்த வில்லையே என்கிறீர்களா? ஒரு வேளை இவர் நமது அன்னை கோமதியின் கணவரான சங்கரன்தானோ என்று சந்தேகிக்கிறீர்களா? ஒன்று சொல்லி விடுகிறேன். சங்கரன் கோவிலில் கோயில் கொண்டிருக்கும் கோமதிக்கும் இந்தக் கோமதேசுவரருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. சைவ கோமதி வேறு: சமண கோமதேசுவரர் வேறு. ஜைனர்கள் வணங்கும் தீர்த்தங்கரர்களில் முதல்வர் புருதேவர் என்பர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பரதன், இளையவன் பாகுபலி என்றும் புஜபலி என்றும் பெயர் பெற்றவன். தந்தை ஆண்ட ராஜ்யத்தை ஆளுவதற்கு அண்ணனும் தம்பியுமே போரிட்டிருக்கிறார்கள். போரில் இளையவனான புஜபலியே வென்றிருக்கிறான். ஆனால் போரில் நடந்த உயிர்ப் பலியை யெல்லாம் புஜபலி கண்டு மனம் நொந்து, தான் வெற்றி கண்டு பெற்ற ராஜ்யத்தை அண்ணனான பரதனிடமே கொடுத்து விட்டுத் தான் துறவியாக மாறியிருக்கிறான். துறவிலும் வெற்றி கண்டு, உலகம் முழுவதையுமே, ஆம், ஆடை அணிகளையும் துறந்தவனாக நின்றிருக்கிறான். இந்தப் புஜபலி என்ற துறவியையே கோமதேசுவரன் என்று அழைத்திருக்கிறான் அவனது அண்ணனான பரதன். பௌதான புரத்தில் தம்பியாம் துறவிக்குச் சிலை அமைத்து வணங்கியிருக்கிறான். நாளடைவில் அந்தச் சிலை புதர் மண்டி, இருந்த இடம் தெரியாமலேயே போகிறது. பின்னர் மதுரை ஆண்ட சாமுண்டராயன் என்னும் அரசன், கோமதேசுவரரது தியாகம், துறவு எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவனுக்கு ஒரு சிலை அமைக்க எண்ணியிருக்கிறான். ஏதோ பூமியின் தளத்தில் சிலை அமைத்தால்

கோமதேசுவரர் சிலை





மலையும் குளமும்

தானே புதர் மண்டும்? மலையின் உச்சியிலேயே அமைத்து விட்டால் அதற்கு அழிவேது என்று கருதியவனும், இந்திரகிரி என்னும் மலைச் சிகரத்திலே மலையையே வெட்டிச் செதுக்கிக் கோமதேசுவரனை ஓர் அற்புதமான சிலையாகச் செய்து நிறுத்தியிருக்கிறான். இதுதான் இப்போது இருக்கும் கோமதேசுவரனது சிலையின் கதை. இந்தக் கோமதேசுவரர் இப்படி உருவானது 978ம் வருஷத்தில். ஆம், தமிழ் நாட்டில் சோழன் பெரிய கோயிலைக் கட்டிப் பெருவுடையாரை ஸ்தாபித்தானே ஏறக்குறைய அதே காலத்தில்தான். இதே கோமதேசுவரன் இன்னும் இரண்டு இடங்களில் சிலை வடிவம் பெற்றிருக்கிறான். இரண்டும் தென்கன்னடம் ஜில்லாவில் கர்க்கலா என்ற இடத்திலும் என்னூர் என்ற இடத்திலும் நிற்கின்றன; இவைகளில் கர்க்கலாவில் நிற்பது நாற்பத்தைந்து அடி உயரம் உடையது. என்னூரில் இருப்பது முப்பத்தைந்தடி உயரம் மட்டுமே உடையது. ஆனால் சிரவண பெலகோலாவில் உருவாகியிருப்பது ஐம்பத்தெட்டு அடி உயரத்தில். ஆதலால் இந்தச் சிலையே மிக்க உயர்வானது என்பர் கலைஞர்கள். இதுவே சிறப்பானது என்பர் சமணர்கள். இத்தனை விஷயங்களையும் தெரிந்து கொண்ட பின்னரே இந்தத் தலத்துக்குச் செல்வது நல்லது.

காரில் சென்றால் நாம் முதலில் ஊருக்கு மத்தியில் உள்ள குளக்கரை சென்று சேரலாம். இதனையே கல்யாணி குளம் என்று அழைக்கின்றனர். இக்குளத்தைச் சுற்றி நல்ல படிக்கட்டுகள் கட்டி வைத்திருக்கிறார்கள். வடபுறம் ஒரு மண்டபம் அமைத்திருக்கிறார்கள். அம்மண்டபத்திலுள்ள தூண்களில் இக்குளத்தை வெட்டியவன் சிக்கதேவ ராஜேந்திரன் என்றும் பொறித்துவைத்திருக்கிறார்கள். இந்தக் குளத்துக்கு வடபுறம் ஒரு மலையும், தென்புறம் ஒரு மலையும் இருக்கின்றன. வடபுறம் இருப்பது சந்திரகிரி. தென்புறம் இருப்பது இந்திரகிரி. நாம் காண வந்திருப்பது கோமதேசுவரரை. அவர் இருப்பது சந்திர கிரியில்தான். இந்த மலை அடிவாரத்தில் இருந்து நானூற்று எழுபது அடி உயரம் இருக்கிறது. இதன் சுற்றளவு கால் மைல் இருக்கும். இனி மலை ஏற வேண்டியதுதான். மலையில் படிகள் வெட்டியிருக்கிறார்கள். சுமார் ஐந்நூறு படிகள் ஏறினால்தான் கோமதேசுவரரைக் காண முடியும். ஒரே ஒரு எச்சரிக்கை. மலை வழியில் மண்டபங்கள் ஒன்றும் கிடையாது. ஆதலால் காலை ஒன்பது மணிக்குள் ஏறிப் பத்து மணிக்குள் திரும்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் பாறையில் அடிக்கும் வெய்யிலில் காலை வைத்து ஏறவே முடியாது.

மலையடிவாரத்தில் பிரமதேவருக்கு ஒரு கோயில் இருக்கிறது. இவரை ஜரு கப்பே அப்பா என்கின்றனர். மலையின் உச்சியில் கோட்டை போல் ஒரு சுவர் எழுப்பியிருக்கிறார்கள். அந்தக் கோட்டைச் சுவருக்குள்ளேதான் சில கோயில்கள் இருக்கின்றன. முதலில் நாம் சென்று சேர்வது சவுச தீர்த்தங்கரபஸ்திக்குத்தான். அது ஒரு சிறு கோயில், கருவறையில் இருபத்தொரு தீர்த்தங்கரரது வடிவங்கள், உட்கார்ந்திருக்கும் பாவனையில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலுக்கு மேற்கே இருப்பது சென்னண பஸ்தி. இங்கு கோயில் கொண்டிருப்பவர் ஆதிநாதர். இவரது கோயில் வாயிலிலே ஒரு மான ஸ்தம்பம் நிற்கிறது. இதன் பக்கத்திலே இருப்பது ஒடேகல் பஸ்தி. இதனையே திரிகூட பஸ்தி என்கின்றனர். இங்கு மூன்று கருவறைகள் இருக்கின்றன. இது ஹொய்சல மன்னர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். இங்கு கோயில் கொண்டிருப்பவர் ஆதிநாதர், நேமி நாதர், ரிஷப நாதர் என்பவர்கள். இவர்களில் ஆதிநாதர் என்பவர்தாம் புரு தேவர். அவர்தான் கோமதேசுவரர் தந்தை. இனிதான் கோமதேசுவரர் கோயில் கொண்டிருக்கும் இடத்துக்குப் படியேறிச் செல்ல வேணும். கோயில் வாயிலில் தியாகட பிரமதேவர் தூண் ஒன்றிருக்கிறது. இதனைத் தவிர்க் கொடிகள் சுற்றியிருப்பது போல் அமைத்திருக்கிறார்கள். கலை அழகு நிரம்பிய தூண் இது. இந்தத் தூணைச் சுற்றிக் கொண்டு கோயில் வாயிலாம் அகண்ட துவாரத்துக்குள் நுழைந்து மேற்செல்ல வேணும். கோயில் வாயிலில் மேற்கு நோக்கியவண்ணம் ஒரு சித்திரம் இதற்கு எதிர்த் திசையில் குல்ல கயாஜி என்ற பெண்ணின் வடிவமும் இருக்கின்றன. இந்தக் குல்ல கயாஜி என்ற பெண்தான் ஒரு குடுவையில் பால் கொண்டு வந்து கோமதேசுவரருக்கு அபிஷேகம் செய்திருக்கிறாள்; அந்தப் பாலே பெலி குளமாகப் பெருகியிருக்கிறது. இவர்களையெல்லாம் வணங்கி விட்டே உள் பிராகாரம் செல்ல வேணும்.

அங்குதான் வானம் மணிமுடியாய், ஐம்பத்தெட்டு அடி உயரத்தில் கோமதேசுவரர் நிற்கிறார். அன்று மண்ணை அளக்க மால் வளர்ந்து நின்றான் என்று திரிவிக்கிரமனை நினைத்திருக்கிறோம். அந்தத் திரிவிக்கிரமன் வடிவம் எல்லாம் சிறிய வடிவமாகவே இருக்கப் பார்த்திருக்கிறோம். இங்கே வானுற நிமிர்ந்து நிற்கும் கோமதேசுவரரைப் பார்த்த பிறகுதான் எப்படித் திரிவிக்கிரமன் வளர்ந்திருப்பான் என்று கற்பனை செய்து கொள்ளத் தோன்றும். உயரத்துக்கு ஏற்ற மார்பு;



உடல் வளைவுகளுக்கேற்றப்போல் அமுக்கப் பட்ட ஆசனமும், முதுகுச்சாய்மானமும் மகிழ்ச்சியூட்டும் வசதியை அளிக்கக்கூடிய உருதியான எஃகு குழாயினால் செய்யப்பட்ட உலோகப் பாகங்களெல்லாம் வாட்டி பெறுக் கும் முறையில் எனமல் பூசப்பட்டுத் துருப் பிடிக்காமல் செய்யப்பட்ட நாற்காலியை வாங்குங்கள்.

சிறந்த தரத்தில் அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பாண்டரைஸ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் வாட்டி எனமல் பூசப்பட்டது.
- ஆசனம் மற்றும் முதுகுச் சாய்மானத்தின் அமைப்பு அதிக வசதியை அளிக்கிறது.
- சாத் துணியைக்கொண்டே துடைத்து எளிதில் சுத்தமாகவைத்துக்கொள்ளலாம்.
- மடக்குவதற்கு விசேஷ அமைப்பு.
- வழுக்கிவிடாத, தரையைக் கீறாத, ரப்பர் அடிகள் கொண்டது.
- பல்வேறு வர்ணங்களில் கிடைக்கக் கூடியது.

CROMELITE
MANUFACTURING

ஆயிரம் காலம்
ஆள்வதற்கு

தயாரிப்போர்:
க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.
பி-35 இந்தியா எக்ஸ்சேஞ்சு ப்லேஸ், கல்கத்தா-1

விநியோகஸ்தர்கள்:
மெஸ்ஸார்ஸ் ஆடிலேன் & கோ. லிட்., சென்னை, பெங்களூர். மெஸ்ஸார்ஸ் பாலா கிளாஸ் & க்ரோக்கரிஸ் பிரைவேட் லிட். சென்னை, பெங்களூர், எர்ணாகுளம், ஹைதராபாத். மெஸ்ஸார்ஸ் ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்., சென்னை, பெங்களூர், செகந்தராபாத். மெஸ்ஸார்ஸ் மைசூத் இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை, பெங்களூர், ஹைதராபாத். மெஸ்ஸார்ஸ் ரோனியோ லிட்., சென்னை, ஹைதராபாத். மெஸ்ஸார்ஸ் ஸ்பென்ஸர் & கோ லிட்., 1/153, மவுண்ட் ரோடு, சென்னை.


இருபத்தி நான்கு அடி அகலம். அன்று வாணர் குலத்து வீரன் ஒருவனைப் பற்றிப் புலவன் ஒருவன் பாடினான்:

பேரரசர் தேவிமார்
  பெற்ற மழலையர்தம்
மார்பகலம் கண்டு
  மகிழ்வரே — போர்புரிய
வல்லான் அகளங்கன்
  வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று

இதைப் போல் நாமும் இந்தக் கோமதேசுவரனது மார்பகலம் கண்டு மகிழலாம். இந்த அற்புதச் சிற்ப வடிவில் காத்திரம் சிறப்பானது என்றில்லை. அந்த முகத்தில் இருக்கின்ற அழகு இருக்கிறதே அது சொல்லும் திறத்தது அன்று. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதோடு, இந்த உலக மக்கள் படும் துயரத்தையெல்லாம் நினைந்து அதை நிவர்த்திக்க வழி வகுக்கும் முறையில் உதடுகளில் ஒரு புன்னகையைத் தவழ விட்டிருக்கும் நிலை இருக்கிறதே அது பிரமாதமாக இருக்கிறது. இடுப்புக்கு மேல் உள்ள அளவுக்கு இடுப்புக்குக் கீழ் உள்ள அளவு காணாது என்று அங்க நிர்மாண சாஸ்திரம் அறிந்தவர் குறை கூறலாம். ஆனால் ஒரே பாறையில் இப்படி ஓர் அற்புத சிருஷ்டியை உருவாக்கி யிருக்கிறதைக் கண்டு அதிசயிக்காமல் இருக்க முடியாது. அதிலும் தொடை வரையே பக்க பலம் அமைத்து, அதன்பின் யாதொரு பலமும் இல்லாமலே சிலை செதுக்கியுள்ள நேர்த்தி வியப்பையே ஊட்டும். இந்த வடிவுக்கு அபிஷேகம் நடப்பது பல ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். கடைசியாக நடந்தது 1953-ல்தான். இந்தப் பெரிய கோமதேசுவரர் காலடியில் கோமதேசுவரரது செப்புச் சிலை வடிவம் ஒன்று இருக்கிறது. பக்கத்திலே சாமரை ஏந்திய யக்ஷன் ஒருவனும், யக்ஷணி ஒருத்தியும் ஆறு அடி உயரத்தில் நிற்கிறார்கள். பக்கத்திலேயே அபிஷேக நீர் தங்கும் லலிதசரோவரம் என்னும் குழி ஒன்றும் இருக்கிறது.

இந்தக் கோமதேசுவரைச் சுற்றிக் கட்டியிருக்கும் மண்டபங்களிலே தீர்த்தங்கரரது வடிவங்கள் இருக்கின்றன. இருபத்து நான்கு தீர்த்தங்கரரது வடிவங்களும் இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. இந்தக் கோமதேசுவரர் தீர்த்தங்கரர்களை யெல்லாம் வந்தித்து வணங்கியபின் மலையிலிருந்து கீழ் இறங்கலாம்.

இதன்பின் அவகாசம் இருப்பவர்கள் பக்கத்தில் உள்ள சின்ன மலையாகிய சந்திர கிரியிலும் ஏறலாம். இது 175 அடி உயரம் உள்ள சின்ன மலை. இங்கு கிட்டத்தட்ட எல்லாக் கோயில்களுமே ஒரு கோட்டைக்குள்ளே இருக்கின்றன. அவைகளின் சிறப்பு என்னவென்றால், அவை எல்லாமே நம் தமிழ் நாட்டுக் கோயில்களைப் போலவே திராவிட சிற்ப முறையில் அமைந்திருக்கும். இவைகளில் முக்கியமானவை சாந்திநாத பஸ்தி, பார்சவநாத பஸ்தி, சந்திரகுப்த பஸ்தி, சாமுண்டராய பஸ்தி என்பவையே.



தமிழக சர்க்கார் காரியதரிசி திரு டி. கே. பழனியப்பன் அவர்களின் புதல்வி சௌ. சண்முக குமாரிக்கும் திரு சோமசுந்தரத்துக்கும் மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்குச் சென்னை நகரப் பிரமுகர்களும் மந்திரிகளும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

இங்குள்ள மகாநவமி மண்டபம், அதிலுள்ள தூண்கள் எல்லாம் நல்ல சிற்ப வேலைப்பாடு அமைந்தவை.

ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. இத்தலத்திலுள்ள கோமதேசுவரர், தீர்த்தங்கரர், பரதேசுவரர் முதலிய வடிவங்கள் எல்லாமே திகம்பர வடிவங்கள். ஆடை ஒன்றும் அணியாது பூரண நிர்வாண நிலையிலேயே இருப்பவர்கள். இவர்களைப் பார்க்கும்போது இரண்டு நகைக்சுவைத் துணுக்குகள் ஞாபகத்துக்கு வரும். தமிழ் நாட்டில் ஓர் ஏர் வைத்து உழுது விவசாயம் செய்து அதனால் பொருள் எல்லாம் இழந்து, ஒரே கோவணத்துடன் ஓடிய விவசாயி, இந்தச் சமண விக்கிரகம் ஒன்றைப் பார்த்த போது, 'ஐயனே, நான் ஓர் ஏர் வைத்து விவசாயம் செய்து இந்தக் கோவணத்தோடு இருக்கிறேன். நீ எத்தனை ஏர் வைத்து விவசாயம் செய்து இப்படிக் கோவணமும் இல்லாமல் நிற்கிறாய்?' என்று கேட்டானாம். இந்தத் திகம்பர வடிவங்களைக் கம்பனும் கண்டிருக்கிறான். இந்திரசித்தனை இலக்குவன் கொன்று தீர்த்து விட்டான் என்பதை அறிந்த தேவர்கள் எல்லாம், தங்கள் ஆடைகள் அவிழும் வண்ணம் ஆடிப்பாடி யிருக்கிறார்கள். இதைச் சொல்கிறான் கம்பன்:

எல்லோரும் தூசுநீக்கி
  ஏறிட ஆர்த்தபோது
கொல்லாத விரதத்தார்தம்
  கடவுளர் கூட்டமொத்தார்

கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க உதவி செய்த இந்தச் சமண முனிவர் பெருமக்களும் நகையாடுவதற்கு உரியவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஆம், அப்படித்தான் இருக்கிறது உலகம்.



அத்தியாயம் 12

வெறுப்பு

இரவு முகாமுக்குத் திரும்பவில்லையென்றால் அதனை எவ்வளவு பெரிய குற்றமாகக் கருதுவார்கள் என்பது வடிவேலுவுக்கு நன்றாகத் தெரியும். அரை மயக்க நிலையிலிருந்து விடுபட்டுக் கண் விழித்துக் காலைக் கதிரொளியைக் கண்டதுமே கடுமையான தண்டனையையும் எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டான் அவன். தேகத்தின் தடுமாற்றத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் கால்கள் பின்னியபடி நடந்து தெருவை அடைந்தபோது, மேலிடத்தில் புகார் செய்து தன்னை வகையாக மாட்டி வைத்துவிடப்போகிறான் மைக்கேல் என்று தீர்மானமாக நம்பினான். பட்டாளத்தினர் தண்டு இறங்கியிருந்த இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் அவன் துணிவையும் திரட்டிக் கொண்டிருந்தான். அதிகாரிகளிடம் அழைத்துப் போகப்பட்டால் என்ன? 'ஸ்ரீதர்' மூழ்கியது பற்றிய நியாய அநியாயத்தை அவர்களையே கேட்டு விடுவது என்று முடிவு கட்டினான்.

ஆனால் அவனுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. ராணுவ விதிமுறைகளுக்குப் புறம்பாக அவன் நடந்து கொண்டிருப்பதைக் கேவல்சிங் மைக்கேலின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் கூட லெப்டினண்ட் அதனைப் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை. தண்டனை எதையும் ஏற்கச் செய்யவில்லை; எரிந்து விழவில்லை. ஏனென்றுகூடக் கேட்கவில்லை. மைக்கேல் தன்னை இவ்வளவு இலகுவாக விட்டுவிட்டது அவனுக்கு ஒரே வியப்பாக இருந்தது.

சற்று யோசித்தபோது மைக்கேல் தன்னிடம் எதனாலோ பயப்படுவதாக முடிவுக்கு வந்தான் வடிவேலு. சட்டென்று அவனுக்கு முன்பொரு முறை லெப்டினண்ட் தனக்கு நீண்ட பிரசங்கம் செய்தது நினைவுக்கு வந்தது. 'துப்பாக்கியைச் சுடுவதில் மைக்கேலுக்குள்ள சாமர்த்தியத்தைச் சோதிக்க முற்பட்ட முட்டாள்தனத்துக்காக வெய்யிலிலும் மழையிலும் அவதிப்படவில்லையா நான்? அன்றைய இரவு அவன் இருப்பிடத்துக்குச் சென்று உணவருந்தி என் பசியைத் தீர்த்துக் கொண்டதும் ஏதேதோ கூறிக்கொண்டே போனானே அவன்? தூக்கம் கண்களைச் சுழற்றச் சோர்வடைந்திருந்த

உடலைச் சாய்வு நாற்காலியில் தளர விட்டிருந்த நான் எதையுமே சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை தான். ஆயினும் அவன் அன்று என்ன சொன்னான்? எப்படி ஆரம்பித்தான்? இங்குள்ள பிரிட்டிஷ் சேனைத்தலைவர்களை, அவனைக் காட்டிலும் மிகவும் உன்னத ஸ்தானங்களில் உள்ள ராணுவ உத்தியோகஸ்தர்களை இழித்துரைத்துத் தானே அவன் பேச்சைத் தொடங்கினான்? அவர்களைக் குடிகாரர்கள் என்றும் காமாந்தகர்கள் என்றும் பரிகசிக்கவில்லையா? ஜப்பானியனுடைய யுத்த தந்திரங்களைப் பற்றிய நுணுக்கங்கள் தனக்குத்தான் தெரியும் என்பதுபோல் மார் தட்டவில்லையா? ஆகா! அன்று மட்டும் நான் கண் விழித்திருந்து வார்த்தை விடாமல் அனைத்தையும் கிரகித்துக் கொண்டிருந்தால்? இல்லாவிட்டால்தான் என்ன? எந்தத் தருணத்தில் தூக்கம் என்னை ஆட்கொண்டது என்பதை அவனால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. குடிபோதையில் என்னவெல்லாம் உளறி வைத்தோமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். மேலிடத்துக்கு, என்னை அனுப்பி வைக்க அவன் அஞ்சுவதற்கும் பணிவை எனக்குப் புகட்டுவதில் அதிதீவிர ஆர்வம் காட்டாததற்கும் காரணம் இப்போதல்லவா புரிகிறது? வரம்பு மீறி நான் வம்பு செய்த போதிலும் அன்று அவன் பிதற்றியதையெல்லாம் பகிரங்கமாய்ப் பறைசாற்றி விடுவேனோ என்பதால் தான் அவன் என்னைப் பகைத்துக் கொள்ளாதிருக்கிறானோ?' ஏளனச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது அவனுக்கு. நெஞ்சழுத்தமில்லா வெள்ளையனைத் துச்சமாகக் கருதி நகைத்து நாட்களை ஓட்டினான்.



ராணுவத்தினருக்கு எப்போதும்போல் பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. ஜப்பானியத் தாக்குதலைச் சமாளிக்கச் சகல ஏற்பாடுகளையும் செய்வதில் மும்முரமாய் முனைந்திருந்தனர் ஆங்கிலேயர். ஆனால் ஜப்பானியனைத்தான் காணோம். 'இதோ வரப்போகிறான்! நாளை வந்தே விடுவான்!' என்று கலவரமடைந்த காலம் போக, வந்து தொலைக்க மாட்டானா என்ற ஏக்கமே நிலவியது பலர் மனங்களில். வராமலே இருந்து விடுவானோ என்று ஏமாற்றமடைவதற்கும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர் சிலர். இந்த நிலையில் வீரர்கள் தாற்காலிகமாகத் துணியினால் உருவாக்கப்பட்ட ஜப்பானியனைக் குத்திக் கொல்வதோடு திருப்தியடைய வேண்டியதாயிற்று. மைதானத்தின் மத்தியில் நெட்டுக் குத்தாக இரண்டு கழிகளை நட்டு அவற்றின் உச்சியில் ஒரு குறுக்குச் சட்டத்தையும் பிணைத்து அந்த விட்டத்திலிருந்து அவனைத் தொங்க விட்டிருந்தார்கள். பஞ்சடைக்கப்பட்ட ஜப்பானியக் குள்ளனுக்குப் பூசணிக்காய் அளவுக்கு உருண்டைத் தலை; உடம்பாக ஒரு கனமான உருளை, கைகால்களாக மேலும் நான்கு மெல்லிய உருளைகள்— இவை இருந்தன. பின்னால் அந்தத் தீவினரைப் பிணங்களாகக் கொன்று குவிக்க முன்னேற்பாடாகத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு. இப்படிப் பல உயிரற்ற ஜப்பானியரைச் சிருஷ்டிக்கும் உதவாக்கரை பிரும்மாக்களாக மாறியிருந்தனர் சில சிப்பாய்கள். ஓவியக் கலையில் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்றதோடு பொல்லாத்தனமும் நிறைந்த வீரன் ஒருவன், யாரும் காணாத போதில் தன் கைவரிசையை அந்தச் சோளக் கொல்லைப் பொம்மைகளிடம் காட்டியிருந்தான். மறுநாள் காலையில் மற்றவர்கள் எழுந்து பார்க்கும் போது — என்ன பயங்கரம்? தூக்கிவிடப்பட்டுக் காற்றிலே மெல்ல ஊசலாடும் பத்துப் பதினைந்து ஜப்பானியர்கள் காட்சியளித்தார்கள்! மூர்க்கத்தனத்தை வெளிப்படுத்தும் முகத்தில், கொடூரத்தைக் காட்டும் கண்களும், அரக்கத்தன்மையைப் புலப்படுத்தும் கத்தி போன்ற பற்களும், தட்டை மூக்கும், கோணல் உதடுகளும், நறுக்கு மீசையும் ஜப்பானியர் நரன்களல்ல, நரகத்திலிருந்து இறங்கி வந்த யம கிங்கரர்கள் என்றே நினைக்கச் செய்தன! தலையில் கவிழ்க்கப்பட்டிருந்த பழைய குல்லாய்கள் வேஷத்தைப் பூர்த்தி செய்தன. முன்னணியில் தொங்கி அசைந்தாடி உயர் பதவி வகிக்கக் கூடியவனாக விளங்கிய ஜப்பானிய

னுக்கு ஒரு மூக்குக் கண்ணாடியும் வரைந்திருந்தான் விஷமக்காரச் சைத்திரிகன்.

மைக்கேலுக்கு இந்தக் கோரக் காட்சியைக் கண்டதும் ஆனந்தம் தாங்க முடியவில்லை! ''இவன் மார்பிலே முதன் முதலில் ஈட்டியைச் செருகுகிற பெருமையை எனக்குக் கொடுங்கள்'' என்று விட்டு அருகிலிருந்த ஒரு சிப்பாயிடம் துப்பாக்கியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். ஈட்டியை அதன் முனையில் பொருத்தி ஜப்பானியத் தளபதியின் மார்பைக் குறி பார்த்தவாறே கூனிக் குனிந்து கொண்டு ஓடினான். ஈட்டி நெஞ்சைத் துளைத்தது. முதுகில் எட்டிப் பார்த்தது. கணப்பொழுதில் துப்பாக்கியை விடுவித்துக் கொண்டு அப்பால் நகர்ந்தான் மைக்கேல். குருதி பீறிடவில்லை, மரண ஓலம் எழவில்லை. பஞ்சுத் துகள்கள் கொஞ்சம் பறந்தன. அவ்வளவுதான்.

மைக்கேலுடைய திறமையைப் பார்த்துச் சிப்பாய்களிடையே சந்தோஷ ஆரவாரம் எழுந்தது.

ஆனால் பயிற்சியில் அவர்கள் ஈடுபடத் தொடங்கிய பிறகு மகிழ்ச்சி நீடிக்கவில்லை. பஞ்சுப் பொதியை அவர்கள் குத்துகிற வேகம் போதாதென்று கோபித்தான் மைக்கேல்; உடலில் சிக்குண்ட கத்தியை உருவி எடுக்கிற நேரம் அதிகம் என்று ஆத்திரம் அடைந்தான்; பாய்ந்தோடுகிற பாணி சரியில்லை என்றான்; பன்முறை பயிலுமாறு பாடாய்ப்படுத்தி வைத்தான். ஆளை விட்டால் போதுமென்றாகிவிட்டது பட்டாளத்தினருக்கு.

நுனியில் இரும்பு வளையம் பொருத்தப்பட்ட நீண்ட கழியை ஒருவன் தூக்கிப் பிடித்துக் கொள்ள, சிப்பாய்கள் தொலைவிலிருந்து ஓடி வந்து, வந்த வேகத்திலேயே நேராக அந்த வளையத்தினுள் துப்பாக்கியின் ஈட்டி முனையைச் செருகினார்கள். இதில் அணுவளவு பிசகினாலும் அருகிலேயே இருந்தான் மைக்கேல், அவர்களை அதட்டி உருட்டி மிரட்டுவதற்கு. இன்னும் கைக் குண்டு, புகைக் குண்டு, 'மார்டர், லைட்மிஷின்' கன்கள் இவற்றைப் பிரயோகிக்கும் விதங்களில் தேர்ச்சி பெற்றனர். விமானத்திலிருந்து விழக் கூடிய குண்டுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தவழ்ந்து முன்னேறவும், குழி பறித்துப் பதுங்கியபடி போராடவும் கற்றுக் கொண்டனர். தேகப் பயிற்சிகளும், விளையாட்டுக்களும், லெப்ட் — ரைட் போட்டு 'மார்ச்' பண்ணுவதும் அன்றாட நிகழ்ச்சிகள். ஆரோக்கியத்துடன் அவர்கள் விளங்கினால் போதாது, திடகாத்திரர்களாகவும் பலசாலிகளாகவும் திகழ வேண்டும்; அதோடு அந்தத் தீபகர்ப்பத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும், பூகோள அமைப்பு அவர்களுக்குப் பழக்கமாக வேண்டும். மலாயாவில் உள்ள அடர்ந்த காடுகளில்— கொடிய விலங்கினங்களும், அவற்றைக் காட்டிலும் பயங்கரமான மலேரியாக் கொசுக்களும் நிறைந்த வனங்களில் — தொடர்ந்து சில தினங்களேனும் தங்கியிருக்கச் சித்தமாயுள்ளவர்களையே நன்கு பயிற்சி பெற்ற சிப்பாய்களெனக் கருத முடியும் என்பதை ராணுவ அதிகாரிகள் அறியாமல் போகவில்லை.

வீரர்கள் எவ்வளவுதான் திறமையாகச் செயல்பட்ட போதிலும் மைக்கேல் அதிருப்தியையே வெளிக் காண்பித்துக் கொண்டான். கசக்கிப் பிழிவதிலேயே கண்ணாயிருந்தான்; குற்றங் குறைகளைக் கண்டுபிடித்துக் குத்திக் காட்டுவதிலேயே கருத்தாயிருந்தான். ஒருவன் புரிந்த தவற்றுக்காக அனைவரிடமும் எரிந்து விழுந்தான். உயிரை விட்டு உழைத்தாலும் அவனுக்குப் போதவில்லை.


''உதவாக்கரைகள்! சோம்பேறிகள்!'' என்று ஏசினான் காப்டன் மைக்கேல் ஒரு நாள். புதிதாகக் கிடைத்திருந்த பதவி உயர்வு புதுத் தெம்பை அளித்திருந்தது. ஆணவத்தை அதிகரித்திருந்தது. ''உங்களையெல்லாம் சுவரோடு சுவராக வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ள வேண்டும்!''

''அவ்வளவு சிரமப்படுவானேன்? சுட்டுத் தள்ளுவது மனத்துக்குச் சங்கடமளிக்கும்; சிரமமான காரியம்; அருவருப்பைத் தருகிற விஷயம். சுருண்டு செத்து விழுந்தவர்களைக் குழி தோண்டிப் புதைக்கிற வேலை வேறு பாக்கியிருந்து தொல்லை கொடுக்கும். அதைக் காட்டிலும் அனைவரையும் கப்பலேற்றி அதனைக் கடற்கண்ணி ஒன்றில் மோத விடுங்கள். கருமீன்களுக்கு இரையாக்குங்கள்! சுலபமாக முடிந்து போகும் உங்கள் எண்ணம்! ரத்தக் கறை படாது உங்கள் விரல்களில்!''

பக்கத்தில் நின்று கொண்டிருந்த வடிவேலு இவ்வாறு பேசியது வேறு யார் செவிகளிலும் விழுந்திருக்காது. உரக்கப் பேசிக் காப்டன் மைக்கேலை அவமானப்படுத்தவும் அவனுக்கு ஆசையில்லை. காப்டனுக்கு மாத்திரம் கேட்கிறமாதிரியாக மெதுவாகத்தான் முணுமுணுத்தான். அதற்கே நாலு மணி

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
சிவப்பு லேபில்

**இருமல், ஜலதோஷம், இன்ப்ளூயென்ஸா
மூச்சுக்குழல் தொற்றுநோய்கள்
காசநோய் ஆகியவற்றிற்குச் சிறந்தது.**



**வெறும்
மருந்து
மட்டுமல்ல
நம்பிக்
கைக்குப்
பாத்திர
மான
டானிக்கும்
இதுவே.**


காலத்தால் தேறிக் கைவந்த மருத்துவ நியதிகளுக்கு இணங்கத் தயாரிக்கப்படும், நம்பிக்கைக்குரிய டானிக்காகிய வாட்டர்பரீஸ் காம்பவுண்ட், மருத்துவத் துறையினர்களால் பெரிதும் சிபார்சு செய்யப்படுகின்றது.

மருந்தாகப் பயன்படும்: இருமலையும், ஜலதோஷங்களையும் சட்டென்று வன்மையாகக் கண்டித்து... நுரையீரல்களைத் தெளிவுறச் செய்யும் கபமறுக்கும் மருந்துகளாகிய கிரியோஸோட், குவயாகால் ஆகிய இரண்டும் வாட்டர்பரீஸ் காம்பவுண்டிலே அடங்கியுள்ளன.

டானிக்காகவும் உதவும்: நோய்களை எதிர்க்கும் சக்தியை உடம்பு தானாகவே உண்டுபண்ணிக்கொள்ளுமாறு உதவுவதோடு மீண்டும் திரும்பிவரும் தொற்றுநோய்களினின்று திண்ணிய பாதுகாப்பை அளிக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்; பசியைத் தூண்டி, ஜீரண சக்திக்குத் துணைபுரிந்து, இரத்தபுஷ்டியளித்து, இழக்கநேர்ந்த தாதுப் பொருள்களுக்கு ஈடுசெய்கிறது.

வார்னர்-லாம்பர்ட் பார்மஸ்யூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது)

WCRY-1-TAM



பின்னியின்
தூய ஸில்க் வேஷ்டி
அங்கவஸ்திரம்
உங்களுக்கு கம்பீரத்
தோற்றத்தை அளிக்கின்றன
இவ்வுயர்ந்த பட்டாடைகள் உங்கள் மேன்மையான தோற்றத்திற்கோர் புதுப் பொலிவும் கௌரவமும் அளிக்கின்றன.
நேர்த்தியான ஜரிகைக் கரைகளுடன் கூடிய இவை அனுமதி பெற்ற பின்னி மில் துணி விற்பனையாளரிடம் கிடைக்கும்.
பெங்களூர் உல்லன், காட்டன் &
ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர்-2
பின்னி & கம்பெனி (மதராஸ்)
லிமிடெட் ஸ்தாபனத்தின் ஒரு பிரிவு

நேரத் தண்டனை கிடைத்தது அவனுக்கு. கேவல்சிங்கைத் தனியே அழைத்து அதனை நிறைவேற்றி வைக்க வேண்டிய சரியான விதத்தை விவரித்து விட்டுத் திரும்பிச் சென்றான் மைக்கேல்.

அதன்படி ஸுபேதார் அவனைக் கூடாரத்துக்கு அழைத்துப் போனான். அங்கே அவனுடைய சாமான்களையெல்லாம் திரட்டிக் கொள்ளச் செய்தான். முன்னணிப் போருக்குப் புறப்படுகையில் எடுத்துப் போகும் குறைந்த பட்ச உபகரணங்கள் மட்டுமல்ல; ராணுவத்தில் அவனுக்குத் தரப்பட்டிருந்த பொருள்கள் அனைத்தையுமே மூட்டை கட்டித் தூக்கிக் கொள்ளச் சொன்னான். இரும்புத் தொப்பி, பூட்ஸ்கள், படுக்கை, உணவருந்தும் பாத்திரங்கள் துப்பாக்கி எதையும் மறக்கவில்லை அவன். சகலத்தையும் ஒன்றாய்ப் பிணைத்துக் கொண்டு நாடாக்களின் உதவியுடன் முதுகில் தொங்க விட்டபோது சுமார் எழுபது பவுண்டு எடை அவனைக் கீழே அழுத்த நாடாக்கள் தோள்களை அறுத்தன.

சுமையுடன் அவன் முகம் சுளிக்காமலே மைதானத்தின் மையத்துக்கு வந்து சேர்ந்தான். ''ஹைக்!'' என்று உத்தரவு பிறப்பித்தான் கேவல்சிங். அப்போதுதான் வடிவேலு தண்டனையின் கடுமையை முழுமையாக உணர்ந்து திடுக்கிட்டான்.

'கடவுளே! இந்தத் துன்பத்தை எப்படித் தாங்குவேன்? முழங்கால்களை மடக்காமல், கணுக்கால்களை அசைக்காமல், கால்களை விரைப்பாக நீட்டியபடியே அடிமேல் அடி எடுத்து வைத்து எவ்வளவு நேரம் நகரமுடியும்?'

நாலு மணி நேரத்திலும் கணப்பொழுதுகூடத் தன் பார்வையை விட்டு வடிவேலுவின் உருவம் மறையக் கேவல்சிங் அனுமதிக்கவில்லை. ஒருவன் அடைந்த அவதி மற்றொருவனுக்கு அலாதியான ஆனந்தத்தை அளித்தது போலும்! வடிவேலுவின் கால்கள் மாறி மாறி மேலெழும்பியது, விழுந்தது; மேலெழும்பியது விழுந்தது. தொடைகளின் தசை நார்களை மட்டுமேதான் அவன் இயக்குவித்தான் நடப்பதற்கு; இல்லை நகருவதற்கு.

முன்பு தன் பிழையை மைக்கேல் பொருட்படுத்தாமல் பொறுத்தது அச்சத்தால் அல்ல என்றும் அன்பு காரணமாக மன்னித்து மறந்துவிடயத்தனித்தான் என்றும் புரிந்தது வடிவேலுவுக்கு.

மைக்கேலைப் பற்றித் தவறான அபிப்பிராயத்தைத் தான் உருவாக்கிக் கொண்டதற்காக வருந்தியபோதிலும் அளவுக்கு மீறிப் படபடத்து விட்டதாக எண்ணி விசனிக்கவில்லை வடிவேலு. சீமையிலிருந்து வந்தவர்களின் சூழ்ச்சிகளைப் பற்றிச் சிந்திக்கையில் வெறுப்பே மிகுதியாயிற்று அவனுக்கு.

அத்தியாயம் 13

விபத்து

ராணுவ முகாமின் ஒரு மூலையில் குளியல் அறைகள் இருந்தன. பிரம்புப் பாய்ச் சுவர்கள் அவற்றுக்கு. உயர ஏற்றி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறைந்த பெரிய தார் டப்பாவைப் பூமியில் புதையுண்டிருந்த நான்கு கொம்புகள் தாங்கின. உருளையான அகன்ற 'டிரம்'மின் கீழ்ப்புறத்தில் பக்கவாட்டில் துவாரம் செய்து அதில் ஒரு குழாயையும் பொருத்தியிருந்தார்கள். அடிவாரத்தில் சிறு துளைகளுடன் கூடிய குவளை ஒன்று குழாயில் கட்டித் தொங்கியது. நான்கு மணி நேரத்துக்குப் பின் இந்த 'ஷவர் பாத்'தில் நிம்மதியாக ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வந்தான் வடிவேலு. தலை சீவி உடையணிந்தானதும் உணவருந்தச் சென்றான். பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலேயே அவனைத் தேடி வந்து விட்டான் ஸுபேதார் கேவல்சிங். மைக்கேல் அவனைக் கூப்பிடுவதாகக் கூறினான்.

''எதற்கு?'' என்றான் வடிவேலு.

''உன் கேள்விக்கு நான் பதில் அளிக்க வேண்டும் என்பதில்லை; என்றாலும் சொல்கிறேன். வழக்கமாகக் காப்டனுக்குக் கார் ஓட்டிச் செல்கிறவன் இன்று காலையில் மலேரியாக் காய்ச்சலுடன் படுத்து விட்டான். கேவலம் கொசுவினால் பாதிக்கப்படாத தேகக் கட்டு உள்ளவனாக ஒருவனை அனுப்பி வைக்கும்படி மைக்கேல் என்னிடம் கேட்டுக் கொண்டான். மலேயாவில் உள்ள ராட்சதக் கொசுக்களை லட்சியம் செய்யாத தடியன் நீதான் என்பதால் உன்னைச் சிபாரிசு செய்திருக்கிறேன். கொசு உன்னைக் கடித்தால் உடனே செத்து விழுந்து விடாதா? எருமைத் தோல்கூட இன்னும் சற்று மென்மையாக இருக்குமே?''



மதுரைக்கு அடுத்த பழங்காநத்தம் அருகில் சுமார் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் ஸ்ரீ சத்யசாயி நகர் என்ற பெயரால் புதிய நகர் உருவாகிக் கொண்டிருக்கிறது. செப்டம்பர் 6ந் தேதி ஸ்ரீ சத்யசாயி நகர் மக்களால் அன்பளிக்கப்பட்ட பத்து சென்ட் நிலத்தில் மதுரை நகர் திருவள்ளுவர் கழகக்கிளை மன்றக் கல் நாட்டு விழா தமிழவேள் திரு பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் நடந்தது. அமைச்சர் பக்தவத்சலம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. திரு இ. பழனியப்பன் வரவேற்புரை வாசித்தளித்தார்.

கேவல்சிங்கிடம் சண்டை போடச் சக்தியில்லை வடிவேலுவுக்கு இப்போது. கோபப்பட்டுப் புண்ணியமென்ன ?—தனக்கு ஓய்வே கிடைக்கக் கூடாது என்று அவன் இட்டம் போட்டு வேலை செய்கையில் எதிர்த்துப் பேசி பயனில்லை யல்லவா ?

அவசரம் அவசரமாக அள்ளிப்போட்டுக் கொண்டு எழுந்தான் அவன். தன் கோபத்தை யெல்லாம் மோட்டார் வாகனிடம் காட்டினான், மைக்கேலின் விடுதிக்கு எதிராகப் போய் நின்ற அது குமுறுகிற அவன் உள்ளத்தைப் போல் உறுமிக் கர்ஜித்தது.

முன் பக்கத்தில் அவன் அருகே அமர்ந்து கொண்டு நகர்ப்புறத்துக்கு விடுமாறு உத்தரவிட்டான் மைக்கேல். ராணுவ முகாமைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் அவன் கரம் ஒரு சிகரெட்டை மோட்டாரோட்டியின் உதடுகளுக்கிடையில் செருகியது. காற்றில் அணையாதவாறு லைட்டரையும் ஏற்றி வசதியாகப் பிடித்துக் கொண்டான்.

அவன் இப்படி நட்புரிமை பாராட்டியதும் இன்னும் கொஞ்சம் தைரியம் பெற்ற வடிவேலு, "வண்டியை எங்காவது கொண்டு போய் மோதினாலும் மோதி விடுவேன்" என்றான்.

"ஏன் வாழ்க்கை வெறுத்து விட்டதா உனக்கு? இன்னும் சில நாட்கள் பொறுத்துக் கொண்டிரு. ஜப்பானியன் உன் பிரச்னையைத் தீர்த்து வைத்து விடுவான். அதற்காக ஒரு பாவமும் அறியாத இந்த வண்டியைப் பாழாக்க வேண்டாம்."

"உயிரின் மீது எனக்கு ஆசையில்லாமல் போகவில்லை."

"பிறகு? ஓ! இந்தியாவில் சிப்பாய்களுக்குப் போர்ப் பயிற்சி மட்டும் தான் சரியாக அளிக்கப்படவில்லையென்று நினைத்து வந்தேன். மோட்டாரோட்டக் கூட நன்றாகக் கற்றுத் தருவதில்லையா?" என்றான் மைக்கேல்.

"நாலுமணி நேரம் 'ஹைக்' செய்ததில் என் கால்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. எழுபது பவுண்டு நிறையைத் தூக்கி என் தோள்கள் சளைத்துப் போயுள்ளன. களைப்பு மிகுதியில் கண்கள் இருண்டு வருகின்றன. அதனால்தான் எந்த விநாடியும் விபத்து நேரலாம் என்று எச்சரிக்கிறேன்" என்றான் வடிவேலு.

"ஒரு நாள் இரவு நீ உன் கூடாரத்துக்குத் திரும்பி வராமலே இருந்து விட்டாய் என்பது ஞாபகம் இருக்கிறதா? அன்று உன்னைச் சும்மா விட்டது பிசகாகப் போய் விட்டது. இரக்கம் காட்டியதும் உனக்குத் திமிர் தலைக்கேறி விட்டது. உன்னிடம் உள்ள எதிர்த்துப் பேசுகிற குணம் மாறுத வரையில் நான் உன்னை வாட்டி வதைக்கத்தான் செய்வேன்."

"அன்று இரவு நான் கடலில் குதித்து நண்பனைத் தேடிக் கொண்டிருந்தேன். முகாமுக்கு எப்படித் திரும்பி வந்திருக்க முடியும்?" என்று கேட்டான் வடிவேலு. டைஜெஜுடைய வீட்டு முன்னறைச் சோபாவில் தான் உணர்வின்றிக் கிடந்ததை மறைத்து.

"ஓ, அப்படியா? கண்டு பிடித்தாயா உன் சிநேகிதனை?" என்று வேடிக்கையாகச் சம்பாஷணையைத் தொடர்ந்தான் மைக்கேல்.

வனஜா! என்ன யோஜனே?

காசு கம்மி, சரக்கு மிடுக்கு

இவ்விரண்டுதானே வேண்டும்??

அதற்கு



சம்பூர்ண சாஸ்திரியார்

& சன்ஸ்

(பட்டு ஜவுளி உற்பத்தியாளர் & வியாபாரிகள்)

வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

போன்: 71719 - ஸ்தாபிதம்: 1902 - தந்தி: சம்பூர்ணம்

கல்கத்தா: கேசவன் லாட்ஜ், 34, Dr. சரத்பானர்ஜி ரோடு, கல்கத்தா-29 (போன்: 46-6395)

டெல்லி: 4/76, கிருஷ்ண மார்க்கெட், W. E. A., கரோல்பாக், புது டெல்லி-5

தி மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை-34

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும் பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவுவதற்காக சென்னை அரசாங்கம், மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இந்தக் கார்ப்பரேஷனால் ஏற்றுக்கொள்ளப்படும் பிக்ஸ்ட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்தரவாதம் அளித்திருக்கிறது

எங்கள் பிக்ஸட் டிபாசிட்டுகளின்பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்

ஒரு வருடமும் அதற்கு மேலும்	...	4¼%	ஒரு வருடத்திற்கு
இரண்டு வருடங்களும் அதற்கு மேலும்	...	4½%	ஒரு வருடத்திற்கு
மூன்று வருடங்களும் அதற்கு மேலும்	...	5 %	ஒரு வருடத்திற்கு
நான்கு வருடங்களும் அதற்கு மேலும்	...	5¼%	ஒரு வருடத்திற்கு
ஐந்து வருடத்திலிருந்து இருபது வருடம்வரை		5½%	ஒரு வருடத்திற்கு

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

எஸ். ராஜரத்தினம், காரியதரிசி

"அவன் கிடைக்கவில்லை. அவன் ஆவிதான் அகப்பட்டது. சுறாமீன் ஒன்று தன் வாயை அகலத் திறந்து பெரிய ஏப்பமாக விட்டபோது சிவராமனுடைய ஆவி அதன் அடிவயிற்றிலிருந்து கிளம்பிக் கொப்புளமாக நீரில் மிதந்தது. வெடித்து வானவெளியில் காற்றோடு காற்றாகக் கலந்து விடுமுன்னர் சில கணங்கள் தாமதித்து என்னிடம் பேசக் கூடச் செய்தது!"

"என்ன சொல்லிற்று?"

"'அதிகாரிகளின் கட்டளைகளைக் கண்மூடிக் கொண்டு நிறைவேற்ற வேண்டியதுதான் என்றும் ஏன், எதற்கு என்ற கேள்விகளைப் போடக் கூடாது என்றும் எனக்கு உபதேசம் செய்தாயே, இப்போது என்ன சொல்கிறாய்? நான் மரணமடைந்த விதம் கடவுளுடைய சித்தம் மட்டும்தானா? அல்லது அதிலே வெள்ளையனுடைய வன்மமும் கலந்திருக்கிறதா என்பதை நீ விசாரிக்கப் போகிறாயா இல்லையா?' என்று கேட்டது."

"நீயும் நானும் விசாரப்பட வேண்டாம் வடிவேலு. விசாரணைக் குழு ஒன்றைப் பிரத்தியேகமாக இதற்கென்றே அமர்த்தினார்களே?"

"பலன் என்ன? மாண்டவர்கள் மீளவா போகிறார்கள்?"

ஒரு பெருமூச்சுடன், "வடிவேலு!" என்று விளித்தான் காப்டன் மைக்கேல். "எதற்காக உன்னுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறேன் நான் என்றே எனக்கு விளங்கவில்லை. ஆனாலும் 'ஸ்ரீதர்' மூழ்கியது யதேச்சையாக நேர்ந்துவிட்ட சம்பவம் என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்."

"இந்தப் புரளியை அப்படியே நம்புவதற்கு வேறு ஆளைப் பாருங்கள்!"


"பொய்யோ மெய்யோ நான் எதைச் சொல்ல வேண்டுமோ அதைத்தான் சொல்கிறேன்."

"அன்றொரு நாள் இரவு நீங்கள் இவ்வளவு முன்ஜாக்கிரதையாக இல்லையே? உங்களுடைய மேலதிகாரிகளைத் தூக்கியெறிந்து பேசினீர்களே?"

"வடிவேலு! என்னைப் பயமுறுத்துகிறாயா?" என்று கூறிச் சிரித்தான் மைக்கேல். "தாராளமாக என் பேரில் குற்றம் சாட்டு. ஆங்கிலேயன் மீது பழி சுமத்தும் இந்தியனுக்கு யார் என்ன மதிப்புத் தரப் போகிறார்கள்? நீ ஒரு முரடன் என்பதையும் ராணுவ சட்ட திட்டங்களை அசட்டை செய்கிறவன் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டிய சாட்சியங்கள் உள்ளன. அவ்வாறிருக்கையில் கடுமையாக என்னால் இரு முறைகளில் தண்டிக்கப்பட்டவனாதலால் வெறுப்பிலே ஏதேதோ கதை கட்டிவிடுகிறாய் என்றுதான் எண்ணுவார்கள்."

தலையசைத்தான் வடிவேலு. "உங்களை மிரட்டுவதல்ல என் நோக்கம். அன்று தளபதிகளைத் தாராளமாய்த் திட்டியதற்கும் இன்று அவர்களுடைய நல்ல பெயரைக் காப்பாற்றுவதில் அக்கறை கொண்டிருப்பதற்கும் உள்ள முரண்பாட்டை ஆராய்கிறேன்."

"அன்று நான் போதையில் இருந்தேன்; இன்று இனிமேல்தான் குடிக்கப் போகிறேன். அதிகாரிகள் கிளப்புக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன் இப்போது. இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து, நாம் முகாமுக்குத் திரும்பிச் செல்கையில் மறுபடியும் உன் வினாக்களை எழுப்பிப் பார். ஒருவேளை உனக்குப் பிடித்தமான விடைகள் கிடைக்கலாம்.



''வடிவேலு! நீ ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வீரர்களின் உயிரைக் காட்டிலும் கப்பல் எங்களுக்கு முக்கியமானது. வாணிபக் கப்பல்களில் கூடப் பீரங்கிகளை வைத்து முடுக்குகிற யுத்த காலம் இது. சிப்பாய்களைப் பழி வாங்க வேண்டும் என்ற சீற்றம் இருந்தாலும் அதற்காக ஒரு கப்பல் பழுதுபடச் சம்மதிக்கவே மாட்டோம்!''

''பட்டாளத்துடன் நீங்கள் துறைமுகத்தில் கப்பல் கவிழ்வதற்காகக் காத்திருந்தீர்கள் என்று நான் கூறினால் கனவு கண்டிருக்கிறேன் என்று அதை ஒதுக்கித் தள்ளி விடுங்கள். அங்கே ஆம்புலன்ஸ் வண்டிகள் சிலவற்றையும் இரண்டொரு டாக்டர்களையும் சந்தித்தேன் என்றால் அதை என் மனப்பிரமை என்று ஏளனம் செய்து விடுங்கள். ரொம்பவும் சௌகரியமாகப் போய் விடும்.''

''ஜப்பானியரிடமிருந்து துறைமுகத்தைப் பாதுகாக்கிற விதங்களைப் பற்றிச் சிந்தித்து வகுக்கப்பட்டிருந்த வழிமுறைகளை, ஒத்திகை நடத்திப் பரிசோதித்துப் பார்த்துக் குறைகள் இருந்தால் அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளச் சிப்பாய்கள் அங்கே இழுத்து வரப்பட்டனர். அந்தத் தருணத்தில் இடுக்கிட வைக்கும் வகையில் கடற்கன்னி கப்பலைத் தகர்த்ததென்றால் கடலில் தத்தளிக்கிறவர்களுக்கு உதவி புரியாமல் இவர்கள் கரையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதா? ஆம்புலன்ஸ்களும் டாக்டர்களும்கூட வேறு ஏதோ ஒரு காரியத்துக்கு வந்தவர்களாய்த்தான் இருக்க வேண்டும்.''

காக்கை உட்காரக் குண்டு வெடித்த தாக்கும் என்று மனக்கசப்புடன் எண்ணிக் கொண்ட வடிவேலு, ''ஆமாம், ஆமாம்!'' என்று தலையாட்டினான் பலமாக.''அதோடு வெள்ளையனின் வெற்று மண்டைகள் பந்து போல் 'குபுக்' என்று நீர் மட்டத்துக்கு மேலே எழும்பிக் குதித்தன, அவர்களைத் தப்புவிக்கப் படகுகளில் வந்தவர்களுடைய கைக்கு முடி எட்டுகிற மாதிரியாக; மூளை நிறைந்த இந்தியரின் தலைகள் கனத்தினால் கடல் அடிவாரத்துக்குப் போய் விட்டன'' என்றான்.

''ஆண்டவனுடைய சித்தம் அது வானால் யார் அதைத் திருத்துவது?''

''அன்று அந்த வீரர்களுக்கு நேரப் போகிற கதி என்ன என்பது பற்றி நீங்கள் முன்கூட்டியே அறிந்திருந்தீர்கள் என்கிறேன்; அதை ஒப்புக் கொள்ளாமல் கடைசி வரை ரகசியமாகவே வைத்திருக்க நிச்சயித்திருக்கிறீர்கள்!''.

''உண்மைகளை எடுத்துச் சொல்லலாம்; உன் ஊகங்களுக்குத் தடைவிதிப்பது எப்படிச் சாத்தியமாகும்?''

''விடுமுறை கோரியபோது முக்கிய வேலைகள் இருப்பதாகச் சொல்லி என்னை நீங்கள் ஏன் தடுத்து நிறுத்தவில்லை? தயங்காது விடை கொடுத்து அனுப்பியது எதனால்? நான் பொல்லாதவன்; வீண் வம்பு புரிவேன். அதைத் தவிர்க்க எண்ணினீர்கள். அதே காரணத்தால் தானே பின்னால் துறைமுகத்தை விட்டும் துரிதமாக வெளியேறுமாறு துரத்தியடித்தீர்கள்? என் நண்பனின் உயிரைக் காப்பாற்ற ஒரு சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுக்க நீங்கள் பிரியப்படவில்லை. எவ்வளவு கல்நெஞ்சம் உங்களுக்கு?'' வடிவேலுவுக்கு நாத் தழு தழுத்தது.

மைக்கேல் பொரிந்து தள்ளினான்: ''வடிவேலு! உனக்கு ஒரு இழவும் தெரிய மாட்டேன் என்கிறது! யுத்தம் என்றால் துப்பாக்கி பிடித்து எதிரியைச் சுடுவதுடன் சரி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். தவறு. அதில் எத்தனையோ அம்சங்கள் உள்ளன. கற்பனைக் கெட்டாத கொடிய விளைவுகள் அதனால் உண்டாகின்றன. பரம ஆஸ்திகனாய் விளங்கியவன் கடவுளைத் தாறுமாறாக ஏசுவான்; நாஸ்திகன் பரம பக்தனாவான். சாமான்யப்பட்ட மனிதன் இரவோடு இரவாகக் கறுப்புச் சந்தை வியாபாரத்தில் கோடீசுவரனாகிவிடுவான்; மாளிகையில் வசித்தவன் தன் செல்வமெல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டதைப் பார்த்துப் பித்துப் பிடித்து அலைவான். ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவன் குடித்து விட்டுக் காமாந்தகாரனாய்த் திரிவான்; ஸ்திரீ லோலனாய்க் காலத்தை ஓட்டியவன் தன் பாவங்களுக்காக மன்னிப்புக் கோரிப் பகவானைப் பிரார்த்திப்பான். வீரனாய்த் திகழ்ந்தவன் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுவான்; கோழை வந்து வரட்டும் என்று அசகாய சூரனாய் மாறுவான். திருட்டுத்தனமும் பஞ்சமும் பிணியும் தீபோல் பரவும். போர் முனை இரு எதிரிப் பட்டாளங்கள் ஒன்றையொன்று சந்திக்கும் இடங்களில் மட்டுமில்லை; நகர்ப்புறங்களின் சந்து பொந்துகளிலும் கிராமப் பக்கங்களின் வயல் வரப்புக்களிலும் கூட அதன் கோர இருத்தியங்கள் தாண்டவமாடும். இதை யெல்லாம் புரிந்து கொள்ளாமல் நீ, நீதி நேர்மை என்று உளறிக் கொண்டிருக்கிறாய்!''



ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் கம்பெனியைச் சேர்ந்த திரு சுப்பிரமணியன் அவர்களின் புதல்வர் திரு வேங்கடராமன் சௌ. ராதாவை மணந்து கொண்டார்.



திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின் புதல்வர் திரு சுபாஷ்சந்திரன் சௌ. ரமணிகாந்தத்தை மணந்தார்.

அடிப்படை விஷயத்தை அவன் தட்டிக் கழிப்பதாய்த் தோன்றியது வடிவேலுவுக்கு. ஆங்காரம் அளவுக்கு மீறிப் பெருக அவன் ஆக்ஸிலேட்டரை அழுத்தினன். வேகத்தை உணர்த்தும் முள் ஐம்பதைத் தொட்டது.

''இங்கேதான் - இடதுபக்கம் திரும்ப வேண்டும்!'' என்ருன் காப்டன் மைக்கேல் பரபரப்புடன்.

பிரேக்கை வடிவேலு அழுத்திய போது சக்கரங்களின் ரப்பர் டயர்கள் 'கீச் கீச்' என்று வலி தாங்காதது போல் கதறின. ஸ்டியரிங்கை விடுவிடு வென்று சுழற்றினன் அவன்.


'ஆ! எதிரே ஒரு மோட்டார் வருகிறதே! அதன் விளக்கொளி கண்களைக் கூசச் செய்கிறதே!

'ஐயோ! இதென்ன காதுகளைச் செவிடாக்குவது போன்ற பயங்கரச் சத்தம்? ஜப்பானிய விமானங்கள் குண்டு மழை பொழிகின்றனவா? மரணப் பாதையில் வானுலகை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறேனு நான்? ஆயிரம் மின்னல்களின் ஒளியுடன் என்னைத் தாக்குவது என்ன? இந்திரனுடைய வஜ்ராயுதமா? ஆ! அம்மா! இந்த வேதனையைத் தாங்க முடியவில்லையே, என்ன செய்வேன்? அதோ, ஒரு தேவ கன்னிகை என்னை நெருங்குகிருளே! எழில் மங்கையே! கருணை கூர்ந்து என் துன்பத்தைக் குறைக்க ஆவன செய்யக்கூடாதா? அவள் இதழ்கள் சுழிக் காற்றில் சிக்குண்டு அலைப்புறும் செவ்விய ரோஜா மொட்டுப் போல் துடிக்கின்றனவே? பெண்ணே! என்ன சொல்கிருய், நீ?'

அந்தத் தெய்வப் பெண்ணின் கை நீண்டது. அவன் கரத்தைப் பற்றியது. வடிவேலுவின் வேதனைகள் வந்த சுவடு தெரியாமல் பனிச்சென்று நீங்கின. இருளும் அமைதியும் அவனை ஆட்கொண்டன. (தொடரும்)



திரு என். வேங்கடராமய்யர் அவர்களின் புதல்வர் திரு வாஞ்சிநாதனுக்கும் சௌபாக்கியவதி ராஜலட்சுமிக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.



பம்பாய் எலெக்டிரிகல்ஸ் இந்தியா கம்பெனியைச் சேர்ந்த திரு கே. கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வி சௌ. விஜயலக்ஷ்மிக்கும் திரு கந்தசாமிக்கும் திருமணம் நடந்தது.

வட்டமேஜை

சேலம் பஸ் நிலையம்

சேலம் நகரசபை பஸ் நிலையத்துக்கு வரும் பஸ்களும், அங்கிருந்து புறப்படும் பஸ்களுமாகச் சுமார் முந்நூறு உள்ளன. அதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்க டவுன் பஸ்களைக் கோட்டை மாரியம்மன் கோவில்புறச் சாலை வழியாகத் திருப்பிவிடலாம்.

மேலும் புக்கிங் ஆபீஸ்களில் மட்டுமே டிக்கெட் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். 'க்யூ' வரிசையில் நிற்பதற்கு அங்கு கிராதிகளை அமைத்துத் தர வேண்டும். பஸ்களின் கால அட்டவணையையும் நிலையத்தில் எடுப்பாகப் போட வேண்டும்.

தாரமங்கலம்
23-9-62 ஏ. நடராஜன்

லஞ்ச ஊழல் எப்படி அழியும்?

ஸ்ரீ சந்தானம் அவர்கள் தலைமையில் சர்க்கார் நியமித்துள்ள லஞ்ச விசாரணைக் குழு லஞ்சத் தீமையை ஒழிக்க எவ்வளவு தூரம் உதவும் என்பது சந்தேகமே. சர்க்கார் வர்த்தகம் நடத்தும் வரையில்—எடுத்ததற்கெல்லாம் லைசென்ஸ், பெர்மிட் இவற்றை வழங்கும்வரையில்—வியாபாரிகளும் நிர்வாகமும் பல சந்தர்ப்பங்களில் நெருங்கிப் பழகுவதையும், இதன் விளைவாக லஞ்ச ஊழல்கள் மலிவதையும் தடுப்பது அசாத்தியமான காரியமாகும். 'சோஷலிஸ பாணி'யைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும் வரையில் இவ்வித சர்க்கார் கட்டுப்பாடுகளையும்விலக்கமுடியாது. வியாபாரத் துறையில் சர்க்கார் குறுக்கிடுவதால் இவ்வாறு லஞ்ச வாய்ப்புக்கள் பெருகுவது போலவே, நம்முடைய தேர்தல் முறைகளும் இந்த அக்கிரமத்துக்குப் பல இனங்களில் அநுகூலமாக உள்ளன. பணம் கொடுத்து வோட்டு வாங்குவதற்காகவே பல செல்வந்தர்களிடமிருந்து ஆளும் கட்சி தனது தேர்தல் நிதிக்குப் பெறும் பலவந்த நன்கொடைகள் காரணமாக அப்படி உதவியவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக நன்மைகள்செய்யும் ஊழலும் ஏற்பட்டுள்ளது.

லஞ்சம் என்பது வாழ்க்கைச் செலவுப் பிரச்னையைத் தழுவியதேயாகும். விலைவாசிகள் ஏறுமுகமாக இருப்பதால்தான் அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வளவு சம்பள உயர்வும், கிராக்கிப்படி உயர்வும் அளித்தாலும் போதமாட்டேன் என்கிறது. லஞ்சம் வளர்கிறது. விலைவாசிகள் இறங்க வேண்டுமானால் சர்க்காரின் நிதிக் கொள்கை மாற வேண்டும்.

இதையெல்லாம் குறித்து ஸ்ரீ சந்தானம் குழு ஆராயப் புகப் போவதில்லை. இந்த அடிப்படையான அரசாங்கக் கொள்கைகள் மாறாத வரையில் எந்த லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையும் பயன் தராது. எனவே, பதுக்குபவர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், சமூக விரோதிகள் என்று கூறிச் சிலரைக் கடுமையாகத் தண்டிப்பதாக எச்சரிப்பதால் மட்டும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. ஆதாரக் காரணங்களை ஆராய்ந்து பார்த்து அறவழியில் ஆட்சி புரிய வேண்டுமென்று எண்ணம் கொண்டாலன்றி லஞ்சப்பேயின் கோர தாண்டவம் நிற்காது.

சிவகங்கை
23-9-62 எம். ஜி. குருஸ்வாமி அய்யர்

தலைநகரில் ஒரு நாடகம்

புதுடில்லி சவுத் இந்தியன் தியேட்டர்ஸார், சமீபத்தில் ராமேஷ் மேதா அவர்கள் எழுதின இந்தி நாடகத்தைத் தழுவி "அண்டர் செகரட்டரி" என்னும் தமிழ் நாடகத்தை அரங்கேற்றினர். தமிழாக்கிய ஸ்ரீ பூர்ணம் விசுவநாதன் எண்ணிலடங்கா ஹாஸ்ய வெடிகளுடன் தெள்ளிய தமிழில் மிகவும் அற்புதமாகத் தழுவலைத் தயாரித்திருந்தார்.

தற்காலப் போலி வாழ்க்கையை அதுவும் பெரிய உத்தியோகஸ்தர்கள் பலர் மேற்கொண்டுள்ள வறட்டுக் கௌரவ டாம்பீக வாழ்க்கை பற்றி அருமையாகச் சித்திரித்துக் காட்டும் ஒரு நவீனம் இது.

நாடகத்தில் நடித்த யாவரும் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். நடிப்புக்கான முதல் பரிசைப் பூர்ணம்விசுவநாதன் தட்டிக் கொண்டு போய்விட்டார். அவர் ஒரு பூர்ணமான நடிகர். ஒவ்வோர் அசைவிலும் மேற்த் தொண்டைப் பிரயோகங்களிலும் அவரது நடிப்பின் சிறப்பு வெளிப்பட்டது.

ராசம்மாவாக நடித்த அநுராதா நாடக மேடைக்குப் புதிய முகந்தான். ஆனால் நடிப்பைக் கண்டபோது பல ஆண்டுகள் நடிப்புக் கலையிலேயே ஊறியவரோ என்று எண்ணும் படியாக இருந்தது.

புஷ்பாவாக நடித்த சுஜாதாசாரியின் நடிப்பையும் குறிப்பாகக் கூற வேண்டும். உயர்க் குடும்பப் பெண்ணுக்கு ஏற்றபடி மிகவும் கம்பீரமாக நடித்து நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டு விட்டார். இதர சக நடிகர்கள் யாவரும் நன்றாக உழைத்து நாடகத்தின் வெற்றிக்குப் பாடுபட்டனர்.


நாடகத்தின் வெற்றிக்கு முழுக்க முழுக்கக் காரணம், டைரக்டர் கப்புடு அவர்கள் தான் என்று கூறலாம். அவர் டைரக்ஷன் என்றால், கண்டிப்பாக ஹாஸ்ய வெடிகளையும், சோடை போகாத நடிப்பையும், ருசிகரமான திருப்பங்களையும் காணலாம். இவை இந்த நாடகத்தில் ஏராளம். கடைசியாகக் கப்புடுவுக்கு ஒரு வார்த்தை. தமிழ் நாடகங்களில் ஆங்கில வார்த்தைகளைக் கூடுமான வரையில் குறைத்துக் கொள்ளவேண்டும். நாடகம் நடைபெறும் இடத்தின் அருகில் வயிற்றுவலி மாத்திரைகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். நாடகத்தைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து வயிற்று வலி ஏற்பட்டவர்களுக்கு உதவியாக இருக்கும் அல்லவா?



மிக்க நன்றி—

நானும் சிசர்ஸைத்தான் பிடிக்கிறேன்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாட்டின் கிராமங்கள் நகரங்கள் எல்லாவற்றிலுமுள்ள வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த வெவ்வேறு பருவமுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் சிசர்ஸ் சிகரெட் பிடித்து புகழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிசர்ஸ் சிகரெட் மட்டற்ற தேவையிலிருந்தே அதன் உச்ச ரகத்தை ருசுப்படுத்துகிறது. சிசர்ஸ் ஒரு உயர்ந்த ரக சிகரெட்—அதன் சுவை மறக்கமுடியாதது—அதன் மணமோ ஒரு தனி ரகம் ஆனது. குளிர்காலம் ஆனாலும் சரி, கோடைகாலம் ஆனாலும் சரி, மழை காலமானாலும் சரி சிசர்ஸ் எப்பொழுதும் திருப்தி அளிக்கும்.



JWTS 227DR

உலக விளையாட்டு

இந்த வாரம் உங்களுக்குப் 'பொலிவியா' தேசத்துக் குழந்தைகள் விளையாடும் விளையாட்டு ஒன்றைப் பற்றிச் சொல்லப்போகிறேன்.

இந்த விளையாட்டுக்கு 'ஜுகோ டெல்பானல்லோ' என்று பெயர். இதில் பதினாறு பேரிலிருந்து முப்பத்திரண்டு பேர்வரை விளையாடலாம். விளையாடுபவர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்து கொண்டு கூட்டல் குறியைப் போல உட்கார வேண்டும். (படம்) 17ம் நபராகவோ 33ம் நபராகவோ ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர் உட்கார்ந்திருப்பவர்களைச் சுற்றி ஓடிவர வேண்டும். அப்படி ஓடும் போது தன்னிடம் இருக்கும் கைக் குட்டை யொன்றை, நான்கு வரிசைக்காரர்களில் ஏதாவது ஒரு வரிசையின் முதல் நபரின் பின்னால் போட்டு விட்டுப் போகவேண்டும். கைக்குட்டை எந்த வரிசையில் போடப்படுகிறதோ அந்த வரிசையில் உள்ள அத்தனை பேரும் (8 பேர்) ஒரு தடவை எல்லோரையும் சுற்றி வந்து தங்கள் தங்கள் இடத்தில் போய் உட்காருவார்கள். இதற்குள் முதலில் சுற்றி வந்து கைக் குட்டையை நழுவ விட்ட பேர்வழி ஓடிக் கொண்டிருப்போரின் இடங்கள் ஒன்றில் போய் உட்கார்ந்து விடுவார். ஓடிவரும் எட்டு பேரில் ஏழு பேருக்குத்தான் இடமிருக்கும். அந்த நபர் கைக் குட்டை யோடு சுற்றி வரவேண்டும். இப்படியே மாற்றி மாற்றி எத்தனை நேரம் வேண்டுமானாலும் இந்த விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கலாம்.

```
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
★★★★★★★★ ★★★★★★★★
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
        ★
```



ஃ உங்கள் ஆல்பத்துக்கு இந்த வாரத்துப் படம் என்ன தெரியுமா? பர்மா தேசத்தில் வாழும் சகோதரி இவள். அந்தக் குடைதான் அவர்களுடைய அடையாளம். அவள் உடைகளுக்கும் குடைக்கும் விதம் விதமான வர்ணம் தீட்டி அழகு படுத்தி ஆல்பத்தில் ஒட்டிக் கொள்.

என்ன விநோதம் பார்!


டெக்ஸாஸ் மாகாணம் அமெரிக்காவில் உள்ளது. இது கடற்கரையிலிருந்து 600 மைல்களுக்கு அப்பால் உள் நாட்டில் உள்ளது. ஆனால் இங்குள்ள 'வாகோன்டா' நீர் ஊற்றின் தண்ணீர் கடல் நீரைப் போலவேப் கரிக்கும். அது மட்டுமல்ல. கடல் அலை போலவே இந்த ஊற்றின் நீரில் அலைகளும் மிக உயரமாக எழும்பிக் கரையில் வந்து மோதி ஆர்ப்பரிக்கின்றன. உள் நாட்டில் உள்ள மக்களுக்குச் சமுத்திரம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள இது ஒரு 'சாம்பிள்' கடல் போறும். இந்த ஏரியில் அலைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பது புரியாத புதிராக உள்ளது!

அது எப்படி ?

★ ரமணியும் உஷாவும் அப்பாவுக்காக டாக்ஸி கொண்டு வர ஓடினார்கள். ரமணி ரஸ்தாவின் கிழக்குப் பக்கத்தையும் உஷா மேற்குப் பக்கத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள், ஏதாவது காலி டாக்ஸி வருகிறதா என்று கண்காணித்தபடி. சிறிது நேரங்கழித்து உஷா தன் தலையைத் திருப்பாமலேயே ''ஏன்டா ரமணி சிரிக்கிறே?'' என்று கேட்டாள். மேற்கே பார்த்துக் கொண்டிருக்கும் உஷாவுக்கு ரமணி சிரித்தது எப்படித் தெரிந்தது.

[illegible]

இரவின் கதை



"இரவு தூக்கம் வருவதற்குப் பாட்டியிடம் கதை கேட்டுத்தான் வழக்கம் எங்களுக்கு. இரவுக்கே ஒரு கதை உண்டா என்ன?" என்று நீங்கள் கேட்காமல் கேட்பது எனக்குத் தெரிகிறது. இரவு எப்படி உண்டாயிற்று என்பதற்குப் பிரேசில் நாட்டில் வழங்கும் கதை இது.

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே —அதாவது உலகத்தைக் கடவுள் முதன் முதலில் உண்டாக்கியபோது இரவு இடையாது. நாளெல்லாம் பகல்தான். சூரியோதயத்தையோ, அஸ்தமனத்தையோ, நட்சத்திரங்களையோ, சந்திரன் ஒளியையோ பற்றி யாருக்கும் தெரியாது. இரவிலே இமைகொட்டித் திரியும் பறவைகளோ, மிருகங்களோ, இரவிலே புஷ்பிக்கும் மலர்களோ அப்போது இடையாது. நீண்ட கரிய நிழல்களோ, நறுமணத்தால் கனத்த காற்றோ இடையாது.

கடலின் ஆழத்திலே நாகலோகத்தில் வாழும் நாகராஜனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பூலோகத்து அரசன் ஒருவனுக்கு மாலையிட்டு அவன் மனைவியானாள். கணவனோடு வாழ்க்கை நடத்துவதற்கு இருள் சூழ்ந்த நாகலோகத்தை விட்டுப் பகல் நிறைந்த இடத்துக்கு வந்தாள் நாக கன்னிகை. பகலின் அழகைக் கண்டு வியந்து ஆசையோடு வந்தாள் நாகலோக குமாரி. ஆனால் சூரிய ஒளியின் கொடுமை அவள் கண்களைக் கூச வைத்தது. பகலின் உக்கிரத்தைத் தாள முடியாமல் துவண்டு போனாள். அவள் அழகு மங்கலாயிற்று.

"இரவு மட்டும் வருமானால்....?" என்று நினைத்து அலுப்போடு களைத்துச் சோர்ந்து துவண்டுபோய்க் கட்டிலில் சாய்ந்தாள் அரசி. "இங்கு எப்போதும் பகலாகவே இருக்கிறதே. நான் பிறந்து வளர்ந்த இடத்திலே விதம் விதமான நிழல்களெல்லாம் உண்டே.. ஆஹா! அந்த அழகிய இருள் மட்டும் கொஞ்சம் இங்கு வருமானால்...." என்று உருகலானாள். அரசியின் புலம்பலைக் கேட்ட அரசன், "இரவென்றால் என்ன? அதைப் பற்றி எனக்கு விவரமாகச் சொல். அதை நான் உனக்காகக் கொண்டு வரச் செய்கிறேன்" என்றான்.

"இரவைப் பற்றி உங்களுக்கு ஏதுமே தெரியாதா? ஆழ்கடலின் அடியில் உள்ள என் அப்பாவின் சாம்ராஜ்யத்திலே பரந்து கிடக்கும் நிழலுக்கு நாங்கள் இரவு என்று சொல்லுவோம். உங்கள் நாட்டின் ஒளிமயமான பகலை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் இது எனக்கு அலுப்பைக் கொடுத்து விடுகிறதே. கொஞ்ச நேரம் கண்களை மூடி உடலுக்கும் உணர்வுகளுக்கும் ஓய்வைக் கொடுக்கும் எங்கள் நாட்டின் இருள் மட்டும் இங்கு இருக்குமானால் பூலோகத்துக்கு ஈடு இணையே இடையாது" என்றாள் அரசி.

உடனே அரசன் தமது விசுவாசமுள்ள அடிமைகளில் மூன்று பேரைக் கூப்பிட்டு, "நீங்கள் உடனே நாக லோகத்துக்குப் போக வேண்டும். கடலின் அடியிலுள்ள அந்த இடத்துக்குச் சென்று அதன் மன்னனிடம் அங்குள்ள இருளில் கொஞ்சம் கொடுக்கும்படி கேளுங்கள். இல்லாவிடில் உங்களுடைய அருமை மகள் பூலோகத்து ஒளியின் உக்கிரத்தால் உயிரிழக்க நேரிடும் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள்" என்று கூறி அனுப்பினான்.

பலம் பொருந்திய அந்த மூன்று அடிமைகளும் நாகலோகத்தை நோக்கிப் பயணமானார்கள். அபாயங்கள் நிறைந்த நீண்ட பிரயாணத்துக்குப் பிறகு நாகராஜனின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள் அந்த மூவரும். தாங்கள் வந்த காரணத்தை மன்னனிடம் கூறி இருளைத் தந்தருளுமாறு கேட்டனர். உடனே நாகலோகத்தரசன் இருளை ஒரு பெரிய கோணிப் பையில் போட்டு நன்றாகக் கட்டி அந்த அடிமைகளிடம் கொடுத்தான். "இதை என் மகளின் முன்னிலையில்தான் அவிழ்க்க வேண்டும்" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினான் நாகராஜன்.



பெரிய மூட்டையான இருள் நிறைந்த கோணிச் சாக்கை மூன்று அடிமைகளும் சுமந்தபடி பூலோகத்துக்குக் கிளம்பினார்கள். அந்த மூட்டைக்குள்ளிருந்து விநோதமான சப்தங்களெல்லாம் கேட்டன. இரவில் சஞ்சரிக்கும் மிருகம், பறவை, பூச்சி இவைகளின் சப்தம்தான் அது. இருண்ட கானகத்திலே நதிக்கரை ஓரமாக இரவு வேளைகளில் கேட்கும் ஒலிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அதுபோன்ற ஒலிகளைத் தான் அடிமைகள் அந்த மூட்டைக்குள்ளிருந்து கேட்டார்கள். அது போன்ற சப்தங்களை அவர்கள் இதற்கு முன்பு கேட்டதே இல்லை. அவர்கள் மிகவும் பயந்து போய் விட்டார்கள்.

"இந்த இருள் நிறைந்த மூட்டையை இங்கேயே இப்படியே போட்டு விட்டு நாம் ஓடிவிடலாம்" என்றான் ஓர் அடிமை.

"அப்படிச் செய்தால் நாம் அழிந்தோம்; அழிந்தே போய் விடுவோம்" என்றான் இரண்டாமவன்.

"அழிந்தாலும் சரி, ஒழிந்தாலும் சரி, நான் மூட்டையை அவிழ்த்து அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்கத்தான் போகிறேன்" என்றான் மூன்றாவது அடிமை.

மூவரும் மூட்டையைத் தரையில் இறக்கினார்கள். முடிச்சை அவிழ்த்தார்கள். அடுத்த நிமிஷம் 'ஹோ'வென்ற பேரிரைச்சலுடன் இரவுப் பறவைகள், மிருகங்கள், பூச்சிகள் எல்லாம் மூட்டைக்குள்ளிருந்து குபீரென்று கிளம்பி வெளியே குதித்து இருளோடு இருளாக ஓடி மறைந்தன. மூட்டையிலிருந்து வெளிப்பட்ட இருளின் கருமையைக் கண்டு நடுநடுங்கிப்போய் அந்த மூன்று அடிமைகளும் கானகத்துக்குள் ஓடி ஒளிந்துகொண்டார்கள்.

நாகலோக குமாரி தன் பிறந்தகத்திலிருந்து அடிமைகள் கொண்டு வரப்போகும் இனிமையான இருளை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தாள். அரண்மனையின் உப்பரிகையிலே போகத்தி எடுக்கும் சூரிய ஒளியையும் பொருட்படுத்தாமல் கூசும் விழிகளுக்குக் காப்பாகக் கையைக் கண்களுக்கு மேலாக வைத்துக் கொண்டு அடிவானத்தை நோக்கியபடி அடிமைகளின் வரவுக்காகத் தவம் கிடந்தாள். அசட்டு அடிமைகள் மூட்டையை அவிழ்த்து இருளைத் தப்பவிட்ட போது அரசி ஒரு பனை மரத்தினடியில் நின்று கொண்டிருந்தாள். அடிமைகளால் விடுதலை செய்யப்பட்ட இருள் அடிவானத்தின் முகப்பிலே விரைவிப் பரவியதைக் கண்டதும் அரசி ஆனந்தக் கூச்சலிட்டாள். "இரவு வந்துவிட்டது. பூலோகத்துக்கு இரவு வந்துவிட்டது" என்று குழந்தையைப் போலக் குதித்தாள். அந்த விநாடியே அந்தப் பனை மரத்தடியிலே படுத்துக்கொண்டு சோர்ந்துகிடந்த கண்களை மூடியபடி நித்திரையில் ஆழ்ந்தாள்.

அரசி நித்திரை கலைந்து எழுந்தபோது தான் புத்துணர்ச்சியோடு இருப்பதை உணர்ந்தாள். இப்போது அவளால் மறுபடியும் பளபளக்கும் பகலைக் காண முடிந்தது. அரசாங்கப் பனைமரத்தின் உச்சியில் சுடர் விடும் ஒற்றை நட்சத்திரத்தைக் கண்டஅரசி, "ஏ, அழகிய ஒளி பொருந்திய நட்சத்திரமே! இன்றையிலிருந்து உன்னை எல்லோரும் விடிவெள்ளி என்று அழைக்கட்டும். (சுக்கிரன் என்று நாம் கூறுவதில்லையா?) பகலின் ஆரம்பத்துக்குக் கட்டியம் கூறும் காவலனாக நீ இருப்பாயாக. அதிகாலை நேரத்தில் வானத்தின் ராணியாக நீ விளங்குவாயாக" என்றாள்.

பிறகு பறவைகளையெல்லாம் அழைத்து, "அழகான பறவைகளே! இருள் நீங்கிப் பகல் வரப் போகிறது என்பதை அறிவிக்கும் வகையில் உங்கள் இனிய குரலை எழுப்பிப் பாடுங்கள்" என்று கட்டளையிட்டாள். அரசியின் அருகே சேவல் ஒன்று கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி நின்று கொண்டிருந்தது. அதைக் கண்ட அரசி, அதற்குத் தனியாக ஏதாவது ஒரு கடமையைக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தாள். உடனே அதைப் பார்த்துச் "சேவலே இனி நீதான் இரவுக் காவல்காரன். உன் குரலால் இரவின் சாமத்தைக் குறிக்க வேண்டும். 'பகல் வரப் போகிறது, பகலவன் வரப் போகிறான்' என்பதை உன் குரலால்தான் தெரிவிக்க வேண்டும். 'மட்ருகாடா' வருகிறது என்பதை மற்றவர்களுக்கு நீதான் எச்சரிக்க வேண்டும்" என்றாள். (மட்ருகாடா என்றால் பிரேஸில் நாட்டு மக்களின் மொழியில் – அதிகாலை என்று பொருள்) உதய கீதம் பாடி எழும்பக் காத்திருக்கும் பறவைகளுக்கு மட்ருகாடாவின் வருகையைச் சேவல் தனது கம்பீரமான குரலால் அறிவித்தது. உடனே பறவைகள் தங்கள் கூடுகளிலிருந்து கிளம்பிக் 'கலகல' சத்தத்துடன் இன்னிசை எழுப்பின. அதே சமயத்தில் மட்ருகாடாவின் ராணியாக வானத்திலே அந்த அழகிய ஒற்றை நட்சத்திரம் விடி வெள்ளியாக உதயமாயிற்று.

இருள் விலகி மறுபடியும் பகல் வந்ததும் கானகத்தின் மறைவிடத்திலிருந்து காலி கோணிப் பையுடன் அடிமைகள் மூவரும் வெளிப்பட்டு அரண்மனையை அடைந்தார்கள். அவர்களைக் கண்ட அரசருக்குத் தாங்கமுடியாத கோபமுண்டாயிற்று. "நன்றி இல்லாதவர்களே, நாகராஜனின் எச்சரிக்கையை உதாசீனம் செய்த உலுத்தர்களே! நீங்கள் குரங்குகளாகப் போகக் கடவது! இருள் மூட்டையைக் கட்டி முத்திரையிட்டிருந்ததைப் போல உங்கள் வாய் அடைத்துப்போக வேண்டும். மனிதர்களைப் போலிருந்தாலும் உங்களால் பேச முடியாது. அதுமட்டுமல்ல. இருளைக் கண்டால் குரங்குகளாகிய நீங்கள் பயந்து நடுங்குவீர்களாக" என்று சாபமிட்டார். அவர்களும் குரங்கானார்கள். குரங்குகள் இரண்டு உதட்டையும் விரித்துப் பல்லைக் காட்டுவதைப் பாருங்கள். கோணிச் சாக்கு மூட்டையைக் கட்டியது போலிருக்கிறதல்லவா? அது இந்தச் சாபத்தினால்தான்.

எப்படி இரவு வந்த கதை? தூக்கம் வந்துவிட்டதா உங்களுக்கு?



அன்பின் உருவம்

-எஸ். லட்சுமிசுப்பிரமணியம்-



புத்தகத்தின் நடுவில் வைத்திருந்த ராஜியின் கடிதத்தை மறுபடியும் எடுத்துப் பார்த்தான் சேகர். ஏற்கனவே மூன்று தடவைகள் படித்தாயிற்று. அதில் புதிதாக ஒன்றுமில்லை. நாலு வரிகள். அவன் வரப்போகும் ரவியைப் பற்றி இரண்டு வரிகள். குழந்தையைப் பற்றி இரண்டு வரிகள். அவனைப் பற்றி? அதற்குஇடமில்லை. இடமில்லையோ, இடந்தர மனம் இல்லையோ?

புத்தகத்தைப் பட்டென்று மூடினான். மேலே எழுதியிருந்த பெயர் கண் பார்வையில் விழுந்தது. ஆர்வத்தோடு அவன் அதே புத்தகத்தை அதற்கு முன்னால் பார்த்ததுண்டு. பார்த்தபின் படிக்க மனம் ஓடாமல் தவித்ததும் உண்டு. அதற்கும் இப்போது அவன் இருக்கும் நிலைக்கும் எவ்வளவோ வித்தியாசம். இதுவும் ஒரு தவிப்புத்தான். ஆனால் அதற்கு உருவம் தர முடியவில்லை. அதுவே தான் அந்தத் தவிப்பின் காரணமோ?

புத்தகத்தின் பெயரை அதைப் போலவே படித்தபின் அவன் லைப்ரரியில் நின்று கொண்டிருந்தான். அதற்கு முன் இரண்டொரு தடவைகள் முயன்றும் அவனுக்கு அந்தப் புத்தகம் கிடைக்கவில்லை; பெயரைப் பதிவு செய்து வைத்த பிறகும் கூடத்தான்.

''அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா?''

குரல் கேட்டு அவன் முகம் திரும்பியது. மார்போடணைத்த புத்தகக் கட்டு. மேலே தொங்கிய கைப்பை நழுவாமல் விரல்கள் அதன்மேல் பிணைந்திருந்தன. அவன் பார்த்த விதம் அவள் தயக்கத்தைத் தூண்டிற்றோ என்னவோ? அப்புறம் அவள் பேசவில்லை.

''உங்களுக்கு வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்.''

''பரவாயில்லை. நீங்கள் இரண்டு மாதங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். பெயரை ரிஸர்வேஷனில் பார்த்தேன். நீங்கள் முதலில் படியுங்கள். அப்புறம் நான் —''

''உங்களுக்கப்புறம் நான் என்று இருக்கக் கூடாதா?'' என்றான் அவன்.

அதிகப் பழக்கமில்லாத நிலையில் அவ்வளவு நெருக்கமாகப் பேசி விட்டதை அவன் உணரும் முன் முகம் சிவந்துபோய் விட்டது அவளுக்கு. இலேசாக இதழ்களில் புன்னகை கமழ்ந்தது.

''தாங்ஸ்!'' என்று கையைக் கூப்பி வணங்கி விட்டுப் போய்விட்டாள். லைப்ரரியன் மறுபடியும் கூப்பிடும் வரை அவன் கவனம் அந்தச் செருப்பின் மெல்லொலி தேய்ந்து மறைவதிலேயே லயித்திருந்தது.

அது தான் அவர்கள் முதல் சந்திப்பு.

அன்று மாலை அவன் புத்தகக் கடையில்

அதே புத்தகத்தை விலை கொடுத்து வாங்கினுன். வழுவழுப்பான முதல் பக்கத்தில் பளீர் வெண்மையில், பெயரை எழுதப் பேனுவை வைத்த போதுதான், பெயரைக் கேட்டுக் கொள்ளாதது நினைவுக்கு வந்தது. ஆனுல் அவனுக்கு அந்த முகம் தெரியும். அவள் படிக்கும் கல்லூரி வகுப்பு தெரியும். சந்திப்புக்கு ஏற்ற சமயம்தான் தெரியவில்லை.

டிசம்பர் பரீட்சை முடிந்து ஒரு மாத விடுமுறையோடு கல்லூரியை மூடி விட்டார்கள். படிப்பிலிருந்து கொஞ்சம் நாட்கள் விடுதலை கிடைத்த ஆறுதலே. ஊரில் எதிர்பார்த்து நிற்கும் சகோதரி, அவள் குழந்தைகள், அம்மா — அவர்களைச் சந்திக்கப் போகும் ஆவல், அவன் வாங்கிக் கொண்டு வரப் போகும் பரிசைப் பற்றி விசாரித்து எழுதியிருந்த குட்டித்தங்கையின் ஞாபகம், அவன் படிப்பைப் பற்றித் தந்தை கேட்கப் போகும் ஆறுக்குக் கேள்விகளுக்குச் சொல்ல வேண்டிய பதில்கள் — இப்படி எத்தனையோ எண்ணங்கள் மனத்தில் தடுமாறி நின்றன. அவற்றுக்கு நடுவே சட்டென்று தலைநீட்டி மறைந்து போவதைப் போல் அந்த முகமும் தெரிந்தது. அந்த நினைப்பே ஒரு வேதனை.

இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட். அதிகக் கூட்டமில்லை. அவன் உள்ளே நுழைவதற்கும் பெட்டியின் விளக்குகள் எரிவதற்கும் சரியாக இருந்தது. ஒளி படர்ந்ததும் அவன் கண்ணில் விழுந்தது குளிர்ச்சியான அந்தப் புன்முறுவல்தான்.

''ஹலோ!''

அவன் பதிலுக்கு வலது கையைச் சற்று உயரத் தூக்கித் தாழ்த்தினுன். ரோஜா நிறக் கன்னம். அதற்கு இணையாக நெற்றியில் குங்குமம். ஸ்நானம் செய்து எண்ணெய் இடாமல் வாரிவிட்ட கூந்தல் தளரத் தளரப் புரண்டது. நீண்டு சேர்ந்த கூர்ந்த விரல்கள் ஆரஞ்சுப் பழத்தை உரித்துக் கொண்டிருந்தன. அவன் அந்த நகச் சிவப்பையே பார்த்தபடி எதிரே உட்கார்ந்தான்.

''இந்தாருங்கள்!'' என்று அரைப் பழத்தை அவனிடம் கொடுத்தாள்.

மரியாதைக்காக வேண்டாமென்று மறுப்பதா, அவள் அப்படிக் கொடுக்கும்போது வாங்கிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்து விடுவதா, என்ற இரு எண்ணங்களுக்கும் நடுவே அவன் தவிப்பதை அவள் அவன் முகத்தில் கண்டு கொண்டிருக்க வேண்டும்.

'கலகல'வென்ற சிரிப்பு காதில் விழுந்தது. அதைத் தட்ட முடியாத நிலையில் கூச்சத்தையும் ஒதுக்கிக் கொண்டு அவன் பழத்தை வாங்கிக் கொண்டான்.

பழத்தின் இனிப்போடு தொடங்கிய பேச்சு அப்புறமும் அந்த இனிமையோடு நீண்டு கொண்டே போயிற்று.

கொஞ்ச நேரத்துக்குப் பின் பெட்டியைத் திறந்து புத்தகத்தை வெளியே எடுத்தான். இன்னும் முதல்பக்கத்தில் பெயர் எழுதவில்லை. அவன் கையிலுள்ள புத்தகத்தின் பெயர் தெரிந்ததும் அவள் பார்வையில் ஆச்சரியம் ததும்பிற்று.

''நீங்கள் படித்தாயிற்று?''

''இது லைப்ரரி புத்தகம் இல்லை.''

''பின்னே?''

''உங்கள் புத்தகம்!''

அவன் பேச்சின் பொருள் புரிபடாமல் அவள் புருவங்கள் கூடின.

''உங்களுக்காக வாங்கினேன் — ''

''இதெல்லாம் என்ன?''

அந்தக் குரலில் கண்டிப்பு இருந்தாலும், மறுப்பு இல்லை. அவன் அக்கறைக்கு ஆளாகிவிட்ட பெருமிதமும், அவன் குழம்பிநிற்பதைக் கவனிக்கும் நிலையில் தான் இருக்கும் லேசான கர்வமும் பார்வையில் மலர்ந்து நின்றன:

''நீங்கள் கொடுத்ததை நான்மறுத்தேனு?''

அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை; பதிலைக் கேட்கும் ஆர்வமும்தான்.

''அரை ரூபா ஆரஞ்சுப் பழத்துக்கு ஆறரை ரூபாய் புத்தகமா? எனக்குச் சரியான லாபந்தான்!'' என்ருள் அவள்.

''இது எனக்குப் பிடித்த நஷ்டந்தான்!''

அவன் பதிலில் அவள் பார்வை இளகிற்று:

''இது நான் வெகுநாட்களாக வாங்க வேண்டுமென்று நினைத்திருந்த புத்தகம்'' என்று சொன்னுள். அந்தப் பதிலில் அவன் முகம் மலர்ந்து போகுமென்று அவளுக்குத் தெரியும்.

புத்தகத்தை மடியில் வைத்துக் கொண்டு அவள் தன் பெயரை எழுதினுள். குழந்தை ஆர்வத்தோடு அவள் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவதை அவன் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

'மேல் பெர்த்'தில் இன்பக் கனவுகளில் உறங்கிவிட்ட அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த போது கீழே எதிர் ஸீட் காலியாக இருந்தது. அவள் முன்னுல் ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கி யிருக்க வேண்டும்; எதையோ நழுவ விட்டதைப் போல நெஞ்சில் ஓர் ஏக்கம்.

அந்தப் புத்தகத்தையே மறுபடியும் அவள் கையில் பிடித்துக் கொண்டு நிற்க, அவன் அவள் தோள் மேல் இடித்தபடி நின்று கொண்டு அவன் பெயரையும் பின்னுல் சேர்த்து எழுதினுள். அந்த முதல் பக்கத்தில், ராஜலக்ஷ்மியாக இருந்தவள் ராஜலக்ஷ்மி சேகராக மாறியதும் விளைந்த முதல் மாறுதல் அது. ஆனுல் அந்த இரு பெயர்களாலும் அவன் அவளை அழைத்ததில்லை; ராஜி — என்று நிறுத்திக் கொள்வதில் அவனுக்கு ஓர் ஆசை.

அவர்களுக்குள்ளே பகிர்ந்து கொண்ட செய்கைகள் ஒவ்வொன்றுக்கும் இப்போது ஒரு புது அர்த்தம் தெரிந்தது. அவள் அவன் உடைமையாகிவிட்ட சுவாதீனம், அதன் நினைப்பில் நெஞ்சில் விளைந்த பெருமை, அவள் ஆர்வம் கனிந்த செயல்களில் நிழலிடும். நான்கு பேர்களுக்கு முன்னுல் அவளைப் பெயரைச் சொல்லி அழைக்கும் போது, தான் மறைவில் கைவிரல்களைச் சுற்றிக் கொள்ளும்போது, திடீரென்று சமையலறையிலிருந்தோ மாடி வளைவிலோ அவள் தோன்றும் போது, கண் சிமிட்டிச் சிரிக்கும்வேளையில் — இப்படி அந்த உறவில் ஒரு புது மணம்.

''அவள் அவனுடையவள். அவள் அன்பு முழுதும் அவனுக்கே சொந்தம். அந்த இதய அந்தரங்கங்களில் அவன் ஒருவனுக்குத்தான் இடம்'' என்று அதையே வெவ்வேறு விதமாக நினைத்துப் பார்ப்பதில் மனத்



மக்கள் பலரும் விரும்புவது
தங்க பஸ்பம் புகையிலை
ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS

திருப்தி அடைவான் சேகர். வெளியே போய் விட்டு இருவருமாக நேரம் கழித்துத் திரும்பும்போது, வாசற்கதவின் தாழ்ப்பாளைத் திறக்கும் சத்தம் கேட்டு, அக்கம்பக்கத்தில் குடி இருப்பவர்கள் ஜன்னல் வழியே பார்த்துவிட்டு விலகிக் கொள்வார்கள். வீட்டு வாசலில் டாக்ஸியைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு அவள் ஏறிக் கொண்டதும் தானும் பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து கொள்ளும்போதும் அப்படித்தான்.

அந்த ஒட்டுறவில், அதற்கான உரிமை அவனுடையது மட்டுமே என்ற நினைப்பில், அவன் உள்ளத்தில் பெருமிதம் நிறைந்தது.

பின்னிலாக் காலம். திறந்த மாடியில் நின்று கொண்டிருந்தான். குளிர்ந்த காற்று கண்ணிமைகளை ஒத்தி எடுத்தது. அவள் அவன் பின்புறமாக வந்து நின்றாள். காற்றில் சேலை அவன் மேல் படபடத்தது.

எட்டரை மணிக்கு ரயில். வாசல் அறையில் வரிசையாக மூட்டைகளும், பெட்டியும், படுக்கையும் தெரிந்தன. அவள் ஊருக்குப் போகிறாள். இருவருக்கும் இடையே ஆறுமாத இடைவெளி.

இள நிலவின் நரை வெளுப்பில் அவள் முகம் களையாக இருந்தது. நெற்றி மயிரைச் சுருட்டி இழுத்தபடி, ஜன்னலோரமாக உட்கார்ந்து கொண்டு, புத்தகம் படித்தபடியே அவன் அவளைக் கூப்பிடும், பேசும் வழக்கம் அவள் நினைவுக்கு வந்தது. அந்தக் குரல் அவள் எங்கிருந்தாலும் அவளை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தி விடும். அருகே வந்து புத்தகத்தைப் பிடுங்கி வைத்துவிட்டுக் கைகளைச் சேர்த்து வைத்துக் கொள்வாள்.

மீட்டர் டாக்ஸி வந்துவிட்டது. அவன் வழியனுப்ப ஸ்டேஷனுக்குப் போகவில்லை; கடைசி நேரப் பிரிவை எவ்வளவு நேரம் பொறுத்துக் கொள்ள முடியும் என்ற சுய நம்பிக்கை அவனுக்கே திடமாக இல்லை.

வீட்டில் அவள் கைபட்ட அடையாளங்கள் மட்டும் இருந்தன. அவள் நினைப்பிலிருந்து அவனுக்கு விடுதலை இல்லை. அவள் விட்டுச் சென்ற, எடுத்துச் செல்ல மறந்துபோன சாமான்கள் எல்லாவற்றையும் தோல் பெட்டியில் பொறுக்கிப் போட்டு வைத்திருந்தான். புதிதாக வாங்கி உபயோகப்படுத்தாமலே நின்று போன மான் சவரி, கைவிரலில் போட்டுக் கொள்ளும் போலித் தங்க நெளி, வழக்கமாக அவள் இட்டுக் கொள்ளும் சாந்து தங்கிப் போன குப்பி இப்படி எத்தனையோ? அந்தப் பெட்டியைத் திறந்ததும் அந்த நினைவு 'கம்'மென்று மனத்தில் கமழும். அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து வரும்.

அவளும் எழுதுவாள். அந்தக் கடிதங்களில் மனத்தையே திறந்து கொட்டி விரிப்பாள். ஆனால் அந்தக் காகிதம் அவளை நேரில் கொண்டு வந்து நிறுத்த முடியுமா? அவ்வளவு சொற்களும் சேர்ந்து அவள் கன்னங்களில் ஒருமுறை சேரும் விரற் பிடிப்புக்கு ஈடாக முடியுமா?

வாய் திறந்து சொல்ல முடியாமல், ஓர் ஏக்கம்; விழுங்கவும் முடியாமல், கொப்பளிக்கவும் இயலாமல் வாய்க்குள் நிறைந்து விட்ட பொருளைப் போல,

ஒவ்வொரு மாதமாகத் தள்ளி விட்டான்; இப்போது அவள் திரும்புகிறாள். குழந்தைக்கு மூன்று மாதங்கள்.

புத்தகத்திலிருந்து கடிதத்தை உருவி எடுத்தான். அதில் இருந்த வெறும் வரிகள், உணர்ச்சியின் நிழல் படியாமல் இயந்திர இயக்கமாக விழுந்துவிட்ட வார்த்தைகள், அவன் வேதனையைத் தூண்டின. அலட்சியம் செய்யப்பட்டு, ஒதுக்கிவிட்டது போல் அவனுக்கு ஓர் ஏக்கம்; தன் மேல் தனக்கே எழுந்த ஒரு பரிதாபம்.

இரண்டு மாதங்களாக அவளிடமிருந்து வந்த கடிதங்கள் எல்லாமே அப்படித்தான் இருந்தன. ஒழிவில்லையோ? மனமில்லையோ? மனம் இல்லை என்றுதான் அவனுக்குப்பட்டது. அவளிடம் பழைய தீவிரம் இல்லை; அவர்கள் உறவில் இருந்த பழைய வேகம் ஏனோ ஒடுங்கி விட்டது. சாறு பிழிந்த பழம் போல் அதில் இனிமை வழிந்து விட்டது.

விடியற்காலை நேரத்தில் ரயில். அவன் சீக்கிரமாக எழுந்து ஆட்டோரிக்ஷாவில் போனான். விடிவதற்கு அறிகுறியாகத் தெரு விளக்குகள் அணைந்து விட்டன. இருள் பிரியும் நேரம். வெள்ளொளியில் ஓய்ந்து திரிந்த வடிவங்களாய் இரண்டொன்று பார்வையில் தெரிந்தன. அவனுக்கும் இரவு தூக்கம் சரியாக இல்லை.

ரயில் வருவதைப் பற்றி ஒலிபரப்பில் சொன்னது அவன் காதில் விழுந்தது. அவன் மனத்தில் ஒரு பரபரப்பு, பெருமூச்சு விட்டுக்கொண்டு நுழையப் போகும் என்ஜினை வரவேற்க.

அவள் இரண்டாம் வகுப்பு வண்டியில் வந்து இறங்கிக் கொண்டிருந்தாள். அந்த நிலையிலும் ஒரு சாவதானம்; அவன் வராமல் போகமாட்டான் என்று முன்கூட்டி அவளே தீர்மானித்து விட்டதைப் போல; முகம் அருமையாகப் பாராட்டிச் சேர்த்த செழுமையில் பளபளத்தது. தனியாய்ச் சேர்த்த சௌக்கியத்தில் திரண்ட கைகள்; உடலில் செறிந்து நின்ற தளதளப்பு. சந்தோஷமும் பெருமையும் கலந்து எழுந்த பார்வை.

ஆனால் அந்த முகத்தில் அவனுக்குப் பழக்கமான அடையாளம் இல்லை. அது அவனுக்கு இத்தனை நாட்களாய்ப் பரிச்சயமான முகம் இல்லை. அவன் நெஞ்சில் இதழ் பிரிந்து உதிர்ந்த நினைவுகளில் தேடித் தேடிப் பார்த்தாலும் இதைப்போல் ஒரு பார்வை அவனுக்குக் கிடைக்காது. இந்த ராஜி யார்? ரயில் பெட்டியில் அவனுடன் பேசிக் கொண்டு வந்த பெண்ணும் இல்லை. முன்னிலவின் ஒளியில் அவன் கைகளுடன் கோத்து இழைந்து நின்ற பெண்ணும் இல்லை.

அவன் நினைவில் ஒன்றிய நிலை; அவன் வாழ்வில் கலந்து நின்ற நிலை; இப்போது அவனிடமிருந்து ஒதுங்கி நின்றுவிட்ட நிலை; அவன் அவளிடம் இழைந்த நாட்கள்; அவள் தன்னை அவனுக்கே ஈந்துவிட்ட நாட்கள்; இப்போது அவளை அவன் பிரித்து நிறுத்தி விட்டுத் தனிக்கும் சமயம்.

அதன் மூன்றும் படிவத்தில் அவன் கால் பாவ மறுத்தது. அதில் பிடிப்பில்லை. புரியாத ஏமாற்றம்; நெஞ்சில் நச்சரித்தது.

இப்போது அவன் மனம் கவர்ந்த பெண்ணும் இல்லை; வாழ்வைப் பகிர்ந்து கொண்ட

மனைவியும் இல்லை. அவள் ஒரு நாள். அவனிடமிருந்து பிரிந்து ஊருக்குப் போன ராஜி வேறு. இப்போது அவனிடம் வந்து சேர்ந்திருக்கும் ராஜி வேறு. அவன் மனத்தில் சமாதானம் ஏற்படவில்லை.

"நீங்கள் என்ன பார்த்துக் கொண்டே நிற்கிறீர்கள்?"

அவன் சட்டென்று விழித்துக் கொண்டான். சாமான்களைப் போர்ட்டர் தலையில் ஏற்றி விட்டு அவனும் கூடப் போனான். அவள் கை நிறையப் பிரித்திருந்த துணிகளின் நடுவே ரோஜா நிறக் குல்லாய் நெற்றி வரையில் கவிழ்ந்து மறைக்க, குழந்தை கன்னம் மேல் அழுந்தியபடி தூங்கிக் கொண்டிருந்தது.

வீட்டில் காலடி எடுத்து வைக்கும்போதே குழந்தை அழும் சத்தம் கேட்கும். கூடவே அவள் சமாதானம். அவன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து காத்திருக்க வேண்டியதுதான். கடைசியில் அவளைத் தேடிக் கொண்டு பின்புறம் போவான்.

அவளிடம் சொல்ல வேண்டும் என்று நாள் முழுவதும் நினைத்துப் பேச்சை உருவாக்கிக் கொண்டு வருவான். அவளுக்குக் கேட்க அவகாசம் இருக்காது. இருந்தாலும் பாதியில் அவனை நிறுத்தி விட்டுக் குழந்தையை எடுத்துக் கொள்ளப் போய்விடுவாள். மறுபடியும் அவள் வந்து அவனிடம் ஏதாவது பேசினால் அது குழந்தையைப் பற்றியிருக்கும். அவனது ராஜியா அவள்?

குழந்தை அவளை அவனிடமிருந்து எடுத்துக் கொண்டு விட்டது. அவளுடைய ஆசை அன்பு, பிரியம், நினைப்பு எல்லாவற்றிலும் முழுமையிருந்தது. ஆனால் அவனுக்கு அதில் பங்கில்லை. குழந்தை அவளைக் கவர்ந்து விட்டது. அது அவன் குறையா? மனத்தில் பொறாமையா? வேடிக்கைதான்.

அன்று குழந்தைக்காக அவன் ஒரு சட்டை வாங்கிக் கொண்டு வரச் சொல்லியிருந்தாள். கையில் பொட்டலத்துடன் திரும்பும்போது அவள் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்; அவனுக்காக இல்லாவிட்டாலும், குழந்தையின் சட்டைக்காகவாவது.

அவன் அருகே வந்து நின்ற போது அவள் ஜன்னல் மாடத்தில் பால் பவுடர் டின்னை வைத்து தெம்பித் திறந்து கொண்டிருந்தாள். அவள் அவனைக் கூப்பிடவில்லை. பக்கவாட்டில் நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தோள் வளைவும், கைகளின் குழைவும், கூர்ந்து நின்ற பார்வையை மறைக்கும் முன் மயிர்ச் சுருள்களும்— எவ்வளவு அழகான கண்கள்? இன்னும் குன்றாத இளமை.

அவன் கைப்பிடியில் பொட்டணம் கசங்கிய சத்தம் கேட்டு அவள் திரும்பினாள். ஆனால் அவள் கவனம் இன்னும் பாதி திறந்த டின்னின் பேரில் தான் இருந்தது. நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகள். விளக்கின் ஒளியில் கன்னங்களில் இலேசாகப் படர்ந்த அந்த ஆயாசமும் அழகாகத்தான் தோன்றியது. அவன் கையைப் பார்த்ததும் அவள் கண்கள் ஆவலில் விரிந்தன.

"எங்கே, பார்க்கலாம்?"

அவன் கொடுக்குமுன் அவளே பிடுங்கினாள் அவன் கையிலிருந்து. காகிதம் பிரிந்ததும் அவள் முகம் சுருக்கென்று விழுந்தது. உதட்டைக் கடித்துக் 'சுள்' கொட்டினாள்.

"சட்டையும் நிஜாருமாகவா வாங்கினீர்கள்? பின்னைக் குழந்தைக்கு ராம்பஸ் தானே நன்றாக இருக்கும்?"

பொட்டலத்தைக் கீழே வைத்து விட்டாள். அவள் குரலில் ஏமாற்றம் தொனித்தது. அவன் நெஞ்சிலும் ஏமாற்றம்தான் பொங்கி எழுந்தது. அவளுக்குத் தெரியவில்லை; அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை: அவனை, அவன் ஆசைகளை, எதிர்பார்ப்புகளை — எதையுமேதான்.

நெஞ்சில் அலுப்புத் தட்டியது.

நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டான். உள்ளேயிருந்து அவள் நடந்து வரும் சத்தம் கேட்டது.

"உங்களுக்கு என்ன? ஏன் எப்படியோ இருக்கிறீர்கள்?"

அவன் பதறிப் போனான். விரல்கள் அவன் நெற்றியில் படிந்தன. கொதிப்பு அங்கே இல்லை. அவளுக்குப் புரியாத புதிர்.

கண்களைத் திறந்து பார்த்தான். மடியில் குழந்தை. அவள் குழந்தையைச் சற்றுத் தூக்கிப் பிடித்துக் கொண்டாள். தூக்கத்தில் புன்னகை இதழோரங்களில் ஒளிந்து விளையாடிற்று.

"ராஜி! நீ பழைய ராஜி இல்லை. நீ என்னை மறந்து விட்டாய். முன்னைப் போல் இருப்பதில்லை: பேசுவதில்லை. உன்னை என்னிடமிருந்து குழந்தை பிரித்து விட்டது. உங்களுக்கு நடுவே நான் இருக்கும் நினைவு உனக்கு இல்லை."

அவள் 'பக்'கென்று சிரித்து விட்டாள். அவன் வேதனை அவளுக்கு வேடிக்கையாகப் பட்டிருக்க வேண்டும். குழந்தையை அவன் மடியில் வைத்தாள்.

"இங்கே பாருங்கள். நீங்களே சொல்லுங்கள். குழந்தை யாருடைய ஜாடை?"

அவன் குனிந்து பார்த்தான். தக்காளிப் பழம் போல மினுமினுத்த கன்னங்கள். அடர்ந்த மயிர் கண்களின் மேல் வழிந்தது. அவளைப் போல விழிகள் கருவண்டின் நிறம்.

"உன் ஜாடைதான் ராஜி!"

அவள் கண்கள் புன்னகை புரிந்தன. குழந்தையை எடுத்துக் கொண்டு கன்னத்தில் அழுந்த வைத்துக் கொண்டாள்.

"நான் எத்தனையோ தடவைகள் பார்த்து விட்டேன். திரும்பத் திரும்ப எனக்கு உங்கள் முகம்தான் தெரிகிறது அதில். வேறு எந்த ஜாடையும் புலப்படவில்லை."

அவனுக்கு விழிப்பு கண்டது போல் இருந்தது. அவள் குரல் அவன் நெஞ்சைத் தொட ஏதோ புரிவது போலத் தோன்றியது.

அவள் தொடர்ந்தாள்:

"குழந்தையிடம் நீங்கள் என்னைத்தான் பார்க்கிறீர்கள். நானோ உங்களைத்தான் பார்க்க முடிகிறது. நம்முள் உருவமில்லாமல் அலைந்து கொண்டிருந்த அன்புக்கு இப்போது உருவம் தெரிந்து விட்டது. அதைத்தான் இரண்டு பேரும் பார்க்கிறோம். வேறு எப்படிச் சொல்ல முடியும்?"

மடிமேல் சாய்ந்தவளை அப்படியே அணைத்துக் கொண்டான். அப்போதுதான் புதிதாய்க் காண்பதுபோல் ராஜியின் உருவம் அவன் நினைவில் பூத்தது.

ரோஜாவின்

நறுமணம்...

ஒரு பவுண்டு ரோஜா எண்ணெய் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 4000 பவுண்டு ரோஜாக்கள் வேண்டியிருக்கிறது. ஆனால் கோத்ரெஜ் ந. 1 லிருந்து ரோஜாக்களின் ஆனந்தமயமான நறுமணத்தை நீங்கள் பெறலாம். ரோஜாவின் இனிய நறுமணம் பெரிய–சைஸ் ந. 1ல் மிகச்சிறந்த பாணியில் சேர்க்கப்பட்டு இயந்திரத்தினால் உரையிடப்பட்டுள்ளது

புதிய ஆராய்ச்சிகள், நூதன முறைகள், நவீன இயந்திரங்கள், பல ஆண்டுகளில் ஏற்பட்ட சிறந்த தொழில் நுட்ப அறிவு இவைகளெல்லாம், கோத்ரெஜின் மற்ற சோப்புகளுடன், இந்த முதல் தாவர எண்ணெய் ஸ்நான சோப்பின் தோன்று தொட்டு ஏற்பட்ட சுத்தம் செய்யும் தன்மையையும், உடம்புக்கு இதமளிக்கும் குணங்களையும் இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன.



கோத்ரெஜ்

ந. 1 ஸ்நான சோப்

பெரிய–சைஸ்

சிறந்தது, சுதேசியம் கூட



கோத்ரெஜ் சோப்புகளில் புகழ்பெற்ற பெயர்


ஓடப்பந்தயம் -10
கதை: ஏ.எஸ்.சுந்தரராஜன்
உம், சீக்கிரம் விடப்பா...
சேகரை எங்கே கொண்டு போகிறீர்கள்? நிறுத்து காரை.
ஆ! இன்ஸ்பெக்டர்
டிரைவர் பிரேக்கைப் போட்டார். ஆனால் பின்னால் வேகமாக வந்த லாரி அந்த
உஸ் அசையக் கூடாது!
அசையவில்லை. டாக்டர் சேகர் என்ன ஆனார்?
இதோ இருக்கிறேன். கார் விபத்து என் மூளை அதிர்ச்சியைக் குணமாக்கி விட்டது!
டாக்டர், அதோ போலீஸார் வருகிறார்கள். இப்போதாவது சொல்லுங்கள். உங்களை ரயிலிலிருந்து பிடித்துத் தள்ளியது யார்?
பயப்படாதே
ஆ! பாண்டித் துரையா?
ஆமாம். இவன் ஒன்று விட்ட தம்பி முறை எனக்கு. சொத்து விஷயமாக எழுந்த மனதில் கொண்டு விபரீத மாக விளையாடி விட்டான்.



பாண்டித்துரை சென்னையில் இல்லையா...
ஓ, அந்தத் தந்தி விஷயமா? நான் ரயிலிலிருந்து கீழே விழுந்த போது தான் சென்னை-யில் இருந்ததாகக் காட்டிக் கொள்ளவே அது. உண்மையில் நான் வந்த ரயிலிலேயே அவனும் பிரயாணம் செய்தான். திண்டி-வனத்தில் என் பெட்டிக்கு வந்தான். ஓடும் ரயிலில் இருவருக்கும் சண்டை நடந்தது. நான் கீழே விழுந்தேன்.
உங்களைத் திட்டப்படி கீழே உருட்டிவிட்டு நல்லபிள்ளை மாதிரி அடுத்த ஸ்டேஷனில் இறங்கித் தன் ஊர் திரும்பிவிட்டான் பாண்டித்துரை. நடந்தது அதுதானே?
ஆமாம்.
மிஸ்டர் பஞ்சு! உங்களைச் சந்தேகித்து ரொம்பத் தொந்தரவு கொடுத்துவிட்டோம்.
இல்லை! உங்கள் கையில் சிக்காமல் அவர்தான் ரொம்பத் தொந்தரவு கொடுத்து-விட்டார்.
அதே சமயம் ஆஸ்பத்திரிக்குள்...
என்ன சார்! உங்கள் மகளுக்கு என்ன?
அந்தப்பாவி பாண்டித்துரை புதுப்பணக்காரனாகிவிட்ட-தாகச் சொன்னான். அதை நம்பி என் மகளை அவனுக்கு மனைவியாக்க ஏற்பாடு செய்தேன். பாரிஜாதம் ஏதோ விஷத்தைக் குடித்து...
ஐயோ, பாரிஜாதம்! கடைசியில் உன்னை நான் சவமாகத்-தான் சந்திக்க வேண்டுமா?
உஸ், அசட்டுத்தனமாக உளறாதே. டாக்டர், கொஞ்சம் இந்தக் கேஸைக் கவனித்துப் பாருங்கள்.


இது... இது யாரு? ஓ! போலி டாக்டர்!
இரந்ததாகச் சொல்லப்பட்ட டாக்டர் சேகர் இவர்தான்.
அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் மாமா.
இரட்டைத் திருமணத்துக்குப் பின் தோட்டத்தில்...
உஸ், இது என்ன விஷயம்? அப்பாவுக்கு மறுபடியும் முதுகுவலியாம். போய் ஊசிப்போட்டுவிட்டு வாருங்கள்.

(முற்றும்)

'பாலி, பாலி, பாலீ!'

வாழ்க்கையில் ஓர் உவப்பு, ஒருவித உணர்ச்சி வேகம், ஒரு துடிதுடிப்பு—
இவைதான் பஞ்சாபியர்களின் விசேஷ குணங்கள். இவை அவர்களுடைய
நாட்டு நடனமான 'பங்ரா'வில் நன்கு வெளிப்படும். நாட்டியமாடுவோர்,
'பாலி, பாலி, பாலீ' என்று அடிக்கடி களிப்புடன் கூவுவார்கள். அன்பு மொழியில்'
அதற்கு 'பிரேமைக்குரிய' அல்லது 'பிரியமான' என்று பொருள்.
இன்பவெறியில் திளைக்கும் இந்த மக்களுக்கு அரவிந்த் ஆடைகள்
எவ்வளவு பிரேமைக்குரியனவாக இருக்கின்றன!

பாப்ளின்கள்

மர்ஸரைஸ்ட் சான்போரைஸ்ட் வெள்ளை பாப்ளின்	: கோல்ட் ட்ரிங்க்
	: விஜு மாஸ்டர்
மர்ஸரைஸ்ட் சான்போரைஸ்ட் கலர் பாப்ளின்	: ப்ளூ பேர்ட்
	: டே ட்ரீம்

வேஷ்டிகள்

மர்ஸரைஸ்ட் வேஷ்டிகள்	: பிளாட்டினம் : மஹாராஜ்
	ராஜா ஸ்பெஷல் : காம்ராஜ்
மர்ஸரைஸ்ட் கெஸ் வேஷ்டிகள்	: ராணி ஸ்பெஷல்

லான்கள், ட்வில்கள், கேம்பிரிக்குகள்

மர்ஸரைஸ்ட் லான்	: எவரெஸ்ட் : 5531
மர்ஸரைஸ்ட் ட்வில்	: பேர்ட் ஆப் பெங்கால்
ப்ரின்டுகள்	: பிரின்டெட் லான்கள்

வாயில்கள் : பாப்ளின்கள் : ஸ்கிரீன் : பிரின்ட் புடவைகள்.
கெசவுப் பட்டாக்கள்

Arvind Quality Fabrics

அரவிந்த்

மில்ஸ் லி., அஹமதாபாத்-2

'SANFORIZED'



சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்தநம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தயாரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட், லிமிடெட்

புற்றுநோய்க் கோபால்ட் சிகித்சை



புற்றுநோய்க்குச் சிகித்சை அளித்துவரும் நிலையங்களில் சென்னை எட்வர்ட்ஸ் எலியட்ஸ் சாலையில் உள்ள 'பிரிமியர் ரேடியோ வாஜிகல் நிலைய'மும் புற்றுநோய் ஆஸ்பத்திரியும் ஒன்று. தனிப்பட்ட முறையில் டாக்டர் கே. ஆர். துரைசுவாமி அவர்களால் குடும்பத் தொழில் போலவே 1935-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது இந்த மருத்துவ நிலையம்.

சிறிய முறையில் தோன்றிய இந்நிலையம் நாளடைவில் மிகவும் விரிவாக வளர்ந்து, புற்றுநோய்க்கு நவீன முறையில் வெற்றிகரமாக விரிவான சிகித்சை அளித்து வருகிறது. இந்த நிலையத்தில், "கோபால்ட் ரே" சிகித்சை முறையில் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஒரு சாதனத்தை இப்போது புதிதாக அமைத்துள்ளார்கள். இந்தப் புதுப் பகுதி சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.


அணுசக்தியை நாச வேலைக்காக உபயோகப்படுத்தாமல் மனித நலனுக்கும் பல விதங்களில் உபயோகிக்கலாம் என்று அடிக்கடி சொல்லப்படுகிறதல்லவா? இவற்றில் புற்றுநோய் சிகித்சையும் ஒன்று. சாதாரண ரேடியம் சிகித்சையை விட மிகவும் சிறந்தது, திருப்திகரமானது என்று கோபால்ட் சிகித்சையை மேல்நாடுகளில் வெற்றிகரமாகக் கையாளுகிறார்கள். இதற்குத் தகுந்த கருவி "தெராட்ரான்".

இந்தச் சாதனத்தைக் கானடாவில் உள்ள அணுசக்தி ஸ்தாபனம் தயாரித்து அளித்திருக்கிறது. இந்த அதி நவீனமான கருவி மிகவும் விலை உயர்ந்தது. இம்மாதிரி யந்திர சாதனங்கள் பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் தான் இருக்கின்றன. இந்தியாவிலேயே பத்து, பன்னிரண்டு ஆஸ்பத்திரிகளில்தான் இந்தக் கோபால்ட் யந்திரம் இருக்கிறதாம். தனியார் நடத்தும் ஒரு சிகித்சை நிலையத்தில் விலை உயர்ந்த இந்தச் சாதனத்தை அமைத்திருப்பது உலகத்திலேயே இதுதான் இரண்டாவது என்று சொல்லப்படுகிறது. இந்தியாவிலேயே தனியார் வைத்திருப்பது இதுதான் முதலாவது. இந்தப் பெருமைக்குக் காரணம் தமது மனைவியும், புதல்வியும்தான் என்று டாக்டர் துரைசுவாமி மிகப் பூரிப்புடன் சொல்லிக் கொள்கிறார். பல இடையூறுகளுக்கு மத்தியிலும், பணச் செலவு பாராமல் இந்த உயரிய சிகித்சை சாதனத்தை எப்படியும் அமைத்தே தீர வேண்டும் என்று அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை அவர் பெரிதும் பாராட்டுகிறார்.

இந்தச் சிகித்சை முறையின் விசேஷம் மூன்று: அதிக சக்தி வாய்ந்த கதிர்களைக் கொண்டு பழுதடைந்த பாகத்தைத் தாக்கச் செய்வது. பழுதடைந்த இடங்களைச் சார்ந்துள்ள ஆரோக்கியமான அங்கங்களுக்கும், எலும்புகளுக்கும் இக்கதிர்களின் வேகம் பரவாமல் தடுத்தல்; கதிர்களின் வேகத்தால் தோல் கருகிப்போகாமல் தவிர்ப்பது. இந்தச் சிகித்சையின் உபயோகம் புற்று நோயால் அவதிப்படும் ஏழைகளுக்கும்கூடக் கிடைக்கும் என்று நிலையத்தின் ஸ்தாபகர் சொல்லுகிறார்.

திறப்பு விழாவுக்கு ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த யந்திர சாதனத்தை முதல் அமைச்சர் திரு காமராஜர் இயக்கி வைத்தார். ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார், டாக்டர் ஹோமி பாபா, கனடா அணுசக்தி நிலையத் தலைவர் இவர்கள் முதலியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி டாக்டர் துரைசுவாமியின் முயற்சியைப் பாராட்டினர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எத்தனை அதிஜாக்கிரதையாக இருந்தாலும் சில சமயம் புற்றுநோய் போன்ற வியாதி பிடித்துக் கொண்டு விடுகிறது. இந்த வியாதியைக் குணப்படுத்த இத்தகைய நவீன சாதனத்தின் நலனைப் புற்றுநோயாளிகளுக்கு அளிக்க முன்வந்துள்ள டாக்டர் துரைசுவாமியையும், அவர் குடும்பத்தினரையும் பாராட்டுகிறோம்.



கை மண்

வாசவன்

இரவு மணி இரண்டு.

எங்கிருந்தோ தூக்கக் கலக்கத்தில் அசதியுடன் குரல்கொடுத்து விட்டு ஓய்ந்தது மணிக்கூண்டுக் கடிகாரம்.

ஆழ்ந்த புதை இருட்டு. வானத்து வைரச் சுடர்களையெல்லாம் யாரோ களவாடி விட்டிருந்தார்கள். வீதி விளக்குகளும் விழி மூடிக் கிடந்தன. மின்சார நிலையத்தில் பழுது ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லா விட்டால் இப்படி மணிக்கணக்காய் மின்சார இயக்கம் உயிரிழந்து நிற்க வழி இல்லை. இரவின் கரிய படுதாவைக் கிழித்துக் கொண்டு ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களும் ஓய்ந்து விட்டன. ஜன சந்தடியின் கசகசப்பும் உலர்ந்து போயிருந்தது.

என்ன இது? சென்னையே அஸ்தமித்து விட்டதா?

அஸ்தமித்துத்தான் விட்டிருக்கிறது.

ஜம்புலிங்கத்தின் பத்து வருஷத்திய பரந்த அனுபவத்தில் இத்தகைய சாதகமான சந்தர்ப்பங்கள் இரண்டோ மூன்றோ தான் கிடைத்திருக்கின்றன. அப்பொழுதெல்லாம் அவன் காட்டில் பெய்தது சிறு தூற்றல் அல்ல; பெரு மழை. ஒரு சமயம் ஐந்நூறு ரூபாய் ரொக்கம். இன்னொரு சமயம் பத்துப் பதினைந்து பவுன் எடையுள்ள நகைகள். மற்றச் சமயங்களெல்லாம் ஒரு வேளை 'நாஷ்தா'வுக்குக் கூடக் காணாத சோமாரி 'பிக்பாக்கெட்' தான்!

இப்பொழுது அவனுக்குக் குறைந்தது நானூறாவது வேண்டும். திருநெல்வேலிச் சீமையில் கட்டை ஆலங்குளத்தில் அவனுடைய பூர்வீகக் கொல்லைக்காடு முந்நூறு ரூபாய்க்கு ஏலம் வந்திருக்கிறது. அது தானாக ஏலத்துக்கு வரவில்லை. ஜம்புலிங்கம் 'மூணு சீட்டு' ஆட்டத்துக்காக மாரியப்ப நாடாரிடம் ஒரு பச்சை நோட்டைக் கைநீட்டி வாங்கி, சர்க்கார் முத்திரை ரசீதிலும் கைநாட்டுச் செய்தான் அல்லவா? அதுதான் இப்பொழுது முந்நூறு ரூபாய்ப் பூதமாக வளர்ந்து, இருபது மூட்டை கடலை விளையக் கூடிய கொல்லைக் காட்டை விழுங்கப் பார்க்கிறது. அதை அவன் மீட்டுக் கொடுக்கா விட்டால் அவனுடைய வயதான தாய் இசக்கியம்மாள் தோதுப் பிசகான காரியத்தைச் செய்து கொண்டு விடுவாள். 'பணம் தண்ணீராக ஓடிக் கொண்டிருக்கும் பட்டணத்துக்குப் போய்ப் பத்து வருஷங்களுக்கு மேலாகியும் இதுவரையில் நீ செப்பால் அடித்த சல்லி கூட அனுப்பவில்லை. நானும் இந்தத் தள்ளாத வயதில் எவ்வளவோ கஷ்டப்பட்டு உன் பெண்சாதியையும், பிள்ளை குட்டிகளையும் காப்பாற்றி வருகிறேன். இப்பொழுது நம் கொல்லைக் காட்டை மாரியப்ப நாடார் ஏலத்துக்குக் கொண்டு வந்து விட்டார். ஏல வாயிதா இன்னும் இரண்டுவாரங்களில் வருகின்றன. அதற்குள் நீ பணம் கட்ட ஏற்பாடு செய்யா விட்டால், என்னை நீ உயிரோடு பார்க்க முடியாது!' என்று கண்டிப்பாகக் கடிதம் எழுதி விட்டாள் இசக்கி அம்மாள். எதிலும் கண்டிப்புப் பேர்வழி. அவள் சொன்னபடியே செய்து கொண்டு விட்டாள், அந்தக் குடும்பத்தைக் கட்டி மேய்ப்பது யார்?

'ஏன், ஜம்புலிங்கம் இல்லையா?'

'இல்லை' என்றுதான் தோன்றிற்று ஜம்புலிங்கத்துக்கு. —ஊருக்கு இனி எந்த முகத்தோடு போவான்? போவதற்கான காரியத்தையா செய்து வந்திருக்கிறான்? ஊரில் அவமானம் தாங்க முடியாமல், குப்பமுத்து ஆசாரி வீட்டு ஜோடி மயிலையை இரவோடிரவாய்த் தொழுவத்திலிருந்து பிடித்துக் கொண்டு போய்க் கோவில்பட்டியில் பாதி விலைக்கு விற்று விட்டுப் பணத்துடன் ரயில் ஏறி வந்தவன், இனி ஊர் திரும்ப என்ன மரியாதை இருக்கிறது? பட்டணத்துக்கு வந்த பிறகாவது ஒழுங்காகப் பிழைத்திருக்கலாம். வேலைக்கு வளையாத உடம்பு ஆயிற்றே? திருட்டுப் பிழைப்பே அவன் தலை எழுத்தாயிற்று.

இந்தப் பொல்லாத தலை எழுத்தை அவன் ஊருக்குச் சுமந்து கொண்டு போகத் தயாராக இல்லாத வரையில், குடும்பத்தை இழுத்துப் போர்த்துவதற்கு இசக்கி அம்மாள் இருந்து தான் தீர வேண்டும். அவள் இருந்துதான் தீர வேண்டும் என்றால் அவன் எப்படியாவது முந்நூறு ரூபாய் அனுப்பியே ஆக வேண்டும். முந்நூறு மட்டும் அனுப்பினால் போதாது. மேலே ஐம்பது ரூபாயாவது கைச் செலவுக்கு அனுப்ப வேண்டாமா? கோவிந்தன் நாயர் கிளப்புக் கடைக்குப் பத்து நாட்களாகப் பாக்கி. சாப்பாட்டுக்கு இலை போடும் போதெல்லாம் பின்னைப் பூச்சியாய்ப் பிடுங்கி எடுக்கிறான். தின்கிற சோறு உடம்பில் ஒட்டினால் தானே? அதற்கு முன்னால் எல்லாம் சாப்பிட்ட கை காய்வதற்கு முன்னே சில்லறையை எடுத்து அவன் அவசியமாக விட்டு வீசவில்லையா? ஏதோ இப்பொழுது பத்து நாட்களாகத் 'தொழில்' படு 'டல்'. இது தெரிகிறதோ அந்த 'எத்தா' கோவிந்த

நாயருக்கு? அவன் முகத்திலும் முப்பது ரூபாய்க் காசை அவசியம் விட்டு எறிந்துவிட வேண்டும். அடுத்த 'தொழில்' கிடைக்கிற வரையில் கையில் பத்து இருபது ரூபாய் இருந்தால் தான் நல்லது.

கூட்டினாலும் குறைத்தாலும் ஜம்புலிங்கத்துக்கு நானூறு ரூபாயாவது வேண்டும். எங்கே இருக்கிறது அந்த நானூறு?

அதைத்தான் இந்த இருட்டில் தேடிக் கொண்டிருந்தான்.

அதோ அந்தப் பங்களா எவ்வளவு உயரம்? அங்கே நானூறு தானா அகப்படும்? எட்டையபுரம் தொட்டிச்சி அம்மாள் 'பிரம்புச் சோபியம்' பாடியபடி 'சக்கிர தசை' அடித்தால் ஐயாயிரமோ பத்தாயிரமோ கூடக் கிடைக்கலாம்! ஐயாயிரம். பத்தாயிரமா?... அம்மாடி!

புல்லரித்தது ஜம்புலிங்கத்துக்கு.

அந்தப் புல்லரிப்பு அடங்க அவனுக்குக் கொஞ்ச நேரம் ஆயிற்று. பிறகு இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். செருகி வைத்திருந்த கத்தி முனை அவன் கையை அருவிற்று. எதிர்ப்பு இல்லாதவரை நல்லது. இருந்து விட்டாலோ ஒரே குத்து.....

பங்களாவை நெருங்கி விட்டான்.

வாசலில் யார் காக்கிச் சட்டையுடன்? போலீஸா? க்கூம்... தலையில் சிவப்புத்தொப்பி இல்லையே! அவன் கூர்க்கா. கையில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டே தூங்கி வழிகிறான். உள்ளே போர்டிகோவில் ஓர் உயர்ந்த ஜாதி நாய் படுத்துக் கொண்டிருக்கிறது. அடிக்கடி அது தலையைத் தூக்கிப் பார்ப்பதும், பிறகு தலையைப் புதைத்துக் கொள்வதுமாக இருக்கிறது.

ஜம்புலிங்கம் அந்த வழியைத் தேர்ந்தெடுக்க முட்டாள் இல்லை. ஆனால் அவனைக் காட்டிக் கொடுக்கக் கூடிய எதிரிகளின் 'நிலை'யை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

எதிரிகள் அயர்ந்திருக்கிறார்கள்! அவ்வளவு போதும்.

ஜம்புலிங்கம் பின்புறம் நோக்கி நடந்தான்.

வெளிச்சுவர் வழியாக உள்ளே குதித்து, தண்ணீர் போக்கிக் குழாய் வழியாக மேலேறி மாடிக்குப் போய், திறந்திருந்த கம்பி இல்லாத ஜன்னல் வழியாக உள்ளே குதிக்கும் வரை அவன் போட்டிருந்த திட்டங்களில் ஒன்றுகூடப் பிசகவில்லை.

இருளின் தோழமையால் எவ்வளவு உரிமையுடன் போய்க் கொண்டிருக்கிறான்? 'ஆமாம்! எங்கே போவது?' இப்படி ஒரு கேள்வியை அவன் கேட்டுக் கொண்ட போதுதான், அவன் அந்தவீட்டுக்கு அந்நியனாக இருந்தான்:

'எங்கே இருக்கும் இரும்புப் பெட்டி?'

அவனுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. நியாயமாகத் தெரிந்து கொண்டிருக்கிற அந்த வீட்டின் உரிமையாளர் இப்பொழுது அநியாயமாகத் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். எவ்வளவு அமைதி?

அவ்வளவு அமைதியான சூழ்நிலையிலும் துளிகூட அமைதியில்லாமல் தட்டுத் தடுமாறிப் போய்க் கொண்டிருந்தான் ஜம்புலிங்கம்.

கையில் தட்டுப்படுவது என்ன? ஸ்பரிச உணர்ச்சியில் கூட ஏதோ ஒரு மாறுபாடு நிகழ்கிறதே! 'மொழுக் மொழுக்'கென்று. சின்ன முகமும். சின்னக் கைகளும்....

ஜம்புலிங்கம் உஷாராகி விட்டான். காலை இடறுவது அறுகம் புல்லாக இருந்தாலும் முதலில் அதைக் களைந்து எறிய வேண்டிய அவசியத்தை மாமேதை சாணக்கியன் மட்டுமல்ல: இந்த ஜம்புலிங்கமும் அறிந்து வைத்துக் கொண்டிருந்தான். கையில் தட்டுப்பட்டது சின்னக் குழந்தைதான். ஆனாலும் எதிரி என்றுவிட்ட பிறகு எந்த ஒரு துரும்பையும் அலட்சியப் படுத்துவதற்கில்லை. இடுப்பிலிருந்து எடுத்த கத்தியை ஓங்கினான்.

எதிரில் சாத்தி வைக்கப்பட்டிருந்த அறைக் கதவின் இடுக்கிலிருந்து நீண்ட முறுக்குக் கயிறு போன்ற விடி விளக்கின் ஒளி அந்தக் குழந்தையின் பாதத்தை வருடியது.

அவனுக்கு அதிகம் இருந்தால் பத்து வயதிருக்கும்! ராக்ஷஸி! அவன் கத்தியை ஓங்குகிறான். இவன் சிரிக்கிறானே! புன்மையைப் போக்கி விடுகிற பராசக்தியா அவன்?

ஜம்புலிங்கம் திணறுகிறான். பலத்தால் கட்ட முடியாத தன்னை, ஓர் அரைச் சிரிப்பாலேயே அங்கம் முழுதுமாகக் கட்டி அம்மானை ஆடிவிட்டானே அவன்! அவன் அப்படியே அயர்ந்து நிற்கிறான்.

''நீ என்னைக் குத்தல்லே?'' ரகசியக் குரலில் கேட்டு, இலைகள் அசைவது போலச் சிரிக்கிறான் அவன்.

அவன் குரல் காற்றுப் போல் ஊடுருவி, அவன் இதய அந்தரங்கத்தில் குவிந்திருந்த குப்பை கூளங்களைச் சிதறிப் பறக்க விட்டு விட்டதா, என்ன?

ஜம்புலிங்கம் கையிலிருந்த கத்தி இடுப்பில் போய்ப் படுத்து விடுகிறது. இவ்வளவு பெரிய வீட்டில் இந்தக் குழந்தை மட்டும் விழித்திருப்பானேன்? திருடனைக் கண்டு பயப்படாமல், கத்தியைக் கண்டு அலறாமல் திருடனை ஊமைத்தனமாய்த் தாக்கி இப்படிச் சிரித்து வழிவானேன்?



"பெரியவாளெல்லாம் விழிச்சுண்டுடுவா. இந்தே என் கூட வர்றியா?" கேட்டவள் அவன் பதிலுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவன் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டு மொட்டை மாடிக்கே போய் விட்டாள்.

ஜம்புலிங்கத்தின் உணர்வுகளை யெல்லாம் திருடிக் கொண்டு விட்ட அந்தக் குழந்தை, "நீ திருடன்தானே?" என்று மெதுவாகக் கேட்டாள்.

அவன் திருட வந்தது உண்மை. ஆனால் திருடியவள் அவள். தன் மெல்லுணர்வுகளைத் திருட்டுக் கொடுத்தவன் அவன்.

அவளே தொடர்ந்து பேசினாள்: "எனக்குத் தூக்கமே வரல்லே. விழிச்சிண்டிருந்தேன். நாங்கள்ளாம் படுத்திண்டிருந்த அறைக் கதவு வேறே லேசா விரிஞ்சிண்டிருந்ததா? நீ திருட்டுத் தனமா நடந்து வந்திண்டிருந்ததை நான் பார்த்து விட்டேன். அப்பாவை எழுப்பிவிடலாமென்று பார்த்தேன். ஆனா, பாவம்! நீ எவ்வளவு பெரிய கஷ்டத்தில் வந்திருக்கிறே? உன்னைக் காட்டிக் கொடுத்துட்டா அப்புறம் உன் பிள்ளையோ பெண்ணோ பிழைக்காதோல்லியோ?"

பிள்ளையோ பெண்ணோ பிழைக்காதா? அவள் என்ன சொல்கிறாள்?

"எனக்குத் தெரியாதுன்னுட்டுப் பார்த்தாயா?" என்று அரும்பு உதிர்ந்தாற் போலச் சிரிக்கிறாள். "உன் குழந்தை படுத்த படுக்கையாகக் கிடக்கிறது. நீ டாக்டரை அழைச்சிண்டு போய்க் காட்டினே. அவர் ஒரு மருந்து வாங்கி வரும்படி சீட்டு எழுதிக் கொடுத்தார். நீ பரம ஏழை. மருந்து வாங்கப் பணத்துக்கு எங்கே போவே? அதனாலே நீ திருடணு வந்திருக்கிறே! உம் இல்லியா?" என்று கேட்டாள்.

ஜம்புலிங்கத்தின் நெஞ்சுகள் திரண்டிருந்த அழுக்கு வேர்வையாய் உடம்பில் பரவுகிறது.

"என்ன பேசல்லே? நீ ஒண்ணுமே சொல்ல முடியாது. நான் படிச்ச கதையிலே அப்படித்தான் வருகிறது!"

கதை......

தன் போக்கியத்தனத்திலிருந்து முழுமையாக நழுவி விட்ட ஜம்புலிங்கத்தைக் காப்பாற்றித்தானிட்டது அந்தக் கதை. "ஆமா, குழந்தே!....." முதல் தடவையாகப் பேசுகிறான். குரல் தழுதழுக்கிறான். அந்தக் கதையின் மூலம் குழந்தை ஏமாறத் தயாராகி விட்டது புரிந்திருக்கிறது. அவன் தப்புவதற்கு இன்னும் சரியான ஏமாற்றச் சூழ்நிலையை உருவாக்க வேண்டாமா? குலுங்கிக் குலுங்கி அழுகிறான்.

"ஐயோ, பாவம்! தப்புச் செய்ய வந்ததை உணர்ந்து விட்ட நீ எவ்வளவு நல்லவன்.? இந்தப் பங்களாவிலே இருக்கிறவாளெல்லாம் உன்னை இப்போ பார்த்தாளானா, மன்னிக்க மாட்டா. உன்னைப் போலீஸிலே பிடிச்சுக் குடுத்திடுவா!"

"போலீஸ்....." இந்தப் பத்து வருஷ காலமாக அவன் போலீஸிடம் பிடிபட்டதில்லை. அந்தத் தைரியமே அவனை இந்தத் தொழிலில் வைக்கியது.

"நீ போலீஸுக்குப் போயிட்டா உன் குழந்தை எப்படிப் பிழைக்கும்? அப்படியே பிழைச்சாலும் அதுக்குத் திருடனோட குழந்தை என்கிற அபவாதத்தைத்தான் தேடிக் கொடுக்கப் போறியா?"



கட்டை ஆலங்குளத்தில் ஒரு சின்னஞ் சிறு குடிசையில் ஏக்கம் கலந்த மருட்சியுடன்வலைய வரும் இரண்டு குழந்தைகள், தம் பிஞ்சுக்கரத்தால் அவன் இதய நரம்புகளை வருடுகின்றன.

அந்தக் குழந்தைகளுக்கு அவன் அளிக்கப் போகும் பரிசு, 'திருடனின் குழந்தைகள்' என்ற அபவாதம் தானா?

கடலை விளையும் கொல்லைக் காட்டை மாரியப்ப நாடார் ஏலத்தில் எடுத்துக் கொண்டு விட்டாலும் பட்டாவில் இன்னும் ஐந்து குறுக்கம் பாக்கி இருக்கிறதே! முடிச்சு அவிழ்க்கிற 'சோம்பேறித்தனத்தை விட்டு விட்டு, அவன் வியர்வையைச் சிந்தத் தயாராக இருந்தால், அந்த வியர்வை நெல்லும், கேழ்வரகும், கடலையும், ஆமணக்குமாக அவன் களஞ்சியத்தை நிறைத்து விடுமே! இத்தனை நாட்களாக அவன் இயற்கை அளித்த மண்ணைக் கிளறாமல், நெஞ்சிலே மண்ணைக் கொட்டிக் கையாலே இறுக்கி இருக்கிறானே? "திருடா!" அந்தக் குழந்தை ஜம்புலிங்கத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டது.

"நான் திருடன் இல்லே, குழந்தே!" அந்தக் கணத்திலிருந்து அவன் குரல் எழும்பியது.


"ஆமா, நீ திருடன் இல்லே. நல்லவன். உன் குழந்தை எப்படியாவது பிழைக்கணும் இல்லையா? சுவாமிக்காக நான் உண்டியலிலே பணம் சேர்த்துண்டு வர்றேன். அதை எடுத்திண்டு வந்து உன்னண்டை கொடுக்கிறேன். உடனே போய் நீ மருந்து வாங்கிக் குழந்தைக்குக் கொடுத்திடு. என்ன?"

"நீ இனிமே எதையும் கொடுக்க வேண்டியதில்லே. எப்பவோ நீ என் ஜன்மத்துக்கும் போதுமானதைக் கொடுத்திட்டே! நான் வர்றேன் குழந்தே!" என்ற ஜம்புலிங்கத்தின் கை தலைக்கு மேல் உயர்ந்தது.

ஒரு மின்னலின் நீண்ட ஒளித் துணுக்கில், ஜம்புலிங்கம் மாடியிலிருந்து வெளியே இறங்கிப் போய்க் கொண்டிருந்தான்.

'இனி இந்த நல்லவனின் குழந்தை எப்படிப் பிழைக்கும்?' என்ற கவலையில் ஆழ்ந்தாள் அந்தப் பத்து வயதுப் பாட்டி!

நீதியின் துறவு



துறவிக்கும் மரண பயம் தோன்றுமா?

ஞானத்தின் ஒளிக்கதிர்போல் குறுக்குத்துறை மண்டபத்தில் மௌனமாகப் படுத்திருந்த பரமானந்த சுவாமிகளின் காலடியில் உட்கார்ந்திருந்த இளந் துறவி குமரப்பர், தம் நெஞ்சில் எழுந்த இந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முடியாமல் திகைத்துப் போயிருந்தார். பரமானந்தரின் வாழ்க்கையோடு ஒட்டி நடக்கத் தொடங்கி ஒரு மாத காலமாக அவர் அறியாத புது அனுபவம் அது.

ஒரு மாதந்தான் ஆகியிருக்கும். குறுக்குத்துறை மண்டபத்துக்குள் இருக்க இடம் தேடிக் காலெடுத்து வைத்த குமரப்பரும் அங்கு ஏற்கெனவே தங்கியிருந்த பரமானந்தரும் சந்தித்ததிலிருந்து அந்த உறவு தொடர்ந்திருந்தது. அந்த இரு துறவிகளிடையேயும் தோன்றிய அந்த உறவு ஆரம்ப முதலே ஓர் ஆத்மார்த்தப் பிடிப்பாக மலர்ந்திருந்தது. எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த சுவாமிகளிடம் நாற்பது வயதே ஆகியிருக்கும் குமரப்பர் தம்மை அவருக்குச் சிஷ்யனாக அர்ப்பணித்துக் கொண்டிருந்தது வெறும் வயது வித்தியாசத்தினால் மட்டுமல்ல; சுவாமிகளின் ஞானப் பொலிவு அவரை அப்படியொரு வேகத்துடன் ஆகர்ஷித்திருந்தது. இருந்தும் அன்று முதல் இந்நாள் வரை பரமானந்தரின் வேதாந்த ஒளியை உணரத்தான் முடிந்ததே தவிர, அவருடன் நெருங்கி உறவாடும் மனத்திண்மை குமரப்பருக்கு ஏற்படவில்லை. அவ்வளவுக்குப் பரமானந்தரைச் சாமான்யர்களால் நெருங்க முடியாதவராகக் கருதி அவர் முன் தம்மை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திப் பழகி வந்தார் அவர். எனவே சுவாமிகளின் ஞானத் தோற்றத்தைக் கண்டறிந்த அளவு அவருடைய மனிதத் தோற்றத்தையும் அதன் ஆசாபாசங்களையும் குமரப்பர் அறிந்தவரல்லர். அன்றுதான் முதன் முறையாக 'அந்த வேதாந்திக்குள்ளும் மனிதன் தான் இருக்கிறானோ' என்ற ஐயம் குமரப்பர் மனத்தில் தோன்றுமளவு பரமானந்தரிடம் மாறுதல்கள் காணப்பட்டன.

தினந்தோறும் காலையில் குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமியைச் சேவித்துவிட்டுத் திரும்பும்போது புத்தொளி பெற்றது போல் துலங்கும் பரமானந்தரின் முகம் அன்று சஞ்சலத்துக்குட்பட்டிருந்தது. சிறிது நேரம் அமைதியாக மண்டபத் தூணில் சாய்ந்திருந்தார் சுவாமிகள். பின் அசதியுடன் படுத்தவர் வெகு நேரம் வரையில் மண்டப முகட்டில் தம் பார்வையைப் பதித்திருந்தார். புதிருடன் அவர் அருகில் அமர்ந்திருந்தார் குமரப்பர்.



இடைரென்று "குமரப்பா! இன்று நான் உன்னோடிருக்கிறேன். நாளைக்கு இறைவனடியில் இருப்பேன். அவன் என்னை அழைத்து விட்டான்!" என்றார்.

மரணம்!—குமரப்பர் உடல் குலுங்கியது. 'மரணம் என்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத அம்சம். அதுவும் ஆத்மாவுக்கு விடுதலையளிக்கும் இறைவனுடைய அழைப்பு' என்ற வேதாந்தத்தில் மனசைச் சமாதானப் படுத்தப் பக்குவப்பட்டவர்தான் குமரப்பர். ஆனால் அதைப் பிரத்யட்சமாகத் தம் வழித் துணையின் பிரிவு என்ற ரூபத்தில் சந்திக்கும் வேளை வந்தபோது மனத்தை உறுதிப்படுத்துவது அவருக்கு அவ்வளவு எளிதாக இல்லை. இருந்தும் தம் பலவீனத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் கண்கலங்கச் சுவாமிகளையே நோக்கிக் கொண்டிருந்தார். ஆனால் அதே சஞ்சலத்தைப் பரமானந்தரின் முகத்திலும் கண்ட போதுதான் குமரப்பருக்கு வியப்பாக இருந்தது. சாமான்ய மக்களின் பேதைமை, மரணத்தைப் பற்றிய பயம் அந்த ஞானியையும் அலைக்கழிக்கிறதா?

குழம்பிய மனப் பேதங்களால் செயலற்று உட்கார்ந்திருந்தார் குமரப்பர். அச்சமயம் அவர் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்த அதே கேள்வியைப் பரமானந்தரே அவரிடம் கேட்டார்.

"குமரப்பா! துறவிக்கு மரண பயம் ஏற்படுமா?"


தம் மனத்தில் தோன்றியதை உணர்ந்து கொண்டவர் போல் அவர் அப்படிக் கேட்டதும் திடுக்கிட்டார் குமரப்பர்.

"சுவாமி!" என்று மன்னிப்புக் கேட்பது போல் எழுந்த அவர் குரலை உள்ளடக்கித் தொடர்ந்தார் பரமானந்தர்.

"குமரப்பா! நான் மரணத்தின் சமீபத்தில் இருப்பதை நன்றாக உணர்கிறேன். அந்த உணர்ச்சி ஏற்பட்ட விநாடி முதல் என் மனம் சஞ்சலப்படுகிறது. உண்மையில் நான் மரணத்தைக் கண்டு பயப்படுகிறேன். ஒரு உண்மையான துறவி மரணத்தைப் பற்றிப் பயப்பட மாட்டான். ஆனால் நான் பயப்படுகிறேன். காரணம் என்ன தெரியுமா?" என்றார் பரமானந்தர்.

"சுவாமி!" என்று குழம்பினார் இளையவர்.

பரமானந்தரின் குரல் அழுத்தத்துடன் தொடர்ந்தது. "உனக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை இதுதான். எல்லாவற்றையும் துறந்தோ, அல்லது துறப்பதற்காகவோ இந்தத் தவக் கோலத்தை அனுஷ்டிப்பவனே துறவி. அப்படிப்பட்ட துறவிக்கு மரணமும் வாழ்வும் சமமே. ஆனால் நான் எதையும் துறப்பதற்காக இந்தக் கோலத்தைப் பூணவில்லை. என்னால் பெற முடியாமல் இருந்த ஒன்றைப் பெறுவதற்காகவே இந்தத் துறவு விரதத்தை ஏற்றுப் பதினைந்து வருட காலமாக அலைகிறேன். அதைப் பெற வேண்டும் என்ற துடிப்பும் பெற முடியும் என்ற நம்பிக்கையும் அன்று என் மனத்தில் ஒரு சிறு பொறியாக விழுந்தது. அந்தப் பொறி இன்று பெரும் தாகமாக என் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கிறது. ஆனால் இந்த விநாடி வரையில் நான் அதைப் பெறவில்லை. இதோ சில நாழிகைக்குள் என் வாழ்வு முடியப் போகிறது. ஆனால் என் வாழ்வு முடிவதற்குள் நான் பெற்றுவிட வேண்டும் என்று தேடி அலைந்ததைப் பெற முடியாமல் எனது ஐம்பது வருட லௌகிக வாழ்க்கையும் பதினைந்து வருட தவ வாழ்க்கையும் விரயமாகி விட்டன" என்று பரிதவிப்புடன் கூறிய பரமானந்தர் வாக்குத் தவறி நிறுத்தினார். அவர் கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

சிறிது நேரம் அந்த மண்டபத்தைச் சுற்றி யோடும் தாமிரபரணியின் சலசலப்பைத் தவிர அமானுஷ்ய அமைதி நிலவியது.

மீண்டும் எழுந்த பரமானந்தரின் குரலில் ஏக்கமும், அந்த ஏக்கத்திலேயே தேறி நிர்ணயித்த உறுதியும் கலந்திருந்தன. "குமரப்பா! இந்த உலக வாழ்க்கையில் எவனொருவன் துறக்க வேண்டியதை யெல்லாம் துறந்து, பெற வேண்டியதை யெல்லாம் பெற்றுத் தன் வாழ்வுக் கணக்கை நிறைவுபடுத்தி விட்டு மரணத்துக்குத் தன்னை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறானோ அவன்தான் பாக்கியவான். நான் இன்னும் தயாராகவில்லை. என் கணக்கு பாக்கியாக இருக்கிறது. ஆனால் அதற்குள் எனக்குத் தரப்பட்ட கால எல்லை முடிந்து விட்டது. இனி என் வாழ்க்கையை நஷ்டக் கணக்கில் முடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்த நிலையிலும் எனக்கொரு நப்பாசை. குமரப்பா, நான் பெறத் தவறியதை உன்னிடம் சொல்கிறேன். நீயாவது அதைப் பெறும் சந்தர்ப்பம் நேர்ந்தால் அப்பொழுது என் ஆத்மா சாந்தி யடையும்" என்றவர் சில விநாடிகள் மௌனமாக இருந்தார். பின், "அந்தச் சம்பவம் அந்த மனிதனின் வாழ்க்கையில் அவனுடைய சக்தியால் தாங்க முடியாத அளவு பெரும் சோதனையாக அமைந்துவிட்டது" என்று ஆரம்பித்தார்.

அவர் ஒரு நீதிபதி. நீதிபதி என்றால் மனிதன் வகுத்த சட்ட நீதிகளுக்கு மட்டுமல்லாது தர்மத்தின் நீதிகளுக்கும் சேவகனாகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஓர் ஆத்மா என்றுதான் சொல்ல வேண்டும். சட்டத்தின் பிரிவுகளை அமுல் நடத்தும் வெறும் சட்ட அதிகாரி என்ற எல்லைக்குள் அவர் தம்மை என்றும் குறுக்கிக் கொண்டதில்லை. அவருடைய தீர்ப்புக்களில் சட்டத்தின் குரலும் மனித தர்மத்தின் குரலும் சேர்ந்தே ஒலிக்கும். சட்டம் மனிதனைக் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதென்றாலும், அது மனிதனுக்காக, மனிதனின் நன்மைக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது என்ற மனிதாபிமானச் சிந்தனையில் செயல்பட்டு வந்தார். சட்டமும் மனிதாபிமானமும் இணைந்து செயலாற்றுவது அப்படியொன்றும் சிரமமானது அல்ல என்பது அவர் கருத்து. கிட்டத்தட்ட இருபது வருடங்களாக இப்படி நடந்து வந்த அந்த உன்னத சேவை அன்றொரு நாள் நடந்த அவர் வாழ்வில் குறுக்கிட்ட அந்தச் சம்பவத்தால் ஸ்தம்பித்து விட்டது.

அன்று மாலை ஆறு மணியிருக்கும். தம் வழக்கப்படி வரையறுத்திருந்த ஆற்றங்கரையில் காற்றோட்டத்துக்காகத் தனிமையில் உலவிக் கொண்டிருந்தார். ஆற்றின் கரையில் அடர்த்தியான நொச்சிக் காடு. இருட்டி விட்டதை உணர்ந்து வீட்டை நோக்கி அவர் திரும்பும் சமயம், திடீரென்று ஒரு பயங்கர அலறல் அவர் காதில் விழுந்தது. திடுக்கிட்டுக் குரல் வந்த திசையை நோக்கினார். அங்கே அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டு அவருடைய இரத்தம் உறைந்து விட்டது.

கொலை! அதுவும் வன்கொலை. "ஐயோ, என்னை விட்டுவிடு, கொல்லாதே. கொல்லாதே!" என்று அலறிக் கொண்டு ஓடிய ஒருவனை இன்னொரு முரடன் நொச்சிப் புதருக்குள் விரட்டிப் பிடித்து அரிவாளால் மூர்க்கத்தனமாக வெட்டினான். அந்தக் கோர வன்முறைக்குள்ளானவன் மறுகணம் கீழே சாய்ந்தான். "தொலைந்தாயா, என்னை என்னென்னு நினைச்சே" என்று கத்திய கொலையாளி, தன் கையில் இருந்த அரிவாளைச் சுழற்றி நடு ஆற்றுக்குள் எறிந்துவிட்டு ஓடி விட்டான்.


ஒரு விநாடிக்குள் அந்தப் பயங்கர வெறிச் செயல் நடந்துவிட்டது. கட்டுக்கடங்கா அதிர்ச்சியால் அவர் உடல் நடுங்கியது. கொலை, கொலை என்று காகிதத்தில் நூற்றுக்கணக்கான முறை அவர் வாசித்துப் பழக்கப்பட்ட ஒரு சம்பவத்துக்கு உண்மையில் இத்தனை கோர உருவமா?

கூச்சலிடக்கூட வாய் எழும்பாமல் அவர் கலவரத்தால் கட்டுண்டு நின்ற விநாடிக்குள் ஒரு மனிதன் பிணமாக மாறி விட்டான். உடம்பெல்லாம் பதறக் கொலை நடந்த இடத்தருகே வந்து பார்த்தார். பார்த்துக் காக்க அங்கே எதுவும் மிச்சமில்லை. அந்தக் குழப்பத்திலும் தமது அடுத்த கடமை அவருக்கு நினைவுக்கு வந்தது. கொலையைக் கண்ணால் கண்டவர் அவர். போலீசுக்குத் தகவல் கொடுக்க வேண்டியது அவர் கடமை. ஆனால் எந்த ஆதாரத்தை வைத்துத் தகவல் கொடுப்பார்? அந்தக் கங்கல் மங்கல் நேரத்தில் கொலையாளியின் உருவ அமைப்பின் சாயலைத் தான் அவர் கண்டிருந்தார். அதுவும் பின்புறத்திலிருந்துதான் அவர் கண்டார். அதை வைத்துக் கொலையாளியைப் பற்றிய எந்தத் தெளிவான அடையாளத்தையும் அவரால் சொல்ல முடியாது. இருந்தாலும் கொலையைப் பற்றித் தெரிவிக்கலாம் என்று அவர் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

நாற்பதாவது வயதில் மனைவியை இழந்து சொந்த வாழ்வில் பத்து வருடகாலமாகத் தனி மரமாக நொந்து வாழ்ந்து வந்த அந்தப் பலவீன உடல் அந்தப் பயங்கர அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் சோர்ந்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்தார்.

ஆனால் அவர் ஸ்டேஷனருகே செல்லு முன், ஊரெங்கும் ஒரே பரபரப்பாயிருந்தது. எப்படித்தான் தெரிய வந்ததோ! 'ஆற்றோரத்தில் கொலையாம்' —என்று எங்கும் பேச்சாகி விட்டது. போலீஸ் 'வான்கள்' அங்குமிங்கும் பறந்தன.

அவர் ஒருகணம் நின்று யோசித்தார். அவருடைய உதவியின்றியே போலீசுக்குத் தகவல் கிடைத்துவிட்டது. இனிமேல் அவர் தெரிவிப்பதானால் கொலையாளியைப் பற்றித் தான் தெரிவிக்க வேண்டும். அவனைப் பற்றித் தமக்குத் தெரிந்த தெளிவில்லாத அடையாளங்களை அவர்களுக்குச் சொல்லி அதன் காரணமாக ஒரே உருவ அமைப்புள்ள நிரபராதி யாராவது அகப்பட நேர்ந்து விட்டால் என்ன செய்வது? கடையில், வீண் குழப்பத்தை உண்டாக்காமல் தாம் ஒதுங்கியிருந்து நீதியைத் தன் போக்கில் இயங்க விடுவதே நியாயமானதென்று அவர் உள்ளுணர்வு எச்சரிக்கவே பேசாமல் திரும்பி விட்டார்,


குணத்தில் சிறந்தவை
ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலே
ஸ்பெஷல் தயாரிப்பு
13 & 15 ந. பை.
பிளாஸ்டிக் பொட்டலங்கள்


K C P
அனைவரும்
விரும்புவது
கிருஷ்ணு மிட்டாய்கள்.
கிருஷ்ணு மிட்டாய்கள் சுகாதார முறைப்படி கைபடாமல் கரும்புச் சாற்றிலிருந்து தயார் செய்யப் பட்டது. குழந்தைகளுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.
குழந்தைகள் விரும்புவது
பெரியவர்கள் புகழ்வது
கிருஷ்ணு மிட்டாய்களே.
Krishna
SWEETS
தயாரிப்பவர்கள்:
தி கே. ஸி. பி. லிட்.
38, மவுண்ட் ரோடு, சென்னை-6


கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
எஸ். பி. எஸ். ஜெயம் அண் கோ.
மதுரை.

மறு நாளுக்குள் அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து எவ்வளவோ காரியங்கள் துரிதமாக நடந்து விட்டன என்று பத்திரிகை மூலம் செய்தி வெளியாகியது. ஒரே இரவுக்குள் போலீசார் கொலையைப் பற்றித் துப்பறிந்து குற்றவாளியையும் கண்டுபிடித்திருந்தனர். அந்தச் சம்பவத்தை நேரில் கண்ட அதிர்ச்சியிலிருந்து பூரணமாக மீளா விட்டாலும், போலீசாரின் துரித நடவடிக்கை அவருக்கு ஓரளவு நிம்மதியளித்தது.

பொதுமக்களிடம் பத்திரிகை வாயிலாக ஏற்பட்ட பரபரப்பின் காரணமாகவோ என்னவோ போலீசார் வெகு சுறுசுறுப்புடன் சம்பவம் நடந்த நான்காம் நாளே கோர்ட்டில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து விட்டனர்.

அன்று விசாரணை. விசாரணை தொடங்கியதும் குற்றவாளி கோர்ட்டுக்கு அழைத்து வரப் பட்டான். குற்றவாளியை ஏறெடுத்துப் பார்த்த நீதிபதி, இரத்த ஓட்டமே நின்று விட்டது போல் ஸ்தம்பித்து நின்று விட்டார். குற்றம் சாட்டப் பட்டுக் கூண்டில் நின்றவன், அன்று அவர் கண் முன்னால் கொலை செய்தவன் அல்ல!

இருட்டில் கொலையாளியின் உருவ அமைப்பு முழுதும் காண முடியா விட்டாலும் அவன் உருவ அமைப்பு அவருக்கு நன்றாக நினைவு இருந்தது. கரிய ஸ்தூல சரீரம் கொண்ட அந்த நடுத்தர வயது முரட்டு உருவம் எங்கே! அவர் முன் நிற்கும் ஒல்லியான இளைஞன் எங்கே?

ஒருவேளை இது வேறு வழக்காக இருக்குமோ என்ற எண்ணத்துடன் போலீசாருடன் சென்று ஸ்தலத்தைப் பார்வையிட்டார் நீதிபதி. அதே இடம்! கொலை செய்யப்பட்டவன் அதே மனிதன்! ஆனால் குற்றம் சாட்டப்பட்டு நிற்பவன் மட்டும் அவனில்லை; நிச்சயமாக இல்லை!



அவர் மனம் துடித்தது. நீதி மயங்கிவிட்டதா? தம் நெஞ்சில் பற்றியெரிந்த தீயின் வெப்பத்தைத் தாங்கவும் முடியாமல், அதை வெளியே வீசியெறியவும் முடியாமல் அவர் வெம்பித் தவித்தார்.

அந்த நிலையிலும் தம் மனக் குழப்பத்தை வெளிக் காட்டாமல் அவரால் அந்த நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்திருக்க முடிந்ததென்றால் அதற்கு, அவர் நெஞ்சின் அடித்தளத்தில் துளிர்விட்டிருந்த ஒரு நம்பிக்கைதான் காரணம். 'சந்தர்ப்பவசத்தால் உண்மை வெளிப்படாமல் போய் விட்டாலும் பொய் வெற்றி பெறுமலாவது இருந்து விடாதா!' என்ற நம்பிக்கை இன்னும் அவருக்கு மிஞ்சியிருந்தது.

நீதியை விநியோகிக்கும் பிரதிநிதியின் மனக் குமுறலுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் 'நீதியை நிலைநாட்டும்' வேலை தொடங்கிவிட்டது.

குற்றம் சாட்டல், சாட்சி விசாரணை, வக்கீல்களின் குறுக்கு விசாரணை என்று சம்பிரதாயப்படி வழக்கு விசாரணை நடவடிக்கைகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன.

விசாரணை நடக்க நடக்க அவருடைய நம்பிக்கையும் சிறிது சிறிதாகத் தளர்ந்தது. காரணம், வழக்கு ஒவ்வொரு திருப்பத்திலும் புதிய பலம் பெற்று வலுவாகிக் கொண்டே வந்தது.

குற்றம் சாட்டப்பட்டு நிற்பவனுக்கும் கொலையுண்டவனுக்கும் ஏற்கனவே பகையுண்டு என்றும், ஒரு நாள் டீக்கடை வாசலில் வைத்து, 'உன்னைத் தொலைத்து விட்டுத்தான் மறுவேலை!' என்று குற்றவாளி சபதம் செய்ததைத் தம் காதால் கேட்டதாக ஒரு சாட்சி வாக்குமூலம் கொடுத்தார். கொலைநடந்த அன்றுமாலையில் அரிவாளும் கையுமாக அவன் ஆற்றுப் பக்கம் போனதைத் தம் கண்ணால் பார்த்ததாக இன்னொரு சாட்சி. கொலை செய்துவிட்டு ஓடி வந்தவனை அரிவாளும் கையுமாகக் கண்டதாக ஒரு சாட்சி. ஆமாம், அவர் கண் காண நடு ஆற்றில் வீசி யெறியப் பட்ட அரிவாளும் கையுமாகத்தான் கொலையாளி பிடிபட்டானாம். ஏன், முக்கிய தடயமாக அந்த அரிவாளே ஒரு சாட்சியாக வைக்கப்பட்டிருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவன் சார்பிலும் வழக்காட அவன் உறவினர்கள் ஒரு வக்கீலை நியமிக்கத்தான் செய்திருந்தார்கள். ஆனால் நீதிபதியின் மனக் கண்முன் சத்தியம் அலைக்கழிந்து தடுமாறியதைப் போல் அந்த வக்கீலும் தம் கட்சிக்காரருக்குச் சாதகமாக நியாயத்தைத் திரட்ட முடியாமல் திணறினார். அவருடைய கட்சிக்காரனாகிய 'குற்றவாளி'யிடமிருந்தே அவருக்கு எந்த வித உதவியும் கிடைக்கவில்லை. அவன் எந்தக் குற்றச்சாட்டையும் மறுக்காமல் பித்துப்பிடித்தவன் போல் நின்றான்.

விசாரணை முடிந்தது. எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் வழக்கு வெகு திறமையாக நிரூபிக்கப்பட்டு விட்டது. பிராசிக்யூஷன் தரப்பு வக்கீல் வழக்கை அணு அணுவாக அலசி ஒவ்வொரு நிலையையும் ஆணித்தரமாக உறுதிப்படுத்தி, குற்றவாளியின் மூர்க்கத்தனமான வெறிச் செயலுக்குத்

தகுந்த தண்டனையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வாதத்தை முடித்தார்.

காய்ந்த சருகாக உலர்ந்து போன நெஞ்சத்துடன் அந்தக் 'கொலையாளி'யை நோக்கினார் நீதிபதி. கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிய அவன் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். மனித நீதி பொய்த்து விட்டதென்று தெய்வத்திடம் முறையிடுகிறானா? பலி ஆட்டைப் போல் நின்று கொண்டிருந்த அவனைக் காணக்கூடக் கூசித் தலை குனிந்தார் நீதிபதி.

வழக்கு நீதிபதியின் தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டது. சாதாரண சட்ட ஞானமுள்ளவனும் வழக்கின் போக்கைக் கவனித்திருந்தால் ஓரளவு தீர்ப்பைப் பற்றி ஊகித்துவிட முடியும். இந்த நிலையில் ஜூரிகள் ஒருமிக்க அவனைக் குற்றவாளிதான் என்று அபிப்பிராயம் தெரிவித்ததில் வியப்பில்லை. ஆனால் நீதிபதி ஸ்தானத்திலிருந்த அந்த மனிதரின் ஆத்மா?

அன்றிரவு படுக்கையில் சாய்ந்த நீதிபதி என்ற மனிதர் மனம் கசிந்து கண்ணீர் விட்டு அழுதார். தம் ஐம்பது வருட வாழ்க்கையில் ஏற்பட்ட . எத்தனையோ சொந்த நஷ்டங்களுக்காகத் தம் விழிக்கடையில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூடச் சிந்தியறியாத அந்த மனோ வைராக்கியசாலி, சத்தியத்தின் கால் இடறி விட்டதற்காகக் குமுறிக் குமுறி அழுதார். கோர்ட்டில் அந்த நிரபராதி வடித்த ஒவ்வொரு துளி கண்ணீருக்கும் தாம் உட்படச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தெய்வத்தின் முன் பதில் சொல்லியாக வேண்டும் என்று அவருடைய ஆத்மா புலம்பியது. மறுநாள் சட்டத்தின் பெயரால் அந்த நிரபராதியைக் கொலையாளி என்று வர்ணித்துக் கொடிய தண்டனையை அவர் கொடுத்தாக வேண்டும்....

இதுவரை அமைதியாகக் கூறிவந்த பரமானந்தர் சட்டென்று உணர்ச்சி வசப்பட்டவராக, "குமரப்பா! அன்று அந்தச் சந்தர்ப்பத்தில் நீதிபதி ஸ்தானத்தில் இந்தப் பரமானந்தன் இருந்தது போல் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?" என்று கேட்டார். மறுகணம் குமரப்பாவின் பதிலை எதிர்பார்க்காமலே தொடர்ந்தார்: "குமரப்பா, உன்னால் பதில் சொல்ல முடியாது. நீ என்னைப் போல் அந்தப் பயங்கரச் சம்பவத்தையும் பார்க்கவில்லை; அந்த அப்பாவியின் கண்ணீரையும் பார்க்கவில்லை. நெஞ்சைக் கட்டெரிக்கும் அந்தக் கொடுமையை அனுபவித்த என் ஒருவனைத் தவிர வேறு யாராலும் அதை உணர முடியாது. குமரப்பா, என் வாழ்வில் அன்றுதான் முதன் முறையாக ஆண்டவன் எனக்கு ஏன் இதயத்தைக் கொடுத்தான் என்று அழுதேன். மனிதன் என் கையில் சட்டத்தைக் கொடுத்து, 'கடமையைச் செய்' என்றான். கடவுள் என்னிடம் ஆத்மாவைக் கொடுத்து, 'சத்தியத்தைக் கடைப்பிடி' என்றார். நான் எதைச் செய்வேன்?

"அன்றிரவு முழுதும் போராடிக் கடைசியில் அந்த முடிவுக்குத்தான் வந்தேன். சரியோ, தவறோ, அதைத் தவிர வேறெதையும் செய்ய எனக்குத் தோன்றவில்லை.

"மறுநாள், 'சில சந்தர்ப்பங்களாலும் மன நிலை சரியில்லாததாலும் நான் என் பதவியை ராஜிநாமா செய்கிறேன். நான் நேற்று வரை விசாரித்த வழக்குகளைப் பற்றிய குறிப்புக்களைத் தக்க மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன்' என்ற ராஜிநாமாக் கடிதத்துடன் என் உத்தியோகத்தையும், 'என் ஆஸ்திகள் எனக்குத் துணையாயிருந்து வந்த வேலைக்காரனுக்குச் சேர வேண்டியது' என்ற உயிலுடன் வாழ்க்கையையும் துறந்துவிட்டுச் சாந்தி தேடி வெளியேறினேன்.

"அதற்குப் பின் சில நாட்கள் கழித்து அந்தக் கொலையாளிக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறப்பட்டதாகக் கேள்விப்பட்டுத் துடிதுடித்தேன்.

"குமரப்பா! சட்ட நீதியில் கசந்து போன நான் அன்று முதல் இந்தப் பதினைந்து வருடகாலமாக அந்தச் சம்பவத்தின் கொடுமையை நெஞ்சில் சுமந்து கொண்டு, இறைவனின் நீதியைக் கண்டுபிடிப்பதற்காக அலைந்து திரிந்தேன். ஆனால் மனிதனின் நீதியைப் போல் ஆண்டவனுடைய நீதியும் என் கண்களுக்குப் புலப்படாமல் துறவு பூண்டுவிட்டது. அதைக் காண வேண்டும் என்று நான் கண்ட தவக் கோலம் விரயமடைந்து விட்டது. அந்தத் தோல்வியுடன் மரணத்தைச் சந்திக்கத் திராணியில்

தீபாவளி யை பின்னி

துணிகளாலான உடையணிந்து கொண்டாடுங்கள்

குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் பொருத்தமானதொரு
பின்னி துணி இருக்கிறது.



ஹுனுவா மற்றும் பலதரப்பட்ட ஸூட் துணிகள் — பின்னியின் புதிய 'சுருங்காத்தன்மை' பக்குவத்தில் தயாரானவை.



பியஸ்டா: 'சுருங்காத் தன்மை' யுள்ள வசீகரமான பாப்லின், எல்லா வயதுப் பெண்டிருக்கும் உகந்தது. (ஆண்களுக்குக் கூட, புஷ்ஷர்ட்டுக்கு)

நீங்கள் கைத்தறித் துணிகளை விரும்பினால், பின்னி மேற்பார்வையில் தயாராகி அவர்களால் விற்பனை செய்யப்படும் பின்டெக்ஸ் கைத்தறித்துணிகள் இருக்கின்றன—வேஷ்டிகள்—புடவைகள்—ஷர்ட்டிங்குகள்—திரைகளுக்கும் பர்னிசர் உறைகளுக்குமான துணிகள் — படுக்கை விரிப்புகள் — தலையணை உறைகள்—டவல்கள்.

QUALITY FABRICS

BINNY & CO. MADRAS LTD

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளையும் பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளையும் இந்த அடையாளம் காணும் அனுமதி பெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பின்னி

— துணி உலகிலே தனிப் புகழ்பெற்ற பெயர்

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட் ஸ்தாபனத்தின் மில்கள்

JWT/BY/2009a

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந பை	ஆறு மாதம் ரூ. ந பை
இந்தியா இலங்கை	15—00	7—50
பர்மா மலேயா வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி. பி. பி. கிடையாது.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10

வாமல் கலங்குகிறேன்'' என்று விரக்தியுடன் கூறிய பரமானந்தர் தம் வார்த்தைகளை முடிக்கவில்லை; அதற்குள், '''சுவாமி! தாங்கள் தோல்வியடையவில்லை. நீதியும் பொய்க்கவில்லை!'' என்று பரவசத்துடன் கூறினார் குமரப்பர்.

''குமரப்பா, என்ன சொல்கிறாய்?''

''சுவாமி! என்னைத் தெரியவில்லையா, உங்களுக்கு?''

எதிரே இருந்த குமரப்பரின் தாடியையும் இலேசாகப் படரத் தொடங்கியிருந்த முதுமையையும் ஊடுருவிப் பார்த்தபோது அழிமுகமான ஒரு முகத்தின் சாயலை முதன்முறையாகக் கண்டார் பரமானந்தர்.

''நான்தான் அன்று உங்கள் முன் குற்றவாளியாக நின்றவன். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைக்குச் சென்றவன், நன்னடத்தைக்காகப் பதினைந்து வருடத்திலேயே விடுதலையாகி விட்டேன்'' என்றார் குமரப்பர்.

''நீயா?'' என்றார் பரமானந்தர் அதிர்ச்சியுடன். ''குமரப்பா! நிரபராதியான உன்னை நீதி தன் மயக்கத்தில் தவறாகத் தண்டித்து விடவில்லையா?'' என்றார் பரமானந்தர்.

''சுவாமி! நீதி திசைமாறிவிடவில்லை. நான்தான் அதன் திசையை மாற்றி விட்டேன். அதுவும் சட்டத்தின் பார்வையைத் தான் என்னால் மாற்ற முடிந்ததே தவிர நீதியை என்னால் ஏமாற்ற முடியவில்லை. இன்று துறவியாகவும் இன்று நிரபராதியாகவும் தாங்கள் அறிந்திருந்த நான் உண்மையில் கொலை கொள்ளை செய்து மிருகத்தனமாக வாழ்க்கை நடத்தி வந்த பாதகன். அன்று தாங்கள் கண்ட கொலை நான் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் அந்த ஆற்றங்கரையில் நான் இன்னொரு கொலையைச் செய்திருந்தேன். ஆற்றோரமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு வழிப்போக்கனைப் பணத்துக்காகக் கொலை செய்து துப்புத் தெரியாமல் இருப்பதற்காக ஆற்று வெள்ளத்தில் இழுத்து விட்டுவிட்டுத் திரும்பினேன். அந்தச் சமயம் தாங்கள் கண்ட கொலையைப் பற்றி நகருக்குள் பரபரப்பாகி விட்டது. சில சந்தர்ப்ப சாட்சியங்களைக் கொண்டு போலீசார் என்னைக் கைது செய்து விசாரித்தார்கள். 'ஆற்றோரக் கொலை' என்றதும் நான் உண்மையில் செய்த கொலைதான் அது என்று எண்ணினேன். அந்த எண்ணத்திலேயே அப்போது இருந்த மனப் பேதலிப்பில் நான்தான் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டு விட்டேன். மறு நாள்தான் நான் செய்த கொலை வேறு, பதிவு செய்யப்பட்டிருக்கும் வழக்கு வேறு என்று தெரிய வந்தது. ஏற்கனவே நான் மனம் குழம்பியிருந்தேன். அதோடு என் முந்திய வாக்குமூலத்தை மறுத்தால், நான் உண்மையில் செய்த கொலையும் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு கொலைகளுக்கும் நானே பொறுப்பாளியாக்கப்பட்டு விடுவேனோ எனப் பயந்தேன். எனக்கு எதிராகச் சந்தர்ப்பச் சாட்சியங்கள் அவ்வளவு பலமாக இருந்தன. அதனால் எதையும் வெளிக்காட்டாமல் முதலில் கொடுத்த வாக்குமூலப்படியே யாரோ செய்த குற்றத்தை நானே ஒப்புக் கொண்டேன். அதற்குக் கிடைத்த தண்டனையை நான் உண்மையில் செய்த குற்றத்துக்கு ஆண்டவன் கொடுத்த தண்டனையாகவே எண்ணி ஏற்று அனுபவித்தேன். பதினைந்து வருடச் சிறை வாழ்வில் ஒவ்வொரு விநாடியும், நான் சாமர்த்தியமாக மறைத்த குற்றத்துக்கும் ஆண்டவன் தன் நீதியை மறைமுகமாக நிலைநாட்டிவிட்ட அற்புதத்தை எண்ணியும் உருகினேன். அந்தச் சிந்தனைதான் என்னை மனிதனாக்கி, என் பாவ வாழ்க்கைக்கும் பிராயச்சித்தமாக இறைவன் தொண்டில் என்னை அர்ப்பணிக்கச் செய்து விட்டது. சுவாமி, நீதி இறைவனுடைய அம்சம். அதை நிறைவேற்றும் பொறுப்பேற்ற மனிதர்களை வேண்டுமானால் மயங்க வைக்கலாம்; ஆனால் நீதியை மயங்க வைக்க முடியாது'' என்றார் குமரப்பர்.

பரமானந்தரின் முகத்தில் புதிய ஒளி பரவியது. ''உண்மைதான், குமரப்பா! நான்தான் என் குறுகிய அறிவால் சத்தியத்தின் தோற்றத்தைக் காண முடியாமல் இத்தனை காலமும் மயக்கத்திலிருந்து விட்டேன். அன்று என் கண்முன் அந்தப் பாதகத்தைச் செய்தவன்கூட அன்றில்லாவிட்டாலும் இன்னொருநாள் நீதியின் தீர்ப்புக்கு ஆளாகியிருந்திருப்பான். குமரப்பா, நான் பெற வேண்டிய ஞானத்தை உன் மூலம் பெறச் செய்து விட்டான் ஆண்டவன். என் வாழ்க்கைக் கணக்கு நிறைவாகி விட்டது. இப்பொழுது நான் உண்மையான துறவியாகி விட்டேன். இனி எனக்கு மரணத்தைப் பற்றிக் கவலை இல்லை'' என்று ஆனந்தப் பெருக்குடன் கூறினார் பரமானந்தர். அவர் கண்கள் பளிங்கைப் போல் சுடர் வீசின. ஜீவன் அடங்கிய பின்னும் அச் சுடரொளி குன்றவேயில்லை!

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



REGISTERED No. M. 4332
Registered as a Newspaper in Ceylon